DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1400
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday February 3, 2023

# Anita Anand Canada's National Defence Minister was honored with the 'Service Excellence Award' at 16th Annual Tamil Heritage Month Celebration




Today, The Hon. Anita Anand, Canada's National Defence Minister was honored with the Service Excellence Award at 16th Annual Tamil Heritage Month Celebrations in Markham. This event was hosted by Canadian Tamil Congress.

## தேசிய பாதுகாப்பு அமைச்சர் அனிற்றா ஆனந்த், தமிழர் பேரவை நடத்திய தமிழர் மரபுரிமை மாத விழாவில், உயர் சேவைகள் விருது வழங்கிக் கௌரவம்

கனடாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் கௌரவ அனிற்றா ஆனந்த் அவர்கள் கடந்த சனிக்கிழமையன்று மார்க்கம் நகரில் கனடிய தமிழர் பேரவை நடத்திய 16வது தமிழர் மரபுரிமை மாத விழாவின் போது. உயர் சேவைகள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார். அவர் தனது உரையில் தமிழ்க் கனேடியர்கள் அரசியல் மற்றும் ஏனைய துறைகளின் இன்னும் சாதனைகள் படைக்க வேண்டும் என வேண்டிக்கொண்டார். அங்கு தனக்குரிய விருதினைப் பெற்றுக் கொண்ட பின்னர் தமிழ் அன்பர்களோடு நின்று புகைப்படங்களும் எடுத்துக் கொண்டார். அவருக்குரிய விருதினை நாதன் வீரசிங்கம் அவர்கள் வழங்குவதைக் காணலாம்.

# 'Tamil Heritage Month' celebration was hosted in Ottawa by Canada's Minister of National Defence Anita Anand and our Member of Parliament Gary Anandasangaree





Conservative Party Leader Pierre Poilievre, Jagmeet Singh, the Leader of the next-level opposition NDP, the Leader of Canadian Green Party Elizabeth May, and members of other parties also graced this Tamil Event with their presence.

## கனடாவின் தலைநகரமான ஒட்டாவாவில் நடைபெற்ற "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்டத்தில் மொன்றியால், ரொறன்ரொ, கிச்சினர, வன்குவர் நகரங்களிலிருந்து தமிழ்க் கனேடியர்கள் சமூகமளித்தனர்

கடந்த திங்கட்கிழமையன்று ஒட்டாவா மாநகர் நோக்கி ரொறன்ரொவிலிருந்து சென்ற அன்பர்களில் உதயன் நண்பர்கள் குழுவினரும் அடங்கியிருந்தனர். மேற்படி "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்ட விழாவை கனடிய அரசாங்கத்தின் சார்பில் கனடிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் திருமதி அனிற்றா ஆனந்த் மற்றும் எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி ஆகியோர் தங்கள் அலுவலக உத்தியோகத்தர்களின் உதவியோடு நடத்தினர்.
கனடாவின் பிரதமர். கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் அடுத்த நிலை எதிர்க்கட்சியான என்டிபி கட்சியின் தலைவர் மற்றும் அடுத்த நிலை எதிர்க்கட்சியான கனடிய பசுமைக் கட்சியின் தலைவர் ஆகியோரும் இன்னும் வெவ்வேறு கட்சிகளின் உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளை மறந்து வருகை தந்து சிறப்பித்தனர்.

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT: Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
ACCOUNTING: Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI


"உங்களுடைய உரிமைகள் எவை என்பது உங்களுக்குத் தெரியுமா?"
>>> preventionlink.ca
எங்கள் தகவல் வழிகாட்டிகளைப் பதிவிறக்கவும்
தொழிலாளர்களின் இழப்பீடு, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு தரநிலைகள் மற்றும் மனித உரிமைகள் குறித்து, தமிழில், இலவசமாக!
www.preventionlink.ca/services/the-lighthouse-initiative
அல்லது
ஒன்டாரியோவின் புதிய பணியாளர் அல்லது நீண்ட கால பணியாளர், எந்தத் துறையிலும்:
>>> ஒவ்வொருவரும் பணியிடத்தில் தங்கள் உரிமைகள் மற்றும் கடமைகளை அறிந்து கொள்ள தகுதியானவர்கள்.
>>> பாதுகாப்பான பணிச்சூழலுக்கு அனைவரும் தகுதியானவர்கள்.
LIGHTHOUSE INITIATIVE
>>> PREVENTION LINK
PREVENTION LINK
ONTARIO FEDERATION OF LABOUR


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Coverall Group Inc
Painting
Bathrooms
Kitchens
Decks
Flooring
Basements
Pot lights
Accent Walls
Contact us
416.706.8160


GTA தாண்டியும் துல்லியமாக ஒலிக்கும்
24 மணி நேர
தமிழ் வானொலி சேவை
தாளம்
FM 88.9 HD3
24 HRS TAMIL RADIO
FM 88.9 HD3
24 HRS TAMIL RADIO SERVING GTA & BEYOND
416-441-4100
thaalamfmhd
Thaalam FM
www.thaalam.fm

உதயன் கதிரோட்டம்

# ஒப்பற்ற தியாகிகளான இலங்கையின் மும் மொழி ஊடகவியலாளர்களுக்கு தொடர்ச்சியாக அஞ்சலி செய்தாக வேண்டும்

உலகெங்கும் நீதிக்கும் நியாயத்திற்குமாக குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்கள் இனம் மொழி நாடு என்ற பேதங்கள் எது நோக்கப்படாமல் பாதகர்களால் கொன்றொழிக்கப்பட்டு வருகின்றார்கள். இவ்வாறாக கொன்று குதறப்படும் ஊடகவியலாளர்களை குறி வைப்பவர்கள் பல்வேறு காரணங்களுக்காகவே தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள்.

இவ்வாறான கொலையாளிகளுக்கு பின்புலமாக பலவேறு சக்திகளும் அதிகார பலம் கொண்டவர்களும் உள்ளார்கள் என்பது வெளிச்சமாக நீதித்துறைக்கும் காவல்துறைக்கும் தெரிந்திருந்தாலும். நியாயங்கள் தோற்கடிக்கப்படுவதும் ஜனநாயகம் இல்லாதொழிக்கப்படுவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமல்ல. அரபு நாடுகள் தென்னாசிய நாடுகளாக பாகிஸ்தான் பங்காளதேஸ் மற்றும் ரஸ்யா சீனா போன்ற நாடுகளிலும் ஊடகவியலாளர் தொடர்ச்சியாக குறி வைக்கப்படுவதும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கூட அவர்களோடு சேர்த்து ஜனநாயக விரோதிகளால் கொல்லப்படுவதும் தொடர்ந்து இடம் பெறும் அநீதிகளாக விளங்குகின்றன. ஆனால் அதிகார வர்க்கத்திற்கும் இந்த கொலைகளுக்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளதால் அந்த அதிகார பீடங்களுக்கு கீழ் இயங்கும் நீதித்துறைகள் வெறும் ஊமைகளாகவே நிலை கொள்கின்றன.

இவ்வார எமது உதயன் உட்பக்கங்கள் ஒன்றில் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் வி. தேவராஜ் எழுதிய கட்டுரை பிரசுரமாகியுள்ளது. சாதாரண-மாக ஒரு சிறுகதையோ அல்லது கவிதையோ பிரசுரமாகின்ற போது, அதை பத்திரிகை ஆசியர்கள் தங்கள் குறிப்பில் "..என்னும் கவிதை அல்லது சிறுகதை இவ்வாரப் பக்கங்களை அலங்கரிக்கின்றன என்று குறிப்பிட்டு விடலாம்.

ஆனால் எமது தொடர் எழுத்தாளர் வி. தேவராஜ் எழுதும் கட்டுரைகள் எமது பத்திரிகைப் பக்கங்களுக்கான 'அலங்காரங்களாக' நாம் பார்க்கவில்லை. அநியாயங்களை அரங்கேற்றிய பேய்கள் உலாவிய நாட்களின் பயங்கரமான பொழுதுகளை எம் கண்கள் முன்பாக காட்சிப்படுத்துகின்றன.

"உண்மைகளை" சாகடிப்பதற்காகவே ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று அன்பர் தேவராஜ் அவர்கள் ஒரு இடத்தில் குறிப்பிடுகின்றார். ஆமாம்! உண்மைகளைத் தேடிய வண்ணம் அல்லது உண்மைகளை அறிந்த நிலையில் தங்கள் ஊடகப் பணியை 'உண்மை'யாக மேற்கொள்ளும் போது அநீதி இழைக்கப்பட்டமைக்கான உண்மைக்காட்சிகளை எழுத்திலோ அன்றி ஒலிவடிவத்திலோ பதிவு செய்கின்ற ஊடகத்துறை தோழர்கள் தெருநாய்களைச் சுட்டுத் தள்ளுவது போன்று குறி வைக்கப்படுகின்றார்கள்.

இலங்கையில் ஊடகத்துறை இன மத மொழி ரீதியாக பிரிந்து கிடக்கின்றது. இந்த பிளவு பிரிவு என்பன இன்று நேற்று உருவாகியதல்ல. சுமார் 100 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் பிளவுகளும் முரண்பாடுகளும் கோலோச்சி வருகின்றன. துரதிஸ்டவசமாக இந்த முரண்பாடுகளும் பிளவுகளும் சாகா வரம் பெற்றதாக ஊடகத்துறையையும் ஊடகவியலாளர்களையும் தின்று கொண்டிருக்கின்றன என்று இன்னுமொரு இடத்தில் குறிப்பிடுகின்றார் எங்கள் தேவராஜ் "இதுபற்றி ஊடகத்துறை சார்ந்தோர் சிந்தித்ததாக இல்லை" என்ற ஆதங்கத்தையும் அவர் தொடர்ச்சியாக பதிவு செய்கின்றார்.

இந்த சிரேஸ்ட பத்திரிகையாளர் தேவராஜ் அவர்கள் தனது பத்திரிகை வாழ்க்கையில் அல்லது அந்த பயணத்தின்போது உண்மையை நேசித்தவர். பணத்தில் புரள வேண்டும் என்பதற்காக பத்திரிகைத்துறையை தேர்ந்தெடுக்கவில்லை.

எப்போது? யாருக்கு? எதற்காக? குரல் கொடுக்கும் வகையில் தனது எழுத்துக்களை வடிக்க வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்போடு தனது பத்திரிகைப் பணியை ஆற்றியவர். ஆனால் தற்போது இவரை தமது நண்பர் என்று குறித்துச் சொல்வதற்கு கூட இலங்கையின் பத்திரிகைத் துறை சார்ந்து தயங்குகின்றார்கள் என்பது அவருக்கு மட்டுமல்ல, எம்போன்ற நண்பர்களுக்கும் நம்பிக்கைகளோடு செயற்படுகின்றவர்களுக்கு மனதை உறுத்தும் பக்கங்களாகவே விளங்குகின்றன.

காட்டில் நேரான மரங்களே முதலில் வெட்டப்படுகின்றன. அதுபோல் ஊடகத்துறையில் நேர்மையானவர்கள் உண்மைக்காக சமூகத்திற்காக ஊடகத்துறையில் சத்திய வேள்விக்குள் வாழத்தலைப்பட்டவர்கள் குருதி வெள்ளத்திற்குள் வேருடன் பிடுங்கிச் சாய்க்கப்படுகின்றனர்.

தமிழ் ஊடகத்துறையில் பலரது உயிர்கள் பறிக்கப்பட "எம்மவர்களும்" காரணமாக இருந்துள்ளார்கள் என்பதையும் இங்கு பதிவு செய்கின்றேன்' என்பதையும் நண்பர் தேவராஜ் குறிப்பிடத் தவறவில்லை. அத்துடன் தமிழ் ஊடகவியலாளர்களை வஞ்சிப்பதில் பழிவாங்குவதில் "மிதவாதத் தமிழ்த் தலைமைகளின்" பங்களிப்பும் அளப்பரியது என்பதையும் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன். என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இவற்றுள் பல விடயங்களில் அவரும் பாதிக்கப்பட்டவர்களில் முக்கியமானவராக இருந்தாலும். தனது சொந்தக் கரங்களால் அவற்றை இன்னும் துணிச்சலாக பதிவு செய்கின்றார்.

ஆனால் அநியாயத்திற்கு துணை நின்ற "மிதவாதத் தமிழ்த் தலைமைகள், தொடர்ந்து அரசியலையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி சுகபோகங்களை அனுபவித்த வண்ணம் இவ்வாறன நேர்மையான ஊடகவியலாளர்களை உதாசீனம் செய்வதும் தேவையானால் "அவரை கவனி" என்று செய்தி அனுப்புவதும் நேற்று மட்டுமல்ல எப்போது இடம்பெறுகின்ற கொடுமைச் சாயங்களில் ஊறவைக்கப்பட்ட அநியாயங்களாகவே தொடர்கின்றன.

ஜனநாயக விரோத குழக்கள் நான்கு திசைகளிலும் கோலோச்சுவதால் உண்மைக்கு மாறாக பேசவோ எழுதவோ மறுப்பவர்களால் நிம்மதியாக வாழ முடியாத சோகம் யுகம் எங்கும் தொடர்கின்றது. அவற்றுள் எங்கள் நண்பர்கள் வாழும் இலங்கையிலும் அச்ச ஒலி கேட்கின்றது.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# அக்கரையில் கடற்படைக்கு காணி வழங்க முடியாது என மறுத்தார்

## - வலி கிழக்கு தவிசாளர் நிரோஷ்



அக்கரை சுற்றலாக் கடற்கரையில் கடற்படைக்கு காணி வழங்கப்படுவதற்கு பிரதேச செயலகம் மேற்கொண்ட முடிவை உடனடியாக ஏற்க முடியாது எனவும் அரச காணிகள் தொடர்பான அதிகாரம் மத்திய அரசில் காணப்படினும் அக் காணி உள்ளூராட்சி மன்றத்தின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்டதாகையால் தனது அனு-மதி இன்றி காணியை வழங்க முடியாது என்பதுடன் இராணுவமயப்படுத்தலை ஏற்க முடியாது என தவிசாளர் தியாகராஜா நிரோ‘ அறிவித்துள்ளார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் ஆட்சியில் உள்ள அக்கறை சுற்றுலா மையத்தில் கடற்படையினருக் காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகம் கடிதம் மூலம் பிரதேச சபைக்கு அறிவித்துள்ளார். அக் கடிதத்தில், இடைக்காடு கிராம அலுவலகர் பிரிவில் உள்ள அக்கறை பிரதேசத்தில் கடற்படை கண்காணிப்பு மையத்தினை நிறுவுவதற்கு கடற்படையினர் பிரதேச செயலகத்திடம் 20 பேர்ச் காணியை கோரியுள்ளனர். அதற்கமைய கடற்படை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தங்களால் சுற்றுலா வலயமாக ஆட்சிப்படுத்தியுள்ள காணியில் இரண்டு பரப்பினை கடற்படை கண்காணிப்பகம் அமைக்க வழங்குவதாகவும் பிரதேச செயலகம் பிரதேச சபைக்கு கடிதம் மூலம் இவ்வாரம் அறிவித்துள்ளது.

இவ் அறிவிப்பினைத் தொடர்ந்து பிரதேச சபையின் நிறைவேற்று அதி-காரியான தவிசாளார், உள்ளூராட்சி மன்றிற்கு உரிய முடிவுகள் தொடர்பாக தவிசாளர் என்ற முறையில் சபையின் நிறைவேற்று அதிகாரியான தனக்கே அதிகாரம் உண்டு என்பதை பிரதேச செயலாளருக்கு சுட்டிக்காட்டியுள்ளதுடன், எது எப்படியிருந்த போதும் படைத்தரப்பிற்கு காணியை வழங்க முடியாது எனவும் தெரிவித்துள்ளடன் பிரதேச செயலகத்தினால் கடற்படையினருக்கு காணி வழங்க எடுக்கப்பட்டுள்ள முடிவை உடனடியாக நிறுத்துமாறும் பிரதேச செயலருக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார். இக் கடிதத்தின் பிர-திகள் ஆளுநர், அரச அதிபர், மாகாண காணி ஆணையர் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது.

குறித்த காணி பிரதேச சபையினால் காலாகாலமாக சுற்றுலாத்துறைக்கு என மில்லியன் கணக்கில் முதலீடு செய்யப்பட்டு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுலா மையம் மற்றும் சிறுவர் பூங்காவை உள்ளடக்கிய கடற்கரையாக மக்கள் பாவனையில் உள்ளது. அவ்வாறான பிரதேசத்தில் பிரதேச சபையின் நிறைவேற்று அதிகாரியான தனக்கோ அல்லது பிரதேச சபைக்கோ எதுவித அறிவிப்புக்களும் இன்றி வெளிப்படைத் தன்மையற்ற முறையில் கிராம சேவையாளர், கடற்படையினர் சென்று இரகசியமாக பார்வையிட்டுள்ளனர். இது அரச நிர்வாகத்திற்கு இருக்கவேண்டிய வெளிப்படைத்தன்மையினையும் சட்டம் ஒழுங்கையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

சுற்றுலா வலயம் ஒன்றை இராணுவ மயமாக்குவது அபிவிருத்திக்கு முரணான விடயமாகும் எனவும் தவிசாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையும் மீறி அதிகாரிகள் நடந்து கொள்வார்கள் ஆயின் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஒரு புறத்தில் அரசாங்கம் படைத்தரப்பினரிடம் உள்ள நிலங்களை விடுவிப்பதாகவும் மறுபுறத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களையே மீறி அவர்களுக்குச் செந்தமான காணியை படைத்தரப்பின் தேவைகளுக்கு அபகரிப்பதாகவும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவ-'சாளர் தியாகராஜா நிரோ‘ தெரிவித்தார்.

வேலைக்கு ஆட்கள் தேவை

தொழிற்சாலை ஒன்றிற்கு
வேலைக்கு ஆட்கள் தேவை.
ஆண், பெண் இருவரும்
விரும்பத்தக்கது.

உடனே அழையுங்கள்:
தொடர்புகளுக்கு Jeya:
(647) 669-2739

KITCHEN HELPER
& LINE COOK WANTED

Part-time kitchen helper,
line cook's, dish washer,
South Indian cook, and Continental
cook wanted.

Call AMAR:
(416) 988-9518

7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "நாட்டின் நீதி அமைச்சர் அரசியல் கைதிகள் விடுதலை பற்றிய நீதி பொறிமுறைகளை அறியாதவராக இருக்கிறார்"

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்




நாட்டின் நீதி அமைச்சராக இருக்கும் ஒருவர் அரசியல் கைதிகள் விடுதலை பற்றிய நீதிப் பொறிமுறைகளை அறியாதவராக இருக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்றது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு திங்கட்கிழமை (30) கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளி நாட்டிலிருந்து வந்த பிரதிநிதி ஒருவருக்கு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச நன்றாக கதை அளந்து இருக்கின்றார். நேற்றைய அரச ஊடகப் பத்திரிகையில் இதை கண்ணுற்றது வேடிக்கையாக இருந்தது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தடையாக ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் இருப்பதாகவும், அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமையால் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாமல் இருப்பதாக கூறியிருப்பது விஷமத்தனமானதும் சிறு பிள்ளைத்தனமானதும்.

நாட்டின் நீதி அமைச்சராக இருக்கும் ஒருவர் அரசியல் கைதிகள் விடுதலை பற்றிய நீதி பொறிமுறைகளை அறியாதவராக இருக்கிறாரா என்ற கேள்வி எழுகின்றது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை பட்டியலிட்டு ஆதாரத்தோடு ஜனாதிபதியிடம் கடந்த ஆவணி மாத சந்திப்பிலே நாங்கள் கை அளித்திருந்தோம். அதன் பிரகாரம் 13 அரசியல் கைதிகள் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதன் அடிப்படையில் மற்ற அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை அரசியல் யாப்பு தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது.

வழக்கு நிலுவையில் இருப்பவர்கள் மாத்திரம் வழக்கை மீள பெற்ற பின்னர் விடுதலை செய்யப்பட முடியும் என்பதையும் சட்டம் சொல்கின்றது.

இது இப்படி இருக்க சிறுபிள்ளைத்தனமான ஒரு புதுக் கதையை நீதி அமைச்சர் அளந்து இருப்பதானது அரசியல் கைதிகள் விடுதலையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பற்றிய சட்ட விவகாரங்களை அவர் அறிந்திருக்கவில்லையோ என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது.

இதுவரை காலமும் விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகள் யாருடைய ஒப்புதலின் பேரில் அதுவும் எந்த தமிழ் அரசியல்வாதிகளின் ஒப்புதல் பேரில் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதை அவர் விளக்குவாரா?

அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைக்கு நாட்டின் நீதி அமைச்சர் என்ற முறையிலே விஜயதாச ராஜபக்ச வழங்கிய பதில் அந்தக் கோரிக்கையை எள்ளி நகையாடி இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

நீதி அமைச்சராக தன்னுடைய கடமையை சரியான முறையில் அவர் செயல்படுத்த வேண்டுமே தவிர சிறுபிள்ளைத்தனமான சாட்டுப்போக்கு களைச் சொல்லி தனது கடமைகளை தவிர்த்துக் கொள்வதை அல்லது சட்டத்திலே இருக்கக்கூடிய ஏற்பாடுகளை மூடி மறைப்பதை நாங்கள் கவலையோடு உற்று நோக்குகிறோம்.

அவருடைய இந்த கருத்தானது ஒட்டுமொத்த நாட்டினுடைய நீதிப் பொறிமுறையின் செயல்பாடு எந்த அளவிற்கு சிறுமைப் படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி உள்ளது.என அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர் (30-01-2023)




# திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் மல்லாவியில் கைது!

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பகுதியில் சனிக்கிழமை (28) மல்லாவி நமணன்குளம் பகுதியில் உள்ள இரு வீடுகளில் நகை மற்றும் பணங்களை களவாடிய குற்றச்சாட்டில் இரு பதின்ம வயது சிறுவர்கள் மல்லாவி பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டு சம்வங்கள் இடம்பெற்ற நாட்களுக்கு அண்மைய நாட்களில் அந்த பகுதிகளில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இருவர் தொடர்பாக மாவட்ட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து குறித்த திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.

இதேவேளை சந்தேக நபர்கள் இருவரும் மல்லாவி பகுதியை சேர்ந்தவர்கள் என்றும், கைதானவர்களில் ஒருவர் கடந்த ஒருவாரத்திற்கு முன்னர் தான் நீதிமன்றினால் தண்டனை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து களவாடப்பட்டதாக கூறப்படும் அணிகலன் மற்றும் பணங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்த மல்லாவி போலீசார், இன்றைய தினம் மாங்குளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்

# மன்னாரில் இருந்து புத்தளம் நோக்கி புறப்பட்ட தனியார் பேருந்து ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்ட கேரள கஞ்சா பொதி மீட்பு



மன்னாரில் இருந்து புத்தளம் நோக்கி புறப்பட்ட தனியார் பேருந்து ஒன்றில் இருந்து திங்கட்கிழமை (30) மதியம் மன்னார் பிரதான பால நுழைவாயிலில் உள்ள சோதனை சாவடியில் வைத்து கேரள கஞ்சா பொதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.



மன்னாரிலிருந்து புத்தளம் நோக்கி புறப்பட்ட தனியார் பேருந்து ஒன்றில் கஞ்சா பொதிகள் இருப்பதாக தள்ளாடி இராணுவ தலைமையகத்திற்கு வழங்கப்பட்ட ரகசிய தகவலை அடுத்து திங்கட்கிழமை (30) மதியம் 12 மணியளவில் குறித்த தனியார் பேருந்து மன்னார் பிரதான பாலத்தடி யில் உள்ள சோதனைச்சாவடியில் நிறுத்தப்பட்டு, மோப்ப நாயின் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது குறித்த பேருந்தின் பின் ஆசனத்திற்கு முன் பகுதியில் உள்ள ஆசனத்தின் கீழே காணப்பட்ட இரும்பு பெட்டியில் மறைத்து வைக்கப்பட்ட பொதி ஒன்றை எடுத்து சோதனை செய்தனர்.

இதன் போது குறித்த பொதியில் கேரள கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 380 கிராம் கேரள கஞ்சா இவ்வாறு குறித்த பொதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. குறித்த பேருந்தின் பின் இருக்கையில் இருந்த 4 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் சுதந்திர தினம் தமிழ்த் தேசத்தின் கரி நாள் என்பதே உண்மை



இலங்கையின் சுதந்திர தினமான பிப்ரவரி நாலாம் திகதியைக் கரி நாளாக பிரகடனப்படுத்தும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் முடிவுக்கு நாம் எமது ஆதரவை தெரிவிக்கின்றோம்.

உண்மையில் இத்தீவின் வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ்த் தேசத்தை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயர் தாம் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு மேலாதிக்கத்தை இத்தீவின் இன்னொரு தேசமாகிய பௌத்த சிங்கள தேசத்திடம் தாரை வார்த்த கரி நாளாகவே பிப்ரவரி நாலாம் திகதியை நாம் கருதுகின்றோம்.

1931 ஆம் ஆண்டில் ஆங்கிலேயரால் பொறுப்பாட்சி வழங்கப்பட்ட காலத்தில் இருந்து தொடங்கிய சிங்கள பௌத்த தேசத்தின் தமிழினத்தின் மேலான இனவழிப்பு நடவடிக்கைகள் 1948 பிப்ரவரி நாலாம் தேதி முதல் முழு அதிகாரங்களுடன் தீவிரமடைய தொடங்கியது. இன்றுவரை இரண்டு லட்சத்துக்கும் மேலான தமிழ் மக்களைக் கொன்றும் பத்து இலட்சத்திற்கும் அதிகமானவர்களை புலம்பெயர வைத்தும் பல்லாயிரம் தமிழர்களை காணாமல் போகச் செய்தும் பல நூறு தமிழர்களை பல்லாண்டுகளாக சிறைகளில் அடைத்தும் தமிழர்களின் தாயகத்தில் பல ஆயிரம் சதுர கிலோ மீட்டர் நிலங்களை குடியேற்றமுட்பட பலவழிகளிலும் அபகரித்தும் தமிழர்களின் பல ஆயிரம் கோடி செல்வங்களை அழித்தும் மட்டுமல்லாது தனிச்சிங்களச்சட்டம், கல்வியில் தரப்படுத்தல், வேலைவாய்ப்புகளில் பாரபட்சம், அபிவிருத்தியில் புறக்கணிப்பு என ஒரு நாடு என தாங்கள் கூறிக் கொள்ளும் இத்தீவில் தமிழர்களை தொடர்ச்சியாக ஓரம் கட்டியும் வந்துள்ளது சிங்கள பௌத்த தேசம்.

சிங்கள பௌத்த தேசம் இன்றும் அதே பாதையில் தான் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது.

ஆங்கிலேயர் வெளியேறிய பின்னான கடந்த 75 ஆண்டுகள் முழுவதும் தமிழின அழிப்பில் தனது பெருமளவு கவனத்தையும் பெரும்பாலான வளங்களையும் குவித்ததன் மூலம் எம்மை அழித்து பலவீனமாக்கியது மட்டுமல்லாது இன்று தானும் பொருளாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பவற்றில் பேரழிவைச் சந்தித்து நிற்கின்றது, சிறீ லங்கா. ஆனாலும் இந்த நிலையிலும் கூட, இன்றும் தமிழின அழிப்பிற்காக, தான் தேர்ந்த எந்தவொரு செயற்பாடுகளிலும் இலங்கை கிஞ்சித்தேனும் தளர்வை ஏற்படுத்தாமல் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது.

தொடர்ந்து வந்த இலங்கையின் அரசுகள் காலங்காலமாக தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்போம் எனக்கூறி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட வண்ணம் எம்மை ஏமாற்றியது மட்டுமல்லாது, அக்காலங்களை தமிழர்களின் அடையாளங்களை அழிக்கவும் இனவழிப்புக்கு எதிரான எமது போராட்டங்களை வலுவிழக்கச் செய்வதற்கும் பயன்படுத்துவதை தனது தந்திரோபாயமாகவும் கொண்டுள்ளது. இன்று இலங்கையின் அரசு மீண்டும் ஒரு தடவை பேச்சுவார்த்தை என்று இனவழிப்பைத் தொடர்வதற்கான கால அவகாசத்தை பெறுவதற்கும் ஈற்றில் எம்மை ஏமாற்றுவதற்கும் முயன்று நிற்கின்றது.

இந்நிலையில் இலங்கையின் சுதந்திர தினம் உண்மையில் தமிழர்களின கரி நாள் என்பதே தமிழ்த் தேசத்தின் யதார்த்தமாகும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்துள்ள இப்போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவைத் தெரிவித்து நிற்கின்றோம்.

**தமிழ் சிவில் சமூக அமையம் மற்றும் அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி கருப்பு ஜனவரி போராட்டம்

மட்டக்களப்பில் கொட்டும் மழையிலும் இலங்கையில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி பிரகடனப்படுத்தப்பட்ட "கருப்பு ஜனவரி" தினமான வெள்ளிக்கிழமை (27) நீதிகோரி காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத் தூபியில் கறுப்பு பட்டி போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் ஈடுபட்டனர்.

இலங்கையில் ஊடகத் துறையை பொறுத்த வரையில் கறைபடிந்த மாதமாகவே காணப்படுகிறது. பல்வேறு ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் கொலை, ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை என்பவற்றுக்கு நீதி கோரி, வருடம் தோறும் ஜனவரி மாதத்தை "கறுப்பு ஜனவரி"யாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் மட்டு ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர் வா. கிருஸ்ணகுமார் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத் தூபியில் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவு கூரப்பட்டதையடுத்து தொடர்ந்து கருப்பு துண்டை வாயில் அணிந்து கொண்டு அரசாங்கமே ஊடக சுதந்திரத்தினை உறுதிப்படுத்து ஊடகவியலாளர்கள், சுதந்திரமாக செயல்பட அனுமதி, ஊடக அடக்குமுறை உடன் நிறுத்து, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்று கொடு, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்து போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு அமைதியான முறையிலான கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஒரு மணித்தியாலம் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.



# கொக்கட்டிச்சோலை படுகொலையின் 36வது ஆண்டு நினைவு தினம்

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை படுகொலையின் 36வது ஆண்டு நினைவு தினம் சனிக்கிழமை (28) உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, மகிழடித்தீவு சந்தியில் உள்ள படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

சனிக்கிழமை காலை தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் இலங்கை தமிழரசுக்கட்சி ஆகியன நினைவேந்தல் நிகழ்வுகளை நடாத்தியது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் டெலோவின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பட்டிருப்பு தொகுதி தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பா. அரியநேத்திரன் தலைமையில் தமிழரசுக்கட்சியின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது டன் உயிர்நீர்த்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி அகவணக்கமும் செலுத்தப்பட்டது.



28-01-1987 மற்றும் 12-06-1991 ஆகிய காலப்பகுதிகளில் இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் மகிழடித்தீவு இறால் பண்ணை மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளில் 239 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்களில் சிறுவர்கள், பெண்கள் மற்றும் முதியவர்களும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



# அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேவிற்கு பிணை!

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை (27) முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கில் அவரை 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர்)

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**



### இருப்பதை கொடுக்க மறுப்பதேனோ?

இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்க கடந்த நவம்பர் மாதம் இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு 2023 பெப்ரவரி 4ஆந் திகதி சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு வழங்கப் போவதாக அறிவித்த போது தமிழ் தரப்பில் யாரும் அதை சீரியஸாக எடுத்துக் கொண்டதாகத் தொரியவில்லை.

நாடு வங்குரோத்தடைந்து மக்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் தத்தளிக்கிறார்கள். நாளொரு சுருக்கமும் பொழுதொரு பிரச்சினையுமாக பொருளாதாரம் முகங்குப்புற விழுந்து கொண்டிருக்கிறது. செவிடன் காதில் ஊதிய சங்காக அரசாங்கம் வழமைபோல அதிபர் பிரதமர் மற்றும் அமைச்சுகளுக்கு அதிகளவு நிதிகளை ஒதுக்கீடு செய்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் புதிய அமைச்சுக்களை உருவாக்குவதிலும் மின்கட்டணத்தை அதிகரிப்பதிலும் வரிகளை அதிகரிப்பதிலும் கோடிக்கணக்கில் செலவிட்டு சுதந்திர தினம் கொண்டாடுவதிலும் அதிக கவனஞ் செலுத்திவருகிறது.

மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதும் அரச தலைவர்கள் மீதும் உள்ள நம்பிக்கையும் செல்வாக்கும் சரிந்து சங்கடப்படுமளவுக்கு மிகக் கீழ் மட்டத்தை அடைந்து மக்கள் மத்தியில் செல்ல முடியாதுள்ளது. எந்த அளவுக்கென்றால் மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ ஒரு சமூக வலைத்தளத்தின் ஊடாக மக்களுடன் நிகழ்நிலையில் அளவளாவ முற்பட்ட போது ஒபட்ட நிவன் சுவ லெபேவா என்று பலரிடமிருந்து பதில் கிடைத்தது. நிவன் சுவ லெபேவா என்பது ஒருவர் இறந்த பின்னர் Rest in Peace அல்லது ஆன்மா சாந்தியடையட்டும் என்று பிரார்த்திப்பதன் சிங்கள வடிவம். ஒருவர் உயிருடன் இருக்கும் போது இவ்வாறு கூறுவது அவருக்குச் செய்யும் உச்சகட்ட அவமானமாகும். இது போல மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்த நிலையிலேயே அரசாங்கமும் அரச தலைவர்களும் உள்ளனர்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் இனப்பிரச்சினை தீர்வு புத்தபகவானுக்கு ஞானோதயம் கிடைத்தது போல ஆட்சியாளருக்கு திடீரென்று ஞானம் பிறந்து விட்டதா என்ற ஐயத்தை எழுப்பியது. அத்துடன் இனப்பிரச்சினை மூன்று மாதத்தில் தீர்க்கக் கூடிய பிரச்சினை என்றால்ல் - ஏன்டாப்பா முப்பது வருஷம் வச்சு இழுத்த நீங்கள்? இத்தனை பேரை காவு கொடுக்க வச்ச நீங்கள்? ஏப்பவோ இதைச்செய்து இலட்சக்கணக்கானோரின் உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றி இருக்கலாமே? இந்த நாடு எப்பபோதோ மலேஷியா சிங்கப்பூர் மாதிரி ஆகியிருக்குமே ஏன்று பலர் ஆதங்கப்பட்டதும் காதில் கேட்டது. இதுபற்றி அனைத்துலக செல்வாக்கு மிக்க ஒரு தமிழ் செய்தியாளரிடம் அபிப்பிராயம் கேட்டேன். ரணில் இதுவரை ஒன்றும் செய்யவில்லை. அவர் இனிமேலும் தேர்தலில் நின்று வெற்றி பெற முடியாது. ஆக தீர்க்க முடியாத இனப்பிரச்சினைக்கு தனது காலத்தில் தீர்வு வந்ததாக ஒரு ரெக்கோர்ட் இருக்கட்டுமே என்று ஆசைப்பட்டிருக்கலாம் மேலும் இந்தியாவிடமிருந்தும் சர்வதேசத்திடமிருந்து வந்த கடும் அழுத்தம் காரணமாகவும் இருக்கலாம் என்றார்.

நமது சந்தேகம் என்னவென்றால் இப்போது அவிழ்த்து விடப்பட்டுள்ள இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய அறிவிப்பு நொருங்கிப்போயுள்ள செல்வாக்கை மீளக் கட்டியெழுப்ப எத்தனிக்கும்




ஒரு டெமேஜ் கொன்ரோலிங் ஸ்ரெட்டர்ஜி (damage controlling strategy) ஆக இருக்குமோ என்பது தான். அரகலய (போராட்ட) காலப்பகுதியில் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் ஒன்று கூடி ஒற்றுமையாக அரசாங்கத்தை எதிர்த்துவந்த நிலையில் இனப்பிரச்சினைக்கான காரணம் பற்றியும் அரச அடக்குமுறைகள் பற்றியும் கருத்துப்பரிமாற்றங்கள் இடம் பெற்றதைக் காண முடிந்தது. ஆனால் அரகலயகாரர்களை குறிவைத்து அரச அடக்குமுறை பாயத் தொடங்கியதும் அந்தக் குரல்களும் மௌனித்துப் போயின. இந்த சூழ்நிலையில் இனப்பிரச்சினை தீர்வு குறித்த அறிவிப்பு வந்தால் அதில் யாருக்கு இலாபம் என்பதை கடந்த ஜனவரி மூன்றாம் நான்காம் வாரங்களில் இடம் பெற்ற இதனுடன் தொடர்புபட்ட சம்பவங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்தப்பிரச்சினை தொடர்பில் தமிழ்கட்சிகள் சூடுகண்ட பூனைகளாகப் பதுங்கி முதலில் தமிழ் மக்கள் தொடர்பில் எரிகிற பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குங்கள் என்றார்கள். கைதிகள் விடுதலை, காணிவிடுவிப்பு, காணாமல் போனோர் பிரச்சினை ஆகியவை அதில் முன்னுக்கு வந்தன. இது தொடர்பில் ஒருசில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதையும் மறுக்க முடியாது. இலங்கைக்கு IMF நிதியுதவி செய்வது தொடர்பில் வெளிப்படையாக ஆதரவை வழங்கியுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கையின் நல்லிணக்கம் ஏற்படுவது தொடர்பில் 13வது அரசியல் யாப்புத் திருத்தத்தை முழுமையாக அமல் செய்ய வேண்டும் என்று தமது சந்திப்புக்களின் போது வலியுறுத்திச் சென்றார். 13வது அரசியல் திருத்தம் 1987இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிறகு இப்போது 22வது அரசியல் யாப்புத்திருத்தம் வரையில் கடந்துவிட்ட நிலையில் அதனை முழுமையாக அமல் படுத்துவது



இன்னும் நடக்காத காரியமாக உள்ளது என்பது ஒரு புறமிருக்க அதில் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரங்களும் கூட பல்லுப்பிடுங்குப்பட்ட பாம்பின் நிலையில் காணப்படுகின்றன. அதேவேளை அதனை வைத்தும் தமது சமூகத்தின் சமூக மற்றும் அரசியல் இலக்குகளை வெகு புத்திசாலித்தனமாக முஸ்லிம் சமூகம் அடையச் செய்திருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை. அத்துடன் 13ஆம் திருத்தத்தின் கீழ் வடக்கு கிழக்குக்கு வெளியே உருவாக்கப்பட்ட மாகாண சபைகளும் மத்திய அரசின் அனுசரணையுடன் சிறப்பாக இயங்குவதையும் காணலாம். தமிழர் தரப்பின் பெரும்பாலானோர் 13ஆம் திருத்தத்தை இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஏற்காவிட்டாலும் கூட இந்த குறைந்தபட்ச தீர்வினையேனும் முழுமையாக அமல்படுத்துவதிலே கூட அரச தரப்பு ஆர்வம் காட்டவில்லை என்பதே உண்மை. அது மட்டுமின்றி மூன்று தசாப்தங்களிற்கும் மேலாக அரசியலமைப்பில் முறைப்படி செய்யப்பட்ட 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைபடுத்தப்படாததே அரசியலமைப்பை மீறும் ஒரு செயலாகும்.

ஏற்கெனவே அரசியலமைப்பில் உள்ள ஒரு விடயத்தை நடைமுறைபடுத்தப் போவதாகவே ரணில் அறிவித்தார். ஆனால் அறிவிப்பு வெளியான உடனேயே அதற்கு எதிர்வினையாகத் தொடங்கிய குரைத்தல்களும் ஊளையிடல்களும் எத்தனை காலம் ஆனாலும் நாடு எத்தகைய படு பாதாளத்தில் வீழ்ந்தாலும் இனவாதக் கூட்டம் ஒருபோதும் திருந்தப் போவதில்லை என்பதை வெகு தெளிவாகக் காட்டியது. ஒரு மதகுரு 13ஆம் திருத்தத்திற்கு பே பே பேமய் (முடியாது முடியாது முடியாதென்றால் முடியாது தான்) என்று கணவனோடு சேர்ந்து வாழமுடியாது என்று காவல் நிலையத்தில் அதிகாரிகளிடம் அரற்றி முரண்டு பிடிக்கும் பெண் போல யூடியுபில் அலப்பறை செய்ததைக் காணமுடிந்தது. அத்தோடு நான்கு பீடங்களைச் சார்ந்த மகாநாயக்க தேரர்கள் 13ஆம் திருத்தத்தை தாம் எதிர்ப்பதாகவும் வடக்கு கிழக்கில் உள்ள பௌத்த தலங்களின் பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்டுள்ள படைகளை அங்கிருந்து அகற்றக் கூடாதென்று அதிபருக்கு கூட்டாக எச்சரிக்கை அஞ்சல் அனுப்பியுள்ளனர். வழமைபோலவே இனவாதம் கக்கும் வீரவன்ச விஜேசேகர கம்மன்பில அமரசேகர போன்றவர்களும் மூடியிருந்த தமது வக்கடைகளை மீளவும் திறந்து விட்டுள்ளனர். ஆக நாட்டின் பாதுகாப்பிற்கும் ஒருமைப்பாட்டிற்கும் பாரிய அச்சுறுத்தல்கள் 13ஆம் திருத்தத்தின் மூலம் மீண்டும் விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனால்



நாட்டைக்காக்கும் வீரருக்கான அவசரத்தேவை தேவை இப்போது ஏற்பட்டுள்ளது என்ற கருத்தை முன்வைத்து ராஜபக்சக்களுக்கும் அவர்தம் தொண்டரடிப்பொடிகளுக்கும் அரசியல் ஆதாயம் தேடமுனையும் வேலை திட்டமிட்டபடி கனகச்சிதமாக ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது.

பிரதேச சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் இழந்த செல்வாக்கை சற்றே நிமிர்த்த இது உதவலாம். அதேவேளை அதிபர் தலைமையில் அண்மையில் அழைக்கப்பட்டிருந்த ஒரு கூட்டத்தில் தேசியப்பட்டியல் மூலம் பதவிக்கு வந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ரணிலின் முகத்துக்கு நேரே 13ஆம் திருத்தத்தை அமல்படுத்த தேசியப்பட்டியல் மூலம் வந்த உங்களுக்கு அதிகாரம் கிடையாது. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைத்த ஆணையின் எஞ்சிய காலத்தைக் கழிப்பதற்கே நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். மக்கள் உங்களுக்கு ஆணைவழங்கவில்லை. 13ஐ அமுல்படுத்துவதாயின் அடுத்த தேர்தலில் மக்கள் முன்சென்று மக்களாணையைப் பெற்றபின் அதனை அமல்படுத்தலாம் என்று கொக்கரித்தார். அதிபரோ சாவகாசமாக அவரைப்பார்த்து நீங்களும் தேசியப்பட்டியலில் தான் வந்திருக்கிறீர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபராக நான் அரசியல் அமைப்பில் உள்ளதை செயற்படுத்த கடைமைப்பட்டிருக்கிறேன் அது வேண்டாமென்றால் பாராளுமன்றத்திற்கு கொண்டு சென்று அதை நீக்ககுங்கள் வெறுமனே அதை வைத்துக் கொண்டிருக்க முடியாது என்று பதிலளித்தார்.

உண்மையில் ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தின்படி 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த யாரிடமும் அவர் அனுமதி பெறவோ ஆலோசனை கேட்கவோ தேவையில்லை.



ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதைச் செய்யலாம். ஆனால் அதன் பின்னே வருபவற்றைச் சந்திக்கத்தான் துணிவு வேண்டும். பாராளுமன்றத்தில் 13ஐ நீக்கும் பிரேரணை வந்தால் அது வெற்றிபெறும் சாத்தியங்கள் உண்டு. இதிலே முக்கிய கேள்வி என்னவென்றால் இந்திய வெளிவிவகார அமைச்சர் இங்குவந்து 13ஐ முழமையாக அமல்படுத்தவேண்டும் என்று அழுத்திக் கூறிச் சென்ற பின்னரும் இலங்கை சித்துவிளையாட்டுக்காட்டி முழுமையாக 13ஐ நீக்கிவிட்டால் இந்தியா என்ன செய்யும் என்பதாகும். கடந்த கால அனுபவங்களின்படி 13ஆம் திருத்தத்தின் கீழ் இணைந்திருந்த வடக்கு-கிழக்கு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரித்து விடப்பட்டபோது அது இறைமையுள்ள இலங்கையின் உள் விவகாரம் என்று கருதப்பட்டது.

(தொடர்ச்சி 19 பக்கம்)

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மருத்துவராக வருவதே எனது எதிர்கால இலட்சிம்

## முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் நிலை பெற்ற ஹன்சிகா சதீஸ்குமார்



மருத்துவராக வருவதே எனது எதிர்கால இலட்சிம் என முல்லைத்தீவு மாவட்டத்தில் 180 புள்ளிகளை பெற்று முதல் நிலை பெற்ற மாணவி ஹன்சிகா சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

மு/புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியால மாணவியான ஹன்சிகா சதீஸ்குமார் முன்தினம் வெளியாகிய தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் 180 புள்ளிகளை பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

குறித்த மாணவி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் தனக்கு கற்பித்த பெற்றோர் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் சக மாணவர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு தான் வைத்தியராக வருவதே தனது எதிர்கால இலட்சிம் என தெரிவித்தார்.

**ஜெகப்பிரஷாந்த்-முல்லை ஊடகவியலாளர்**



# மன்னார் கீரியில் கடலாமையுடன் 2 நபர்கள் கைது



மன்னார் - கீரி பகுதியில் இறைச்சிக்காக கொண்டு சென்ற கடலாமையுடன் வெள்ளிக்கிழமை 27ம் திகதி காலை 7.20 மணி அளவில் மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் 2 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கீரி பகுதியைச் சேர்ந்த 50 மற்றும் 55 வயதுடையவர்கள் என மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிருடன் மீட்கப்பட்ட கடலாமை 35 கிலோ எடை கொண்டது என தெரிய வருகிறது.

மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் துல்சான் நாகாவத்தவின் பணிப்புரைக்கு அமைவாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் (2) அரியரட்ண பண்டார மற்றும் மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆனந்த ரட்ணாயக்க தலைமையில், பொலிஸ் சாஜன் 36501 ரத்நாயக்க மற்றும் உத்தியோகத்தர்கள் சென்று குறித்த கடலாமை யை உயிருடன் மீட்ட தோடு, குறித்த இரு நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் மீட்கப்பட்ட கடலாமை மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# றகமா நிறுவனத்தின் நன்னீர் மீன் வளர்ப்பு செயற்த்திட்டம்!



மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க றகமா நிறுவனத்தினரால் மாந்தை கிழக்கு பிதேசத்திற்குட்பட்ட நான்கு குளங்களிற்க்கு



(ஒட்டறுத்தகுளம், வண்டிகட்டு குளம், பாலப்பாணி குளம், கிடாப்பிடித்த குளம்) வெள்ளிக்கிழமை (27.01.2023) நன்னீர் மீன் வளர்ப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தினை மந்தை கிழக்கு பிரதேச செயலாளர் மற்றும் றகமா நிறுவனத்தின் செயலாளர் நாயகம் இணைந்து ஆரம்பித்து வைத்தனார்.

இச்செயற்றிட்டத்திற்காக குறித்த குளங்கள் உள்ளடங்கிய கமக்கார அமைப்பினர் 10000 மீன் குன்சுகளும் றகமா நிறுவனத்தினரால் 50000 மீன் குன்சுகளும் குறித்த குளங்களுக்கு விடப்பட்டது.

உணவு உற்பத்தியினை அதிகரிக்கும் செயற்த்திட்டத்தின் கீழ் தேவைப்பாடுடைய 4 கிராமங்களில் 120 நன்னீர் மீன்பிடி தொழிலை மேற்கொள்ளும் குடும்பங்களிர்க்கு நிலையான வருமானத்தினை பெற்றுக்கொடுப்பதற்காகவும் பிரதேச மக்களிற்கன போசக்கான உணவினை பெற்றுக்கொடுப்பதற்காகவும் இச் செயற்த்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 27 | 23 | 29 | 27 | 35 | 30 | 44 | 36 | 61 | 48 | 84 | 63 |
| 25 K | 37 | 33 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 | 148 | 105 |
| 50 K | 69 | 62 | 88 | 74 | 103 | 92 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 240 | 406 | 318 | N/A | N/A |
| 200 K | 260 | 231 | 338 | 282 | 398 | 353 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 | 450 | 296 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | N/A | N/A | N/A | N/A |

INVESTMENTS

Protect once helps your life

RRSP
RESP
TFSA



LIFE INSURANCE
ஆயுட் காப்புறுதி
Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416-728-5772
Office : 416-519-3896
thana7@gmail.com www.thana.ca
fax : 647-547-8147
80 Nashndene Road ,#D218, Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் சுதந்திரதினம் இனிமேல் சிங்களதேசத்துக்கும் இருண்ட கரிநாள்தான்

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



இலங்கையை விட்டுப் பிரித்தானிய ஆட்சி நீங்கிய நாளைத் தென்னிலங்கைச் சிங்களதேசம் சுதந்திர நாளாகக் கொண்டாடி மகிழ, தமிழர் தேசம் அதனைக் கரிநாளாகவே தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. தமிழர் தேசத்தை ஒற்றையாட்சி என்ற சிறைக்குள் வலுக்கட்டாயமாக முடக்கி வைத்திருக்கும் அரசியலமைப்பில் இந்நாளைச் சுதந்திர நாளாகத் தமிழர்களால் ஒருபோதும் கொண்டாட இயலாது. ஆனால், 75ஆவது சுதந்திர தினத்தைக் கோலாகலமாக இலங்கை அரசாங்கம் கொண்டாடுவதற்குத் தயாராகிவரும் நிலையில் அது சிங்கள தேசத்துக்கும் இருண்ட கரிநாளாகவே அமைந்திருக்கிறது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சுதந்திரதினம் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ள தன்சானியா நாடு அண்மையில் தனது சுதந்திர தினக் கொண்டாட்டங்களை இரத்துச் செய்துள்ளது. அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை மாற்றுத்திறன் மாணவர்களுக்கான தங்கும் இல்லங்களை அமைப்பதற்குப் பயன்படுத்துமாறு அந்நாட்டின் பிரதமர் உத்தரவிட்டுள்ளார். ஆனால், தன்சானியாவைவிட மிகவும் மோசமான பொருளாதாரச் சீரழிவுக்குள் சிக்கித்திணறிக் கொண்டிருக்கும் இலங்கையில் ஜனாதிபதி உணவின்றித் தவிக்கும் தன் சிங்களதேசத்தைப் பற்றியேனும் சிந்திப்பவராக இல்லை. பெருமெடுப்பில் சுதந்திர தினக்கொண்டாட்டங்களுக்குத் தயாராகி வருகிறார்.

இலங்கைத் தீவின் பொருளாதாரம் இன்று மீண்டெழ முடியாத படுகுழிக்குள் வீழ்ந்து கிடப்பதற்குத் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழர் தேசத்தின் மீது தொடுத்து வந்த யுத்தமே பிரதான காரணம். இதற்கு வித்திட்டது பௌத்த, சிங்கள மேலாதிக்கத்தை நிறுவுகின்ற இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு முறைமையே ஆகும். பிரித்தானியர்களிடம் இருந்து சிங்களத் தலைமைகளிடம் ஆட்சி கைமாறிய நாளில் இருந்து ஒற்றையாட்சி முறைமையின்கீழ் தமிழர் தேசம் தொடர்ந்து அடக்கி ஒடுக்கப்பட்டதன் விளைவாகவே தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டனர்.

போரின் தாங்கொணாக் கடன் சுமையை தமிழ் மக்களுடன் சேர்ந்து சிங்கள மக்களும் சுமந்து நிற்கின்றனர். தென்னிலங்கை அரசியல் தலைமைகள் இது குறித்து அக்கறை கொள்ளவில்லை. மாறாக, தொடர்ந்தும் தமிழர் தேசத்தை அடக்கி ஒடுக்குவதில் மட்டுமே குறியாக இருக்கின்றன. தமிழர் தனியானதொரு தேசம் என்று இலங்கையின் அரசியலமைப்பு அங்கீகரிக்காதவரை தமிழர்களுக்குச் சுதந்திரதினம் கரிநாளாகவே இருக்கும். தமிழர்களுக்கு விடிவு கிடைக்காத வரைக்கும் சிங்களதேசமும் இருண்டதாகவே இருக்கும் என்ற நிதர்சனத்தைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



# யா/உரும்பிராய் றோ.க.த.க பாடசாலையின் திறன் வகுப்பறை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பம்

உரும்பிராய் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம் - கனடா, ஐக்கிய இராட்சியத்தை தளமாகக் கொண்டு இயங்கும் Ratnam Foundation, lMHO-USA ஆகிய நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பில் யா/உரும்பிராய் றோ.க.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் 25.01.2023ம் திகதி காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திரு. ஜே. மகிந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவனும் பொறியியலாளருமான திரு. செல்வன் செல்வதுரை அவர்களும் உரும்பிராய் மேம்பாட்டு ஒன்றியத்தின் தலைவர் வைத்திய கலாமணி திரு. வே. கணேசவேல் அவர்களும் யாழ்கல்வி வலய உதவி கல்விப்பணிப்பாளர் திரு. ச. சிவகுமார் அவர்களும் காந்திஜி சனசமூக நிலைய தலைவர் திரு. தே. நமணதாசன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மாணவ மாணவிகள் திறன் பலகையில் தமது பாடங்களில் செயற்பட்ட விதம் நிகழ்வில் பங்கேற்றவர்களை ஈர்த்தது. ஏற்கெனவே இரட்ணம் பவுண்டேஷன் மற்றும் IMHO-USA ஏற்பாட்டில் பயிற்சி வழங்கப்பட ஆசிரியரின் வழிகாட்டலில் ஆசிரியர் ஒருவரும் திறன் பலகையை தம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இந்நிகழ்வில் செய்து காட்டியமை குறிப்பிடத்தக்கது.

உதவியளித்திருந்த அமைப்புக்களுக்கு அதிபர் உட்பட விருந்தினர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் திறன் பலகையை கற்றல் கற்பித்தலுக்கு செயற்படுத்துவது தொடர்பான உபாயங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் மாணவர்கள் தமது புலக்காட்சித்திறன் ஊடாக எவ்வாறு திறன் பலகையை கையாண்டு சிறப்பாக கற்றல் பேறுகளை அடையலாம் என்பது பற்றிய அறிவுரைகளும் விருந்தினர்களால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு ஆசிரியர் திருமதி. தே. ஆனந்தராசாவின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவடைந்தது.







# கல்முனை மாநகர பிரதேசத்த்தினுள் பசுமைத் திட்ட முயற்சிகள் முன்னெடுப்பு— அம்பாறை டி.ஐ.ஜி ஆராய்வு

கல்முனை தலைமையக பொலிஸ் பொலிஸ் நிலையத்திற்கு அம்பாறை மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் விஜயம் செய்துள்ளார்.

குறித்த பொலிஸ் நிலையத்திற்கு செவ்வாய்க்கிழமை (31) சென்றிருந்த அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய சிறி கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திக மேற்பார்வையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட அப்பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் புதிய ஆண்டிற்கான அணிவகுப்பு மரியாதையும் பரிசோதனையும் கலந்து கொண்டு பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

கல்முனை தலைமைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றம்சீன் பக்கீர் புத்திக இதனை தொடர்ந்து இவரை கௌரவிக்கும் வகையில் சேவையினை பாராட்டி நினைவு சின்னம் ஒன்றினை வழங்கி வைத்தார்.

கல்முனை மாநகர பிரதேசத்தை பசுமைத் திட்டங்களின் கீழ் உள்வாங்குவதன் அவசியம் மற்றும் பசுமை தரும் மரங்களை நடுவதன் ஊடாக மக்களுக்கான நன்மைகள் தொடர்பில் வலியுறுத்திய அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இளைஞர் சேவை அதிகாரிகள் உட்பட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளை பெற்று கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திக மேற்பார்வையில் இணைந்து மேற்குறித்த நிகழ்வின் முன்னாயத்த விடயங்களை ஆராய்ந்து பல்வேறு அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கினர்.

இப்பசுமைத் திட்டங்களின் கீழ் மாநகர சபை உள்ளிட்ட பல தரப்பினரை உள்வாங்கி பாதைகளின் நடுவில் மரங்களை நாட்டுதல் அவற்றை பேணுதல் ஆடு மாடுகள் தீண்டுவதில் இருந்து பாதுகாத்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை பொலிஸ் நிலைய சிறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம்.எல் றபீக் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட் பொலிஸ் நிலை பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கண்காணிப்பு விஜயத்தின் போது பொலிஸாரின் நிர்வாக சீரமைப்பு தொடர்பிலான முன்னெடுப்பு களப்பரிசோதனைகள் ஆகியவற்றுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக சேவை பொலிஸ் பிரிவு, சுற்றுச்சூழல் பொலிஸ் பிரிவு, போக்குவரத்து பிரிவு, சிறு குற்றத்தடுப்பு பிரிவு, பெருங் குற்றத்தடுப்பு பிரிவு, சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவு, உள்ளிட்ட பல பிரிவுகள் தொடர்பான குறைநிறைகள் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# மன்னாரில் சரிந்து விழுந்த காற்றாலை மின் கோபுரம்

மன்னார் மாவட்டத்தில் மிக வேகமாக அமைக்கப்பட்டு வந்த காற்றாலை மின்சார கோபுரம் ஒன்று கட்டுமானப் பணியின் போது உடைந்து விழுந்துள்ளது.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நறுவிலிக்குளம் கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்டு வந்த கோபுரங்களில் ஒன்று கடந்த மாதம் உடைந்து விழுந்துள்ளது.

அப்பகுதியில் கால்நடைகள் விவசாயிகள் மாத்திரம் சென்று வரும் பகுதி என்பதால் சம்பவம் வெளியில் தெரியாமல் இருந்துள்ளது.

எனினும் அப்பகுதியில் செய்கை பண்ணப்பட்டிருக்கும் விவசாய நடவடிக்கைகளை பார்வையிடச் சென்ற போது கோபுரம் சரிந்து கிடப்பதையும் கனரக பளு தூக்கும் கிரேன் வாகனம் சேதமாகி இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

குறித்த கோபுரம் சரிந்து கிரேன் மீது விழுந்த போதும் கிரைன் இயக்குனர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக அறிய முடிகிறது.

இந்த சம்பவம் நடை பெற்றதில் இருந்து அப்பகுதியில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கும் பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது டன் இம் மாத இறுதியில் மீண்டும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிய வருகிறது.

நானாட்டான் பிரதேசத்தில் நறுவிலிக்குளம் முதல் அச்சங்குளம் வரை 6 மின் கோபுரங்களுக்கான பணிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# 13ஆவது சட்டத்திருத்தம் ஈழத் தமிழர் பிரச்சனையைத் தீர்க்குமா?

- பழ. நெடுமாறன்



1987ஆம் ஆண்டு சூலை 29ஆம் நாள் இந்திய - இலங்கை உடன்பாட்டில் அன்றைய இந்திய பிரமர் மறைந்த இராஜீவ் காந்தியும், அன்றைய இலங்கை குடியரசுத் தலைவர் மறைந்த ஜெயவர்த்தனாவும் கையெழுத்திட்டனர்.

உடன்பாடு கையெழுத்திட்டப் பிறகு சுமார் 3 மாதம் கழித்து இலங்கை அரசியல் யாப்பிற்கான 13ஆம் ஆவது சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. அரசியல் யாப்பில் 17ஆம் அத்தியாயத்தின் "அ" பிரிவாகவும், உறுப்பு 154 "அ" பிரிவாகவும் இத்திருத்தம் சேர்க்கப்பட்டது. மாகாண சபை சட்டமும் இதே நாளில் நிறைவேற்றப்பட்டது.

தொன்றுதொட்டு ஈழத் தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்குப் பகுதிகளை இணைத்து ஒரு மாகாணமாக உருவாக்குவது என்ற திட்டம் இந்திய - இலங்கை உடன்பாட்டில் முதன்மையாக இடம்பெற்றிருந்தது. இதையொட்டி சென்னை கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய தலைமையமைச்சர் இராசீவ்காந்தி "ஈழத் தமிழர்களின் நீண்ட கால கோரிக்கையான தமிழீழம் உருவாக்கப்பட்டுவிட்டது" என்று தம்பட்டம் அடித்தார். ஆனால், உண்மையில் நடந்தது என்ன?

இந்திய - இலங்கை உடன்பாட்டில் கூறப்பட்ட முதன்மை வாய்ந்த அம்சங்களான தமிழர் தாயகப் பகுதியில் சிங்களர் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துதல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், தமிழர் பகுதியில் உள்ள சிங்கள காவலர்களையும், படை வீரர்களையும் திரும்பப் பெறுதல் போன்ற பலவற்றை சிங்கள அரசு நிறைவேற்றாத காரணத்தினால் மாகாண சபை தேர்தலை ஈழத்தமிழர்கள் புறக்கணித்தனர். ஆனால் இந்தியப் படைவீரர்களின் உதவியுடன் மோசடியான தேர்தல் நடத்தப்பட்டு வரதராசபெருமாள் என்பவர் தலைமையில் அதிகாரமில்லாத அமைச்சரவை பதவியேற்றது.

### அடிப்படைத் தவறுகள்

ஈழத் தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட மாகாண சபைச் சட்டம் அடிப்படையிலேயே பல தவறுகளைக் கொண்டிருந்தது.

1. யாருடைய பிரச்சனையைத் தீர்ப்பதற்காக மாகாண சபை சட்டம் கொண்டுவரப்பட்டதோ, அந்தப் பிரச்சனைக்குரிய ஈழத் தமிழர் தரப்புடன் கலந்தாலோசனை செய்யாமலும், அவர்களின் பங்களிப்பு இல்லாமலும் ஒப்புதலைப் பெறாமலும் இச்சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

2. இலங்கைக் கூட்டாட்சி நாடல்ல; ஒற்றையாட்சி நாடாகும். இலங்கை அரசியல் யாப்பின்படி "இலங்கை குடியரசு ஒற்றையாட்சி அரசாகும் என்பது தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதைத் திருத்த வேண்டுமானால், நாடாளுமன்றத்தில் 2/3 பங்கு பெரும்பான்மையோடு அரசியல் யாப்புத் திருத்தம் நிறைவேற்றப்படுவதுடன், மக்களின் பொதுவாக்கெடுப்பு மூலமும் அவர்களின் ஒப்புதல் பெறவேண்டியது இன்றியமையாததாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மக்கள் தொகையில் 75 சதவீதம் சிங்களரே. 25 சதவீதம் தமிழர்கள். இந்நிலையில் நாடாளுமன்றத்திலும், நாட்டிலும் சிங்களரே பெரும்பான்மையினராக இருக்கும் நிலையில், இலங்கையைக் கூட்டாட்சி நாடாக மாற்றவேண்டும் என்ற சட்டத் திருத்தம் ஒருபோதும் நிறைவேற்றப்பட முடியாததாகும். பொதுமக்களின் வாக்கெடுப்பின் மூலமும் ஒப்புதல் பெற முடியாது.

3. ஆனால், அரசியல் சட்டத்தின் 76ஆவது உறுப்பின் கீழ் கொண்டுவரப்படும் சட்டத் திருத்தத்திற்கு 2/3 பங்கு பெரும்பான்மை இருந்தால் போதும். இத்திருத்தம் குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்த தேவையல்ல. அன்றைய செயவர்த்தனா ஆட்சிக்கு 2/3 பங்கு பெரும்பான்மை இருந்தது. எனவே, 76ஆவது உறுப்பின்கீழ் அரசியல் சட்டத் திருத்தத்தை அவர் சுலபமாக நிறைவேற்றியிருக்கலாம். ஒற்றையாட்சி அரசான இங்கிலாந்து அரசு முறையில் வட அயர்லாந்து, சுகாட்லாந்து போன்ற பகுதிகளுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீடு அளிக்கப்பட்டதைப் போல, வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு 76ஆவது சட்டத் திருத்தத்தின் கீழ் ஓரளவு அதிகாரத்தை வழங்கியிருக்கலாம். ஆனால், அதற்கான முயற்சிகளைச் செய்வதற்கு சிங்கள அரசு விரும்பவில்லை. அவ்வாறு செய்யும்படி அதை வற்புறுத்த இந்திய அரசும் தவறிவிட்டது.

4. 13ஆவது சட்டத் திருத்தம் தொடர்பாக இலங்கை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்ட போது பெரும்பான்மை நீதிபதிகள் அரசியல் யாப்பு 76ஆவது உறுப்பின்படி நாடாளுமன்றத்திற்கு இருந்த அதிகாரங்களை இத்திருத்தம் கேள்விக்குட்படுத்தவில்லை எனத் தீர்ப்பளித்தனர். அதாவது, நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டே மாகாண சபை இயங்கவேண்டும் என்பதே இத்தீர்ப்பாகும்.

5. இலங்கையில் சிங்களர் - தமிழர் என இரு இனங்கள் வாழ்கின்றன. எனவே மாகாணங்கள் அமைக்கும் போது இனரீதியான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டிருந்தால், சிங்களருக்கு ஒரு மாகாணமும், தமிழருக்கு மற்றொரு மாகாணமும் ஆக இரு மாகாணங்கள் மட்டுமே உருவாக்கப்பட்டிருக்கவேண்டும். ஏற்கெனவே மத்திய ஆட்சி சிங்கள ஆட்சியாகவே உள்ளது. ஆனால், செயவர்த்தனா மிக தந்திரமாக பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு சிங்களருக்கு எட்டு மாகாணங்களையும், தமிழருக்கு ஒரு மாகாணத்தையும் அளிக்கும் வகையில் ஒன்பது மாகாணங்களை உருவாக்கினார். ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளை இணைத்து ஒரு மாகாணமாக ஆக்குவது குறித்து 13ஆவது சட்டத்திருத்தத்தில் தெளிவாக எதுவும் கூறப்படவில்லை. இணைப்புக் குறித்து நாடாளுமன்றம் ஒரு சட்டம் மூலம் நிறைவேற்றலாம் என்று கூறப்பட்டிருந்தது அல்லது குடியரசுத் தலைவர் ஒரு பிரகடனத்தின் மூலம் இணைப்பை ஏற்படுத்தலாம் என்று கூறப்பட்டிருந்தது. தற்காலிக இணைப்பிற்குக் கூட அரசியல் யாப்புத் தகுதி வழங்கப்படவில்லை. எனவே, பிற்காலத்தில் உச்சநீதிமன்றம் மூலம் இந்த இணைப்பு செல்லாததாக்கப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இவ்வாறு பிரிக்கப்பட்ட போது இந்தியாவில் காங்கிரசு கட்சிதான் ஆட்சியில் இருந்தது. ஆனாலும்கூட இந்திய - இலங்கை உடன்பாட்டிற்கு சிறு எதிர்ப்பைக்கூட இந்திய அரசு தெரிவிக்கவில்லை.

6. இலங்கை மத்திய அரசுக்குரிய அதிகாரங்களும், மாகாண அரசுக்குரிய அதிகாரங்களும் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. இதன் விளைவாக மாகாண அரசுகள் மத்திய அரசின் ஆணைகளுக்கிணங்கவே செயல்படவேண்டி வந்தது. அப்பட்டமாகக் கூறினால் மாகாண அரசுகள் பொம்மை அரசுகளாகவே விளங்கின.

7. மாகாண அரசிடம் இருந்த அதிகாரங்கள்கூட ஆளுநருக்குக் கட்டுப்பட்டவையாக இருந்தன. அவரை மீறி மாகாண முதலமைச்சரோ, அமைச்சர்களோ செயல்பட முடியவில்லை.

வடக்கு - கிழக்கு பிரிவும், புலிகளின் பின்னடைவும் சிங்கள அரசுக்கு மேலும் ஊக்கம் அளித்தன. முன்பு செய்யப்பட்டதைவிட, விரைவாகவும், அதிகமாகவும் தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட எல்லைகளை திருத்தியமைத்தல், முதலீட்டு முயற்சிகளுக்காகவும், இராணுவ முகாம்களுக்காகவும் நிலங்களை ஒதுக்குதல், சிங்கள மீனவர்களுக்கு வாடிகளை அமைத்தல், சிங்கள வணிகர்களின் கடைகளைத் திறத்தல் போன்றவை இராணுவ உதவியுடன் நிறைவேற்றப்படுகின்றன.

8. மாகாண சபைக்கு தன்னிச்சையாக சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்படவில்லை. சட்ட முன் வடிவுகளை ஆளுநருக்கு அனுப்பி அவரின் அனுமதியை பெறவேண்டும் என்ற நிலையில் அத்தகைய அனுமதி எளிதில் கிடைக்கவில்லை. அனுமதி பெற்று சட்டங்களை நிறைவேற்றினாலும், ஆளுநரின் ஒப்புதலை பெறுவதிலும் பெரும் இடர்ப்பாடு உருவானது. ஆளுநர் ஒப்புதல் கொடுத்தாலும் அச்சட்டங்களை உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்குக் குடியரசுத் தலைவர் அனுப்பலாம்.

9. மாகாண முதலமைச்சரின் ஆலோசனைப்படி காவல்துறைத் தலைவரை ஆளுநர் நியமிக்கவேண்டும். ஆனால், இதில் முரண்பாடு தோன்றுமானால், குடியரசுத் தலைவரே அந்த நியமனத்தை மேற்கொள்வார். இதன்மூலம் காவல்துறையின் அதிகாரம் முதலமைச்சரிடமிருந்து பறிக்கப்பட்டது.

10. குறிக்கப்பட்ட கல்வி நிலையங்களைத் தவிர, ஏனைய கல்வி நிலையங்கள் அனைத்தும் மாகாண அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கும் எனக் கூறப்பட்டது. ஆனால், குறிக்கப்பட்ட கல்வி நிலையங்கள் சிறிது சிறிதாக தேசிய கல்வி நிலையங்களாக அறிவிக்கப்பட்டு மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. மற்றும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. இவற்றில் மாகாண அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

11. நிலம் தொடர்பான அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கும் என அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும், நிலங்களைப் பயன்படுத்தும் உரிமை மாகாண அரசிடம் அளிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால், மத்திய அரசின் கொள்கைக்கு ஏற்பவே மாகாண அரசு நிலத்தைப் பயன்படுத்த வேண்டும் எனக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசுக்குத் தேவையானால் நிலங்களை எடுத்துக்கொள்ளும் அதிகாரம் உண்டு.

நிலத்தின்மீது அதிகாரம் இல்லாமல் ஒரு தேசிய இனம் தனது பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. இத்தகைய கட்டுப்பாடுகளின் விளைவாக தமிழர் பகுதியில் சிங்கள குடியேற்றங்களைத் தடுக்க மாகாண அரசினால் இயலாமல் போய்விட்டது.

12. நீதித்துறை அதிகாரப் பகிர்வுக்கு உட்படுத்தப்படவில்லை. மத்திய அரசின் நீதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழேயே மாகாண நீதித்துறை நீடிக்கிறது. மாகாண அரசுக்கும், மாகாண மேல் நீதிமன்றத்திற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை.

13. இலங்கையின் இணை ஆட்சிமொழியாக தமிழ் விளங்கும் என அறிவிக்கப்பட்டாலும், இன்றுவரையிலும் அது நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை.

மேற்கண்ட யதார்த்த உண்மைகளை சிறிதளவுகூட உணராமல் இந்திய அரசு 13ஆவது சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என சிங்கள அரசிடம் வற்புறுத்தி வருகிறது. இந்தியாவின் நிலைப்பாட்டையொட்டி மேற்கு நாடுகளும் இக்கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இலங்கை இனப் பிரச்சனைக் குறித்தோ. 13ஆவது சட்டத் திருத்தம் குறித்தோ சிறிதளவுகூட புரிந்துகொள்ளாமல் இந்நாடுகள் செயல்படுவது என்பது போகாத ஊருக்குப் புரியாத வழியைக் காட்டுவதாகும்.

13ஆவது திருத்தம் குறித்து சிங்கள ஆய்வாளர்கள் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். இலங்கை இனப் பிரச்சனையின் தீர்வுக்கு 13ஆவது திருத்தம் எந்த வகையிலும் உதவாது, சற்றும் பொருத்தமற்றது என அக்கட்டுரைகளில் வலியுறுத்தியுள்ளனர்.

13ஆவது திருத்தம் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டது. இலங்கை இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குத் தேவையான அதிகார அலகோ, பகிர்வு அதிகாரங்களோ, கூட்டு அதிகாரங்களோ, அதிகாரங்களுக்கான பாதுகாப்போ எதுவும் இல்லாததாகும். இப்பிரச்சனையில் சம்பந்தப்பட்ட ஈழத் தமிழர்களைக் கலந்து ஆலோசித்து இத்திருத்தத்தை முன்மொழிந்திருந்தால் மேலே கூறப்பட்ட குறைபாடுகளை அகற்றியிருக்க முடியும். ஆனால், ஈழத் தமிழர்களை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டு அன்றைய இந்திய தலைமையமைச்சர் இராசீவ்காந்தி இலங்கையுடன் உடன்பாடு செய்துகொண்டார்.

இந்தியா போன்ற சில நாடுகளில் பல்வேறு தேசிய இனங்கள் வாழ்ந்தாலும் எந்தவொரு தேசிய இனமும் மிகப் பெரும்பான்மையாகவோ அல்லது மிகச் சிறுபான்மையாகவோ இருக்கவில்லை. எனவே, ஏதாவது ஒரு தேசிய இனம் பாதிக்கப்படும்போது அந்த இனத்துடன் சேர்ந்து மற்றும் பல தேசிய இனங்களும் குரல் கொடுக்கின்றன. அதன் விளைவாக உருவாகும் அரசியல் அழுத்தம் இந்திய அரசை செயல்பட வைக்கிறது.

ஆனால் இலங்கையில் அதற்கான சாத்தியக் கூறுகள் அறவே இல்லை. அங்கு நிரந்தர பெரும்பான்மையினராக சிங்களரும், நிரந்தர சிறுபான்மையினராகத் தமிழரும் உள்ளனர். இலங்கை அரசும் சிங்கள அரசாகவே அமைந்துள்ளது. அந்த நாட்டின் குடியரசுத் தலைவராகவோ தலைமையமைச்சராகவோ ஒரு தமிழர் எக்காலத்திலும் வர இயலாது. ஆனால் இந்தியாவில் சிறுபான்மை மதமான சீக்கியர்களில் ஒருவரான ஜெயில் சிங் குடியரசுத் தலைவராகவும், மற்றொரு சீக்கியரான மன்மோகன் சிங் தலைமையமைச்சராகவும் வர முடிந்துள்ளது. மற்றும் சிறுபான்மை மதமான முசுலீம்களில் ஜாகிர் உசேன், பக்ருதீன் அலி அகமது, அப்துல் கலாம் ஆகிய மூன்றுபேர் குடியரசுத் தலைவர்களாகப் பதவி வகிக்க முடிந்துள்ளது. மேலும் இந்திய அமைச்சர்களாக, அதிகாரிகளாக, மாநில அமைச்சர்களாக, அதிகாரிகளாகவும் இந்திய இராணுவத்தில் உயர் தளபதிகளாகவும் சிறுபான்மை மதங்களைச் சேர்ந்தவர்கள் வருவதற்கு எவ்விதத் தடையும் இல்லை. ஆனால், இலங்கையில் இதற்கு நேர் மாறாக உயர் பதவிகளில் எதிலும் தமிழர்கள் நியமிக்கப்படுவதில்லை.

ஈழத் தமிழர்கள் 50 ஆண்டு காலத்திற்கு மேலாக இனப்படுகொலைக்கு ஆளாகி வந்தபோதிலும் இந்தியாவோ அல்லது உலக நாடுகளோ அல்லது ஐ.நா. பேரவையோ அவர்களைப் பாதுகாக்க முன்வரவில்லை.

எனவே, ஈழத் தமிழர் பிரச்சனையில் தமிழ்நாட்டுத் தமிழர்களும், உலக நாடுகளில் வாழும் தமிழர்களும் அரசியல் மத, சாதி பேதங்களுக்கப்பால் ஒன்றுபட்டு நின்று குரல் கொடுத்தாலொழிய, அழிவின் விளம்பில் நின்று கதறும் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க முடியாது என்பதை உணர்ந்து செயல்பட முன்வருமாறு உலகத் தமிழினத்தை வேண்டுகிறோம்.

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி

மனம் திறக்கிறார் மனோ கணேசன்

கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் -- பகுதி 2

## - நடராஜா ரவிராஜ் என்ற எனது நண்பன் -




### ஒரு மனித உரிமை போராளி

காலகட்டம்: 2007ம் வருடம். மகிந்த ஆட்சி. கோத்தா பாதுகாப்பு செயலாளர். அமெரிக்க அன்றைய ராஜாங்க செயலாளர் கொண்டலீசா ரைஸ் அமெரிக்க அரசு சார்பில் எனக்கு "சுதந்திர காவலன்"விருதை அறிவித்தார். பொதுவாக சர்வதேச சமூகம் தொடர்பிலும், அதற்கு தலைமை தாங்கிய அமெரிக்கா பற்றியும் எனக்கு கடும் விமர்சனம் இருந்தது. ஆனால், விருதை ஏற்றுக்கொண்டேன். அன்றைய அமெரிக்க தூதுவர் பொப் என செல்லமாக அழைக்கப்பட்ட ரொபர்ட் பிளேக் எனக்கு ஓர் ஆலோசனை சொன்னார். "ஒன்றில் தலைமறைவு (அண்டர்-கிரவுண்ட்) வாழ்க்கையை வாழுங்கள். அல்லது மிகவும் பகிரங்கமாக செயற்படுங்கள்" என்றார். அதில் அர்த்தம் இருந்தது

எனக்கு மனித உரிமைகளை பிடிக்கும். என் உரிமைகளை ஒருபோதும் விட்டு கொடுக்க நான் இசையேன். அதேபோல், அடுத்தவர் உரிமைகளை தட்டி பறிக்கவும் நான் இசையேன். இதுதானே மனித உரிமை என்பதன் எளிமை விளக்கம்?

நான் ஒன்றும் மனித உரிமையானாக பிறக்கவில்லை. யாரும் அப்படி பிறப்பதில்லைதான். ஆனால், நம்மில் சிலர் தம்மை அப்படி நினைக்கிறார்கள். மனித உரிமை பற்றிய அக்கறை, இது பற்றிய உலகளாவிய கோட்பாடுகளை பற்றிய அறிவு, என்பவை வேறு. களத்தில் நின்று போராடுவது என்பது வேறு. முதலாவது சம்பிரதாய, பெரும்பாலும் சிவில் நிறுவன பணி. இரண்டாவது ஜனநாயக களப்போராளி. நாம் இரண்டாம் ரகம்.

எல்லோரையும் போல் வரலாறுதான் என்னையும் படைத்து பணித்தது. நான் இல்லாவிட்டால் அல்லது போயிருந்தால், இந்த இடத்திற்கு இன்னொருவரை வரலாறு உருவாக்கி, பணித்திருக்கும். அவ்வளவுதான். மிகவும் நெருக்கடியான வேளைகளில் தலை நிமிர்ந்து நின்று நெஞ்சை காட்ட முடிந்தால் மட்டுமே, மனித உரிமையாளர் முழுமை பெற முடியும்.



உயிருக்கு அஞ்சினால், உங்கள் மனித உரிமை அறிவு என்பது, "காட்டில் எரியும் நிலவு". அவ்வளவுதான்.

சிலருக்கு வரலாறு முழுக்க நெருக்கடி வேளைகள் வராது. அவர்கள் அதிர்ஷ்டசாலிகள். நான் இதில் துரதிஷ்டசாலி.

சகோதரன் ரவியின் கொலை, அரச பயங்கரவாதம் என உறுதிபட தெரிந்தது. மனித உரிமைகளுக்காக போராடிய எங்களை அரச மற்றும் பேரினவாத அரசியல்வாதிகள், ஊடகங்கள் நேரடியாகவே "புலி", "பயங்கரவாதி", "அமெரிக்க ஏஜன்ட்" என கரித்துக்கொட்டினார்கள்.

வெள்ளை வேன் கடத்தல், கைதாகி காணாமல் போதல், படுகொலை, வகைதொகையற்ற சுற்றி வளைப்பு என்ற கைதுகள், கப்பம், மிரட்டல் ஆகிய அரச மற்றும் துணைக்குழு பயங்கரவாத நடவடிக்கைளை எதிர்த்தே மக்கள் கண்காணிப்பு குழு என்ற மனித உரிமை அமைப்பை நிறுவினோம்.

ரவி, எங்களது மக்கள் கண்காணிப்பு குழுவிலே பதவி வகித்தார் என்ற காரணத்தினாலே என்மீது அழுத்தம் அதிகரித்தது. அடுத்து நான்தான் கொல்லப்படுவேன் என கொழும்பிலே பெருவாரியான தமிழ் மக்கள் கவலையுடன் நம்பி, அதிரடி செய்தியை (ப்ரேகிங் நியூஸ்) எதிர்பார்க்கவே தொடங்கி விட்டார்கள்.

வேடிக்கை என்னவென்றால் அதை நானே நம்ப தொடங்கினேன்.

ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து வெளியில் செல்லும் பொழுது மாலை உயிருடன் வீடு திரும்புவேனா என நானே சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டேன்.

மாலையில் வீட்டுக்கு வரும் நான், எனது பாதுகாப்பு அதிகாரிகளை எனது வீட்டில் அவர்களது அறையிலே இருக்கவிட்டு, அவர்களுக்கு தெரியாமல் பின்புற மதில் சுவர் ஏறி குதித்து, பக்கத்து தெருவிற்கு வந்து, அங்கே காத்திருக்கும் நண்பர்களின் வாகனங்களில் ஏறி, இரவில் வேறு இடங்களில் தங்குவது வழக்கம்.

சில சந்தர்ப்பங்களில் இரவுகளை வாகனத்திலேயே கடத்தியிருக்கின்றேன்.

இவ்வேளையில் கொழும்பில் அமெரிக்க தூதுவராக இருந்த ரொபர்ட் ப்ளேக் என்ற "பொப்" எனது நண்பரானார். அமெரிக்க தூதரக அரசியல் செயலாளர் மைக் என் நெருங்கிய நண்பரானார்.

அமெரிக்க அரசாங்கம், "சுதந்திர காவலன்" என்ற விருதை எனக்கு வழங்கியது. அதாவது அந்த விருதுக்கு என்னை தெரிவு செய்து, அமெரிக்காவின் அன்றைய ராஜாங்க செயலாளர் கொண்டலீசா ரைஸ் அறிவித்தார். அந்த விருதைப் பெறுவதற்கு நான் அமெரிக்கா சென்றதாகவும், அந்த விருதுடன் பெருந்தொகை அமெரிக்க டாலர்கள் பரிசும் எனக்கு வழங்கப்பட்டதாகவும், பாராளுமன்றத்தில் பேச தொடங்கினார்கள். அரசு ஆதரவு ஊடகங்கள் கொச்சையாக இப்படியே எழுதின.

உண்மையில் அந்த விருதுடன் பணப்பரிசு தொகை எதுவும் கிடையாது. அங்கீகாரம் மட்டுமே. அந்த விருதை வாங்க நான் அமெரிக்கா போயிருக்கலாம். ஆனால் போகவில்லை. ஏனென்றால் அமெரிக்கா பற்றி எனக்கு விமர்சனம் இருந்தது.



அமெரிக்காவின் நலன்களுக்காவோ அல்லது அமெரிக்கா சொல்லியோ நான் மக்கள் கண்காணிப்பு குழுவை ஆரம்பிக்கவில்லை.

ஆனால் இந்த விருதை பெற்றுக்கொண்டதற்கு ஒரு காரணம் இருந்தது. அந்த காரணத்தை நண்பர் ரொபர்ட் ப்ளேக்தான் எனக்கு தெளிவாக சொல்லித்தந்தார். அரச பயங்கரவாதத்தை எதிர்த்து செயற்படும் பொழுது ஒன்றில் "அண்டர் கிரவுண்ட்" என்ற தலைமறைவு வாழ்க்கையை வாழ வேண்டும். அல்லது மிகவும் பகிரங்கமாக செயற்பட வேண்டும். இடைநடுவில் நின்றுவிட கூடாது. இடைநடுவில் நின்றால் அது பேராபத்தை தரும் என்று தெளிவாக எடுத்து கூறினார்.

இதன் அர்த்தம் என்ன?
ஒன்றில்;

நான் போராட்ட குழுக்களை போல தலைமறைவாக இருந்தால் அரச பயங்கரவாதத்தில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம். அதாவது அரச பயங்கரவாதத்தால் சுலபமாக என்னை போட்டுத்தள்ள முடியாது.
அல்லது;

தேசிய மற்றும் உலக அங்கீகாரம் பெற்று வெளிப்படையாக, பகிரங்கமாக செயற்பட வேண்டும். இப்படி இருந்தால் அரச பயங்கரவாதம் என்னை அணுகுவதற்கு ஒருமுறைக்கு பல முறை யோசிக்கும்.

நான் கொல்லப்பட்டால் அந்த குற்றச்சாட்டு முழுமையாக அரசாங்கத்தின் மீது விழுந்துவிடும் என்பது மட்டும் அல்ல, வேறு எவராவது என்னைப் போட்டு தள்ளினாலும் கூட அதுவும் அரசாங்கத்தின் கணக்கிலே விழுந்துவிடும் என்பதால் அரசாங்கம் பல்லை கடித்துக்கொண்டு, வேறு யாராலும் கூட எனக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்று கண்காணிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படும்.

தலைமறைவிற்கும் செல்லாமல், பகிரங்கமாக, வெளிப்படையாகவும் செயற்படாமல் இடைநடுவிலே இருந்தால்தான் போட்டு தள்ளுவதற்கு அரச பயங்கரவாதத்திற்கு வாய்ப்பு ஏற்படும் என்பது உலகளாவிய பொது விதி என எனக்கு கொழும்பிலிருந்த பல வெளிநாட்டு தூதர்களும் சொல்லித்தந்தார்கள்.

தலைமறைவில் வாழ எனக்கு வாய்ப்பில்லையே. ஆகவே பகிரங்கமாக பேசி, எழுதி, போராடினேன்.

ஆனாலும் இது எனது அம்மாவை (இப்பொழுது உயிருடன் இல்லை) திருப்திப்படுத்தவில்லை. "ஊருக்கு ராஜாவாக இருந்தாலும் கூட வீட்டுக்கு பிள்ளை" என்ற காரணத்தினாலே, அவர் என்னை நாட்டைவிட்டு வெளியேறுமாறு தொடர்ந்து வலியுறுத்தினார்.

எனது அம்மாவைப் பற்றி வேறொரு இடத்தில் சொல்வதால், அவர் பற்றி இப்போது பேசப்போவதில்லை.

இருமுறை நாட்டை விட்டு வெளியேறி, ஒரு முறை அரை மாதமும், அடுத்த முறை ஒரு மாதமும் வெளிநாட்டில் வாழ்ந்தேன்.

வெளிநாடு என்றால் அமெரிக்கா, ஐரோப்பா அல்ல. நம் தந்தையர் நாடு தமிழகத்தில், நான் விரும்பும் சென்னை பட்டணத்தில், நான் இப்படி தற்காலிகமாக தங்கி இருந்தேன்.

இரண்டாம் முறை வெளியேற்றத்திற்கு முன், நான் கட்டாயமாக நாட்டில் இருக்க கூடாது என என் தாயுடன் சேர்ந்து கொழும்பிலிருந்த பிரபலமான வெளிநாட்டு தூதுவர்கள் குழுவும் சொன்னது.

ஐரோப்பிய யூனியனின் தூதுவராக அப்போது இருந்த நண்பர் ஜூலியன் என் வீட்டில் வந்து என்னை சந்தித்தார்.

"எங்கள் தூதுவர்களின் வாராந்த கூட்டத்திலே உங்களைப் பற்றி பேசி நாங்கள் ஒரு முடிவெடுத்திருக்கின்றோம். அதை சொல்லத்தான் இங்கே வந்தேன். நீங்கள் நாட்டைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டும். ஐரோப்பாவில் நீங்கள் விரும்பிய நாட்டில் எங்கள் விருந்தாளியாக இருக்கலாம். குறைந்த பட்சமாக இரண்டு வருடங்களாவது நீங்கள் நாட்டுக்கு வெளியில் வாழவேண்டும் என நாங்கள் நினைக்கின்றோம்." என்று கூறினார்.

நான் சிரித்து விட்டு ஒரு கணமும் யோசிக்காமல் அவரது யோசனையை மறுத்துவிட்டேன். ரொம்ப தூரத்தில் சென்று வாழ்ந்தால் நாட்டு நடப்புகளை கண்காணிக்க முடியாது. எனது மக்கள் இங்கே இருக்கின்றார்கள். ஆகவே உங்களுக்கு நன்றி. என் அம்மாவின் தொல்லை தாங்க முடியலை. நான் இந்தியாவிற்கு போய் ஒரு மாதம் இருந்துவிட்டு வருகிறேன் என்று சொன்னேன்.

அவ்வேளையில் என் வீட்டை விட்டு வெளியேற முடியாத கடும் நிலைமை. என்னை தனது மெய்ப்பாதுகாவலருடன், தனது குண்டு துளைக்காத வாகனத்தில் ஜூலியன் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து சென்றார்.

அங்கே விசேட விருந்தினர் அறையிலே நானும், அவரும் இருந்த போது, ஒரு வேடிக்கை.

அவ்வேளை வெளிநாடு செல்வதற்காக அங்கே அமைச்சர் மகிந்த சமரசிங்க வந்தமர்ந்தார்.

வேடிக்கை, அன்றைய மகிந்த அரசில் மகிந்த சமரசிங்கவிற்கு மனித உரிமை துறை.

"மனித உரிமை அமைச்சர் அவர்களே, உங்கள் நாட்டின் மனித உரிமை போராளியை, அவர் உயிர் வாழ வெளிநாட்டுக்கு வழி அனுப்பவே நான் இங்கே வந்தேன்." என்று ஜூலியன், மகிந்த சமரசிங்கவின் முகத்துக்கே சொல்லியது எனக்கு ஞாபகம் இருக்கின்றது.

முகத்தில் அசடு வழிய சமரசிங்க சிரித்துவிட்டு சும்மா இருந்துவிட்டார்.

இப்போது மகிந்த சமரசிங்க இலங்கையின் அமெரிக்க தூதுவராக வோஷிங்டனில் பணி செய்கிறார்.

இதுதான் மனித உரிமை போராளி என்ற எனது ஆரம்பம். இப்போது அன்றைய நெருக்கடி இல்லை. ஆகவே சம்பிரதாய மனித உரிமையாளர்கள் செயற்படுகிறார்கள். நான் அரசியலில் இருக்கிறேன்.

2005-2009 கட்டத்தில் கொழும்புக்கு எம்மை நம்பி வந்த, வட கிழக்கை சேர்ந்த உடன்பிறப்புகளுக்கே, என் பணி அதிகம் பயன்பட்டது.

பலவேளைகளில் தகவல் கிடைத்து, பொலிஸ் நிலையங்கள், தெரு காவல் சாவடிகள் இவற்றுக்கு நேரடியாகப் போய் தமிழர்களை மீட்டு வந்திருக்கிறேன்.

இதில் ஒரு விஷயம் உள்ளது. காணாமல் போனவர்களை மீட்பது என்பது வேறு. காணாமல் போவதை தடுப்பது என்பது வேறு. சிலருக்கு இது புரியாது. "காணாமல் போன எல்லோரையும் மீட்க முடிந்ததா?" என அப்பாவித்தனமாக கேட்பார்கள்.

எமது இயக்கம் காரணமாக, மேல் மாகாணத்தில் ஐயாயிரம் பேர் காணாமல் போகவேண்டிய நிலைமை, ஆயிரம் பேருடன் முடிந்தது.




நாம் சும்மா இருந்திருந்தால் இது நடந்திருக்கும்.

ஏனென்றால், அரசியல் காரணமாக கடத்துவது முடிந்து, கடைசியில் கொழும்பில் துணைக்குழுக்கள், கிரிமினல்கள் இனவாதம், கப்பம், பணம், தனிப்பட்ட பழிவாங்கல் ... என்று பல்வேறு காரணங்களுக்காக சாதாரண தமிழர்கள், வர்த்த தமிழர்கள், ஏன்..., கடைசியில் முஸ்லிம் வர்த்தகர்களைக்கூட கடத்த, மிரட்ட தொடங்கி விட்டார்கள்.

இந்தியா செய்திகள் India News

# "நீ பேனா சிலையை வெச்சினா நான் வந்து உடைப்பேன்!"

## - சீமான் எச்சரிக்கை



மெரினா கடற்கரையில் கடல் பகுதியில் பேனா சிலை அமைப்பத்தால் உடைப்பேன் என சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் திமுக ஆட்சி நடந்து வரும் நிலையில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பேனாவை பெரிய அளவில் மெரினா கடற்கரை பகுதியை ஒட்டிய கடல்பகுதியில் அமைக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பிற்கு ஆதரவும் எதிர்ப்பும் தொடர்ந்து இருந்து வருகின்றது.

இந்நிலையில் இன்று நடைபெற்ற பேனா சிலை அமைப்பது குறித்த கருத்து கேட்பு கூட்டத்தில் மீனவ அமைப்புகள், நாம் தமிழர் கட்சி உள்ளிட்டோர் பேனா சிலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்தனர். கழிமுக பகுதியில் பேனா சிலை அமைப்பதால் மீனவர்கள் வாழ்வாதாரமும், மீன் வளமும் பாதிக்கப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் அரிய ஆமைகளான பங்குனி ஆமைகள் எனப்படும் ஆலிவர் ரிட்லி ஆமைகள் வாழிடமாகவும், முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும் இடமாகவும் மெரினா கடற்கரை உள்ளது.

இந்நிலையில் கருத்து கேட்பு கூட்டத்தில் பேனா சிலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்த நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் நினைவு சின்னம் வைக்க எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதை கடலுக்குள் வைப்பதைதான் எதிர்க்கிறோம். அண்ணா அறிவாலயத்திலோ, கலைஞர் நினைவிடத்திலோ பேனாவை வைத்துக் கொள்ளலாமே! கடலுக்குள்தான் வைக்க வேண்டுமா?" என கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் அவ்வாறு கடலுக்குள் வைப்பதால் மீனவ கிராமங்கள் பாதிக்கப்படும் என அவர் பேசியபோது கீழிருந்து சிலர் அவரது பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து கூச்சலிட்டதால் சலசலப்பு எழுந்தது. அப்போது சிலையை வைத்தே தீருவோம் என்று கீழிருந்து ஒருவர் கூச்சலிடவே "நீ சிலையை வைத்தால் நான் பேனா சிலையை உடைப்பேன்" என சீமான் ஆவேசமாக பேசியுள்ளார். இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது.

# பாலியல் வன்கொடுமை வழக்கில் குஜராத் சாமியார் ஆசராம் பாபுவுக்கு ஆயுள் தண்டனை



பாலியல் வன்கொடுமை வழக்கில் சாமியார் ஆசராம் பாபுவுக்கு ஆயுள் தண்டனை விதித்து குஜராத் செசன்ஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆசிரமங்கள் தொடங்கிய ஆசராம்பாபு -- குஜராத்தின் காந்திநகர் அருகே ஆசிரமம் அமைத்து செயல்பட்டு வந்த ஆசராம் பாபுவுக்கு ஏராளமான பக்தர்கள் சேர்ந்ததை அடுத்து, அவர் மேலும் பல இடங்களில் ஆசிரமங்களை அமைத்தார். ராஜஸ்தானில் உள்ள ஆசிரமம் ஒன்றில் இருந்தபோது 2013-ம் ஆண்டு ஆசிரமத்தில் இருந்த சிறுமியை இவர் பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, கைது செய்யப்பட்ட ஆசராம் பாபு, ராஜஸ்தானின் ஜோத்பூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆசராம் பாபுவால் பாதிக்கப்பட்ட சிறுமி தொடர்ந்த வழக்கை விசாரித்த காந்திநகர் செசன்ஸ் நீதிமன்றம், அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அவரை குற்றவாளி என்றும் அறிவித்தது.

இதையடுத்து, இந்த வழக்கில் ஆசராம் பாபுவுக்கு ஆயுள் தண்டனையும், 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து நீதிபதி டி.கே. சோனி இன்று (ஜன 31) தீர்ப்பளித்தார்.


இந்த வழக்கில் கடந்த 9 ஆண்டுகளாக சிறையில் இருந்தவாறு வீடியோ கான்பரன்சிங் முறையில் வழக்கில் ஆஜராகி வந்த ஆசராம் பாபு, நேற்றும் அதே முறையில் ஆஜரானார். தீர்ப்பை அடுத்து, அவர் தொடர்ந்து ஜோத்பூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

மகனுக்கும் ஆயுள்சிறை -- ஆசராம் பாபுவால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமியின் தங்கையை, ஆசராம் பாபுவின் மகன் நாராயண் சாய் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியதாக எழுந்த குற்றச்சாட்டில் கடந்த 2019-ம் ஆண்டு அவருக்கு சூரத் செசன்ஸ் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது நினைவுகூரத்தக்கது.




# யார் யாரை நல்வழிப்படுத்துவது?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



1970களில் தமிழ் இளைஞர் பேரவையில் உறுப்பினராக இருந்தவரும் தமிழரசு கட்சியோடு நெருங்கிச் செயற்பட்டவரும், பிந்நாளில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவரும், இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின், இணைந்த வடக்கு கிழக்கில் முக்கிய பொறுப்பில் இருந்தவருமாகிய, ஒரு மூத்த அரசியல் செயற்பாட்டாளரின் நேரடி அனுபவம் இது... தமிழரசுக் கட்சியோடு நெருங்கிச் செயற்பட்ட காலப்பகுதியில் இளையவர்கள் அமிர்தலிங்கத்தின் வீட்டு முன் விறாந்தையில் தங்குவதுண்டாம். ஒருநாள் இரவு அவர்கள் சுவரொட்டி ஒட்டுவதற்காக போகும்பொழுது அவர்களோடு சேர்ந்து அமிர்தலிங்கத்தின் மகன் ஒருவரும் சென்றிருக்கிறார். இரவு முழுதும் மகனைத் தேடிக் காணாத அமிர்தலிங்கம் அடுத்த நாள் காலை இந்த இளைஞர்களோடு அவரைக் கண்ட பொழுது பின்வரும் தொனிப்படப் பேசியிருக்கிறார்... "நீயும் படிக்காமல் இவங்களப் போல காவாலியளாத் திரியப் போறாயா?".

1970களில் அமிர்தலிங்கம் எந்த நோக்கு நிலையில் இருந்து அவ்வாறு கூறினாரோ, அதே நோக்கு நிலையில் இருந்துதான் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளின் பின் சுமந்திரனும் கதைக்கிறாரா? "20 வருடங்களாகக் கூட இருந்தவர்களை நல் வழிப்படுத்த எடுத்த முயற்சியிலும் நாம் தோல்வி அடைந்து விட்டோம்" இவ்வாறு சுமந்திரன் அண்மையில் சாவகச்சேரியில் வைத்துக் கூறியுள்ளார். முன்பு பங்காளிக் கட்சிகளாக கட்சிகளை நோக்கித்தான் அவர் அவ்வாறு கூறியுள்ளார். அவர்களை நல்வழிப்படுத்த முற்பட்டோம் என்று கூறுகிறார். ஆயின் அவர்கள் திருத்தப்பட வேண்டிய குற்றவாளிகள் என்று பொருள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை குற்றவாளிகள் அல்லது திருத்தப்பட வேண்டியவர்கள் என்று அவர் கருதுகிறாரா? இரண்டு தசாப்தங்களாக ஒன்றாகக் குடும்பம் நடத்திவிட்டு இப்பொழுது இனித் திருந்த மாட்டார்கள் என்று கூறுகிறாரா?

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நல்வழிப்படுத்துவது என்பது ஏறக்குறைய அரசாங்கம் கூறுவதுபோல புணர்வாழ்வழிப்பது என்ற பொருளில்தான். ஒரு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அவ்வாறு கூறத்தக்க மனோநிலை எங்கிருந்து வருகிறது? நாங்கள் தூய மிதவாத கட்சி. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள். எமது கைகளில் ரத்தம் இல்லை. கொலைப் பழி இல்லை. நாங்கள் எப்பொழுதும் நல்வழியில்தான் செல்கிறோம்... என்று நம்பும் ஒரு மிதவாத பாரம்பரியத்தில் இருந்தா அவ்வாறு கூறப்படுகிறது?

ஆனால் தமிழரசுக் கட்சி அப்படி கூறமுடியாது. ஏனெனில் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட அரசியல் செயற்பாட்டாளரும் உட்பட ஆயிரக்கணக்கான இளவயதினரை ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தூண்டியதே தமிழ் மிதவாதிகள்தான். குறிப்பாக தமிழரசு கட்சியானது தேர்தல்களில் தோற்கும்பொழுது தீவிர தேசிய நிலைப்பாட்டை கையில் எடுக்கும். (இப்பொழுது, பேச்சுவார்த்தை மேசையில் தீவிரமான நிலைப்பாட்டை எடுப்பது போல). அப்பொழுது அவர்கள் பேசும் வீர வசனங்களில் மயங்கி இளையோர் அவர்கள் பின் செல்வார்கள். அந்த இளையோரை தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராகத் திருப்பி அவர்களைத் தண்டிக்குமாறு தூண்டியது தமிழ் மிதவாதிகள்தான். மேடைகளில் அவர்கள் செய்த முழக்கங்களை கலாநிதி சிதம்பரநாதன் "வார்த்தை வன்முறை - வேர்பல் வயலன்ஸ்" என்று வர்ணிப்பார். இவ்வாறு தமிழ் மிதவாதிகளால் தூண்டப்பட்டு போசிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டதே தமிழ் ஆயுதப் போராட்டம் ஆகும். எனவே தமிழரசுக் கட்சி இதில் தனக்கு சம்பந்தமில்லை என்று கூறமுடியாது. தனது கையில் ரத்தம் இல்லை என்றும் கூறமுடியாது.

தமிழரசு கட்சியின் தேர்தல் மேடைகளில் இளையோர் உணர்ச்சிவசப்பட்டு விரலை வெட்டி தலைவர்களின் நெற்றியில் ரத்தத் திலகம் வைத்தார்கள். அவ்வாறு ரத்தத்தால் பொட்டு வைத்த ஒருவர் பின்னாளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத்துறை பொறுப்பாளராக வந்தார். அவருக்கு இயக்க பெயரும் பொட்டு என்று வைக்கப்பட்டது. இப்படியாக இளைஞர்களை ரத்தம் சிந்துமாறு ஊக்குவித்த ஒரு கட்சி இப்பொழுது தன்னை ஒரு தூய மிதவாதக் கட்சியாக கூறிக்கொள்ள முடியாது.

ஏன் அதிகம் போவான்? தமிழரசுக் கட்சியின் தலைவர் அமுதலிங்கத்தின் மகன் இந்தியாவில் ஒரு இயக்கத்தை தொடங்கிய பொழுது அதை அமிர்தலிங்கம் தடுக்கவில்லை.

இதில் நான் சுத்தம் நீ அசுத்தம் என்று கறுப்பு வெள்ளையாக சிந்திக்க முடியாது. இப்போதிருக்கும் அரசியல் ஆயுதப் போராட்டத்தின் பின்னரானது. ஆயுதப் போராட்டத்தின் விளைவுந்தான். எதுவும் வெற்றிடத்தில் இருந்து தோன்றுவதில்லை. ஆயுதப் போராட்டம் அதற்கு முந்திய மிதவாத அரசியலின் விளைவு. இப்போதுள்ள மிதவாத அரசியல் ஆயுதப் போராட்டத்தின் விளைவு. இப்பொழுது தமிழரசு கட்சி கூறுகிறது, முன்னாள் பங்காளிக் கட்சிகளைத் திருத்தப் போவதாக.

தமிழ் மக்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை கடந்து வந்த மக்கள். ஆயுதப் போராட்டம் என்றாலே எல்லாருடைய கைகளிலும் ரத்தம் இருக்கும். இதில் எல்லாருக்கும் ஏதோ ஒரு விகிதமளவுக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. தமிழ் மக்கள் தங்களுடைய இறந்த காலத்தைக் கிண்டத் தொடங்கினால் பிணமும் நிணமும் எலும்புக்கூடுகளுந்தான் வெளியேவரும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இறந்த காலத்தை கிண்டுவது என்பது அதன் பெரும்பாலான அர்த்தத்தில் புதைமேடுகளைக் கிண்டுவதுதான். அப்படிக் கிண்டத் தொடங்கினால், ஒருவர் மற்றவரைக் குற்றவாளியாக்குவதிலேயே தேசம் பல துண்டுகளாக சிதறிப் போய்விடும்.

ஓர் ஆயுத மோதலுக்கு பின்னரான அரசியல் என்ற அடிப்படையில், தமிழ் மக்கள் இரண்டு தளங்களில் தமது அரசியலை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. ஒன்று நீதிக்கான போராட்டம். இரண்டு அந்தப் போராட்டத்துக்காக தேசத் திரட்சியை ஆகக் கூடியபட்சம் பலமான நிலையில் வைத்திருப்பது. அவ்வாறு தேசத்திரட்சியை பலமான நிலையில் பேணுவதென்றால், அதற்கு தமிழ் அரசியலில் பண்புருமாற்றம்-trasformation- அவசியம். அதாவது வெளி நோக்கிய நீதிக்கான போராட்டம் உள்நோக்கிய பண்புருமாற்றம். அதற்கு பரந்த மனம் கொண்ட பெருந்தலைவர்கள் வர வேண்டும்.

கூட்டமைப்பு எனப்படுவதே 2009க்கு முந்திய ஒரு பண்புருமாற்றத்தின் விளைவுதான். நவீன தமிழ் அரசியலில் தோன்றிய சாம்பல் பண்பு அதிகமுடைய ஒரு கட்டமைப்பு அது. அப்பண்புரு மாற்றத்தை 2009க்குப் பின் அடுத்த கட்டக் கூர்ப்புக்கு எடுத்துச் செல்ல சம்பந்தர் தவறிவிட்டார். வரலாறு அவருக்கு நிர்ணயகரமான, உன்னதமான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆனால் வரலாறு அவருக்கு வழங்கிய பொறுப்பை அவர் பொருத்தமான விதத்தில் நிறைவேற்றவில்லை. ஒரு பண்புருமாற்ற காலகட்டத்தை அவர் வீணடித்து விட்டார். ஒரு பண்புருமாற்றத்துக்குத் தலைமை தாங்க அவரால் முடியவில்லை. தமிழ் அரசியலில் முன்னெப்பொழுதும் தோன்றியிராத ஒரு நூதனமான கூட்டுசுமார் 20 வருடங்கள் நீடித்திருந்த ஒரு கூட்டு; தமிழ் மிதவாத அரசியலிலேயே அதிகளவு ஆசனங்களை வெற்றி பெற்ற ஒரு கூட்டு அவருடைய கண் முன்னாலே சிதைந்து போய்விட்டது. தான் தலைமை தாங்கிய ஒரு கூட்டு அவ்வாறு சிதையும் பொழுது அதைக்குறித்து உத்தியோகபூர்வமாக அவர் எதையும் சொல்லவில்லை. அல்லது சொல்ல முடியவில்லை. கூட்டமைப்பின் சிதைவு என்பது சம்பந்தருடைய தலைமைத்துவத்தின் தோல்வியுந்தான். தமிழ் பண்புருமாற்ற அரசியலின் தோல்வியுந்தான்.

அதனால்தான், கடந்த சில கிழமைகளுக்குள் கூட்டமைப்பு மட்டும் சிதையவில்லை தமிழரசு கட்சியும் இறுக்கமான ஒரு கட்சியாக உள்ளதா என்ற கேட்குமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன.. கடந்த கிழமை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும்பொழுது கட்சித் தலைமையகத்தில் மார்ட்டின் வீதியில் மூத்த தலைவர்கள் காத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனால் வேட்பு மனுக்கள் சுமந்திரனின் அணியைச் சேர்ந்த ஒருவருடைய அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு நேரடியாக கச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக குற்றம் சாட்டப்படுகிறது. அதாவது கட்சித் தலைமையின் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இல்லை என்று பொருள். அது மட்டுமல்ல, கிளிநொச்சியில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது, சுமந்திரனுக்கு விசுவாசமான அணியைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் சுயேச்சைக் குழுவாக போட்டியிடுகிறார்கள். அவர்களில் சிலர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியில் இணைந்து விட்டார்கள்.

கடந்த திங்கட்கிழமை கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரின் வீட்டுக்கு முன் சுடலைக் கழிவுகள் ஒரு மூட்டையாகக் கட்டிப் போடப்பட்டுள்ளன என்பதனை அவர் முகநூலில் பதிவேற்றியுள்ளார். அதை யார் செய்தது என்பது நிரூபிக்கப்படவில்லை. எனினும் முகநூலில் பிரதேச சபை தவிசாளர் எழுதிய குறிப்பில், சுயேட்சைக் குழுவின் மீதே குற்றஞ் சாட்டப்படுகிறது. ஒரே கட்சிக்குள் ஏற்பட்ட மோதல்கள் சுடலைச் சாம்பலை பரிசளிக்கும் ஒரு வளர்ச்சிக்கு வந்து விட்டனவா? இருபது வருடங்களாக ஒன்றாக குடும்பம் நடத்தி விட்டு இப்பொழுது முன்னாள் பங்காளிகளை ஒட்டுக் குழுக்கள் என்று அழைக்கலாமென்றால் நாளை, கட்சியை உடைத்துக் கொண்டு வெளியேறுபவர்களை எப்படி அழைக்கப் போகிறார்கள்?

## குளிர் காலம்

### (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

குளிர்காலம் தொடங்கக் கூதலும் வந்தது
வளியுடன் குளிர்ச்சி வாட்டம் தந்தது
வெளியே செல்லவும் வீதியில் நடக்கவும்
வழியே இன்றி வாடிக் கிடந்தோம்.
கொட்டும் பனியைக் கூட்டித் தள்ளிட
சொட்டும் வியர்வை சூடாய் உடலிலே.!
பாட்டம் பாட்டமாய்ப் பொழியும் தூறலை
கூட்டிக் குவிக்கக் கடுப்பு வருமே.!
சிறுவருக் கெல்லாம் சிறுபனி குதூகலம்
அறுபது கடந்தோர்க் கதுவே அவலம்
விறுவிறு நடையாய் வேலைக்குச் சென்றோர்
சறுக்கி விழுந்து சஞ்சலம் கொண்டனர்.
புள்ளினம் எல்லாம் புகலிடம் தேடின
கள்ளமில் குழந்தைகள் கடும்நோய் கொண்டன
வெள்ளைக் காரரும் விரும்பும் காலமாம்
பிள்ளை ஜேசு பிறந்தநாள் வருவதால்.
மொட்டை மரமெலாம் முகிழ்ந்தன பனிப்பூ
வெட்டை வெளியெலாம் விரிந்தன வெண்பாய்
கொட்டும் பனிதான் குலப்பன் தந்தாலும்
கட்டாயம் செல்வோம் கழகமாம் மூத்தோர்
வருடம் ஒருமுறை வருகிற சீதளம்
தெருவெலாம் சிதைந்துச் சேதம் அடைந்திடும்
இரும்பு விளைய ஏற்ற காலமாம்
விரும்பும் கனடா வீழ்ந்திடும் பனியையே!

---

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# இலங்கை: "F" சொல்பற்றிய அதிகாரப் பகிர்வு, பிரிவினை மற்றும் தற்போதைய விவாதங்கள்

ஜெயம்பதி விக்ரமரத்ன எம்.பி. ஏ. **((J-Pura)**, கலாநிதி **(Ph.D (Pera)** அவர்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் சட்டப் பயிற்சியாளராக பணியாற்றி வருகிறார். அவர் ஒரு சுயாதீன ஆராய்ச்சி அமைப்பான அரசியலமைப்பு ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குநராக உள்ளார். கலாநிதி விக்ரமரத்ன அரசியலமைப்பு விவகார அமைச்சகத்தில் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். 2000 ஆம் ஆண்டு அரசியலமைப்பு மசோதாவை உருவாக்கிய அரசின் அரசியலமைப்பு வரைவுக் குழுவின் உறுப்பினராக இருந்தார். 2015 ஆம் ஆண்டில், அரசியலமைப்பு விவகாரங்களில் இலங்கை சனாதிபதியின் மூத்த ஆலோசகராக இருந்தார். அரசியலமைப்பின் 19 வது திருத்தத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார். டாக்டர் விக்ரமரத்ன ஓகஸ்ட் 2015 முதல் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். புதிய அரசியலமைப்பின் வரைவைத் தயாரிப்பதில் பொறுப்பான அரசியலமைப்புச் சபையின் இயக்குநராகவும் உறுப்பினராகவும் உள்ளார். லாவோஸின் **(Laos)** சட்டத் துறையில் அவருக்கு விரிவான பட்டறிவு உள்ளது, கடந்த 16 ஆண்டுகளாக ஐ. நா. மேம்பாட்டுத் திட்டம் **(UNDP)**, ஐ. நா. தடுப்புப் படை, **(UNODC),** ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சுவீடி' ஆகியவற்றிற்காக அங்கு பணியாற்றியுள்ளார்.

## சுருக்கம்

அரசியலமைப்புக் கோட்பாட்டில், ஒற்றையாட்சி என்பது அரசு அதிகாரத்தின் ஒரே ஒரு இறுதி ஆதாரமாக இருக்கும் அதே வேளை பல இலங்கையர்களுக்கு ஒற்றையாட்சி என்பது ஒற்றுமை அல்லது ஒரு நாடு என்று பொருள் படும். அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வை அறிமுகப்படுத்தியது, ஆனால் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்தி மாகாணத்துக்குரிய அதிகாரங்களை மத்திய அரசுக்கு திரும்பப் பெற்று வருகின்றன. எந்தவொரு அதிகாரப் பகிர்வையும் எதிர்க்கும் சிங்கள தேசியவாதிகள் அதிகாரப் பகிர்வையும் கூட்டாட்சி வாதத்துடன் சமன்படுத்துகின்றனர். மேலும் அதிகாரப் பகிர்வானது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற பயத்தை எழுப்புகின்றனர். மறுபுறம், ஒரு ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பசிர்வு பெரும்பான்மையினரின் ஆட்சிக்கும் அதிகாரத்தை மையப்படுத்தற்கும் வழிவகுக்கும் என்று தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர். இந்தச் சுருக்கமான கட்டுரையில், இலங்கையின் சூழலில் பரவலாக்கத்தின் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் அரசியலமைப்புப் பேரவையின் வழிநடத்தல் குழுவின் சமீபத்திய இடைக்கால அறிக்கை உட்பட இலங்கையின் சூழலில் (அரசியல்) பரவலாக்கத்தின் வளர்ச்சியை ஆராய்கிறது.

## அறிமுகம்

இலங்கை நான்கு முக்கிய சமூகங்களைக் கொண்ட ஒரு பன்முக கலாச்சார சமூகமாகும் - சிங்களவர்கள் (74.9**%**), தமிழர்கள் (11.2**%**), முஸ்லிம்கள் (9.2**%**) மற்றும் மலைநாட்டுத் தமிழர்கள் (4.2**%**). செறிவூட்டப்பட்ட மற்றும் சிதறடிக்கப்பட்ட சமூகங்களைக் கொண்ட இலங்கையின் மக்கள்தொகை சிக்கலானது. இத்தகைய சூழ்நிலையில் அனைத்து சமூகங்களுக்கும் அரசு அதிகாரத்தில் உரிய பங்கை வழங்கும் அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வது சவாலாக உள்ளது.

கூட்டாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வு பல நாடுகளில் பிரிவினைவாத சவால்களை எதிர்கொள்வதில் வெற்றிகரமான கருவிகளாக இருந்தபோதிலும், இலங்கையில் அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் பலர் அது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற அச்சத்தை மக்களிடையே பரப்பியுள்ளனர்.

1972 இன் முதலாவது குடியரசு அரசியலமைப்பில் இலங்கை அரசை 'ஒற்றையாட்சி' என வர்ணிப்பதும், 1978 அரசியலமைப்பின் மூலம் அது நிலைநிறுத்தப்பட்டதும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கான முயற்சிகளுக்குத் தடையாக உள்ளன. அரசியலமைப்புக் கோட்பாட்டில், ஒற்றையாட்சி என்பது மத்திய அரசு உச்சமானது. நிர்வாகப் பிரிவுகள் மத்திய அரசு நியமித்த அதிகாரங்களை மட்டுமே பயன்படுத்துகின்றன. சுருங்கச் சொன்னால், அரச அதிகாரத்திற்கு ஒரேயொரு மூலமே உள்ளது. ஆனால் பல இலங்கையர்களுக்கு, 'ஒற்றையாட்சி' **('unitary')** என்பது 'ஒருமை' **(oneness)** அல்லது 'ஒரு நாடு **(one country)** என்பதாகும். சிங்கள மொழியில் 'ஒற்றையாட்சி' என்ற சிங்களச் சொல் 'ஏகயா' **(aekiya')** என்றும் ஏக்க **('eka')** என்பது 'ஒன்று' **('one')** என்றும் பொருள்படும். இவ்வாறு, மாநிலத்தின் ஒற்றையாட்சித் தன்மையை மாற்றுவது, நாட்டைப் 'பிளவுபடுத்துவது' என்று சிலரால் பார்க்கப்படுகிறது.

பெடரல் கட்சியின் தமிழ்ப் பெயரான **'Illankai Thamil Arasu Kachchi'** என்பதை 'இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி' என்று மொழிபெயர்ப்பதால் சிக்கல் மேலும் சிக்கலாகியுள்ளது. இது பிரிவினைவாதம் என்று எதிர்ப்பாளர்கள் கூறினாலும், கட்சித் தலைவர்கள் அதை மறுத்து, இந்தியாவில் துணை தேசிய அலகு 'மாநிலம்' என்று அழைக்கப்படுவதை சுட்டிக் காட்டுகின்றனர். கட்சி உருவாக்கப்பட்டபோது, அது இந்தியாவில் இருந்து உத்வேகம் பெற்றது என்றும், கூட்டாட்சி இந்தியாவைப் போல 'தமிழ்ப் பெரும்பான்மை மாநிலம்' அடைய விரும்பியது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

## மோதலின் சுருக்கமான வரலாறு


1926 இல் இலங்கைக்கான கூட்டாட்சி அரசியலமைப்பை முதலில் முன்மொழிந்தவர் தமிழர்கள் அல்லர், பின்னர் சிங்கள சார்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சியை **(SLFP)** உருவாக்கியவரும் பிரதமராக இருந்தவரும் ஆன பண்டாரநாயக்கா ஆவர். 1927 ஆம் ஆண்டு டொனமோர் ஆணைக்குழு இந்த நாட்டிற்கு வருகை தந்தபோது, தாம் தனியான 'தேசம்' எனக் கூறிச் சிங்கள ஆதிக்கப் பகுதிகளுடன் தொடர்புடைய மூன்று அலகுகளின் கூட்டமைப்பை கண்டிய சிங்களவர்கள் முன்மொழிந்தார்கள். (1) 1505 இல் போர்த்துகீசியர்களால் கைப்பற்றப்பட்டு பின்னர் ஒல்வாந்தர் மற்றும் பிரித்தானிய ஆட்சியின் கீழ் வந்த சிங்கள ஆதிக்கம் கொண்ட கரையோரப் பகுதிகள். (2) 1815 ஆம் ஆண்டில் இறுதியாக பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்ட காண்டி இராச்சியம். (3) முஸ்லிம்களும் தமிழர்களும் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள். அவர்களின் (கண்டிச் சிங்களவர்) கவலைகளுக்கு அனுதாபம் தெரிவித்த போதும் கூட்டாட்சி ஏற்பாட்டை (டொனமோர்) ஆணையம் நிராகரித்தது.

1944 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு வருகை செய்த போது, நாட்டில் ஒரு சம்'டிக் கட்டமைப்பைப் தன்னும் கேட்காவிட்டாலும் அதிகாரப்பகிர்வை ஆவது எந்தவொரு அமைப்பும் தீவிரமாக முன்மொழியவில்லை. எந்தவொரு சுயாட்சி அல்லது சமநிலையான பிரதிநிதித்துவத்திற்கும் ஆணையம் பரிந்துரைகள் எதுவும் செய்யவில்லை.

1949 இல், சிங்களவர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் கட்சியான தமிழ்க் காங்கிரசில் இருந்து பிரிந்து பெடரல் கட்சியை **(FP)** உருவாக்கினார். மேலும் காங்கிரஸ் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியோடு **(UNP)** - கூட்டணி வைத்திருந்ததைத் தடுக்கத் தவறிய பின்னர் - புதிதாக சுதந்திரம் பெற்ற நாட்டின் பெரும்பான்மையான மலையகத் தமிழர்களது குடியுரிமை பறிக்கப்பட்டது. இவர்கள் சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் பிரித்தானிய குடிமக்களாக இருந்தபோது 1947 இல் நடந்த தேர்தலில் வாக்களித்திருந்தார்கள். அதன் பின் 1952 இல் நடந்த தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி **(FP)** இரண்டு தொகுதிகளில் மட்டுமே வென்றிருந்தது. செல்வநாயகம் அவர்கள் தனது சொந்தத் தொகுதியில் தோல்வியுற்றார். வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழர்கள் கூட்டாட்சியை உறுதியாக நிராகரித்ததோடு மீண்டும் கொழும்புக்குச் சென்று சிங்களத் தலைமைகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளுமாறு தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு கட்டளையிட்டனர்.

1955 இல் எல்லாம் மாறியது. தொடக்கத்தில் தெற்கில் உள்ள இரண்டு முக்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகளாக மாற்றுவதற்கு ஆதரவு தெரிவித்தன. மற்றொரு பொதுத் தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், இரண்டு கட்சிகளும் தங்கள் நிலைப்பாட்டை 'சிங்களம் மட்டும்' என்று மாற்றிக் கொண்டன. இது தமிழ் அரசுக் கட்சிக்கு உள்ள ஆதரவை அதிகரிக்க வழிகோலியது. 1956 இல் நடந்த தேர்தலில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டணி தெற்கில் அமோக வெற்றி பெற்றது, அதே நேரத்தில் தமிழ் அரசுக் கட்சி வடக்கு மற்றும் கிழக்கில் வெற்றி பெற்றது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி வெறுமனே இரண்டு இடங்களுடன் அவமானகரமான தோல்வியைத் தழுவியது. அதன் பின்னர் அந்தத் தோல்வியில் இருந்து அது (தமிழ்க் காங்கிரஸ்) மீளவே இல்லை.

1956 இல் சிங்களம் மட்டுமே ஒரே அரச கருமமொழியாக ஆக்கப்பட்டது. த மி ழ ர் க ளு ம் இடதுசாரிகளும் இந்த ந ட வ டி க் கை க ை ய எதிர்த்தனர், இடதுசாரியான கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா தீர்க்கதரிசனமாக கர்ஜித்தார் - 'இரண்டு மொழிகள் - ஒரே நாடு ஒரு மொழி - இரண்டு நாடுகள்.' இந்த எச்சரிக்கை கவனிக்கப்படவில்லை. மோதல் வலுத்தது.


ஜெயம்பதி விக்ரமரத்ன

சிறிலங்கா சுதந்திரக் கட்சி (1957) மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி (1965) பிரதமர்களுடான செல்வநாயகம் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வுக்கான உடன்படிக்கைகள் கடுமையான சிங்கள எதிர்ப்பின் மத்தியில் இரத்து செய்யப்பட்டன. குடியரசுக் கட்சி அரசியலமைப்புச் சட்டங்கள் இரண்டும் இந்தச் சிக்கலைத் தீர்க்கத் தவறின. தமிழ்க் கட்சிகள் பிரிவினையைத் தழுவிக் கொண்டன, அதைத் தொடர்ந்து முழு அளவிலான பிரிவினைவாதப் போர் தொடங்கியது.

1987 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மாகாண சபைகளை நிறுவியது. அது மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வை வழங்கியது. எவ்வாறாயினும், பதின்மூன்றாவது திருத்தம் உண்மையான அதிகாரப் பகிர்வுக்கு எதிரானது. பல விடயங்கள் மற்றும் செயல்பாடுகள் தொடர்பான சட்டவாக்க அதிகாரம் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட போதிலும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி சபைகளை மீறும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது. தேசியக் கொள்கையை வகுத்துக்கொள்வது என்ற போர்வையில், மாகாண சபைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் கூட நாடாளுமன்றம் சட்டமியற்றலாம். மாகாணங்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த மத்திய அரசால் ஒருங்கிணைந்த பட்டியல் பயன்படுத்தப்படுகிறது. போகூழ்வசமாக, அடுத்தடுத்த அரசாங்கங்கள் அதிகாரப்பகிர்வை முறியடிக்க கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு ஏற்பாடுகளையும், அதாவது, ஒவ்வொரு காற்புள்ளி அல்லது முழு நிறுத்தத்தையும் பயன்படுத்தின. அதிகாரப் பகிர்வுக்கு உகந்த நிர்வாகம் இல்லாததால் நிலைமை மோசமடைந்துள்ளது. (தொடரும்)

(இந்தக் கட்டுரை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டாலும் 13 ஏ திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதுபற்றி இன்று ஆதரவாகவும் எதிராகவும் நடைபெறும் வாதத்துக்கு இன்னமும் பொருத்தமானது ஆகும். ஆங்கில மூலத்தை **http://50shadesoffederalism.com/case-studies/sri-lanka-devolution-secession-and-current-debates-on-the-f-word/** என்ற இணையதள முகவரியில் படிக்கலாம். அவரது மின்னஞ்சல் **jwickramaratne@yahoo.com.** தமிழாக்கம்: ***கனடா நக்கீரன்***)



# “ஊடகத்துறை படுகொலைகள்” சர்வதேச விசாரணை வேண்டும்



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

- “உண்மைகளை” சாகடிப்பதற்காகவே ஊடகவியலாளர்கள் படுகொலை!
- தமிழ் மக்களின் அபிலாஷ‘குறித்து பேசுவது இனவாதமாகுமா?

இலங்கையில் ஊடகத்துறை இன மத மொழி ரீதியாக பிரிந்து கிடக்கின்றது. இந்த பிளவு பிரிவு என்பன இன்று நேற்று உருவாகியதல்ல. சுமார் 100 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் பிளவுகளும் முரண்பாடுகளும் கோலோச்சி வருகின்றன. துரதிஷ்டவசமாக இந்த முரண்பாடுகளும் பிளவுகளும் சாகா வரம் பெற்றதாக ஊடகத்துறையையும் ஊடகவியலாளர்களையும் தின்று கொண்டிருக்கின்றது.

இதுபற்றி ஊடகத்துறை சார்ந்தோர் சிந்தித்ததாக இல்லை.

ஆனால் ஊடகத்துறை சார்ந்த ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் கண்ணுக்குத் தெரியாத எதிரிகளுக்கு ஊடகத்துறையில் நிலவுகின்ற பிளவுகளும் முரண்பாடுகளும் ஊடகத்துறை சார்ந்தோரை பிரித்தாள்வதற்கு உதவுகின்றது என்ற உண்மையை ஊடகத்துறையினர் அறிந்தும் அறியாதது போல் உள்ளனர்.

அதுமாத்திரமல்ல ஊடகத்துறையினர் பிரிந்து நின்று பேசுகின்ற இன, மொழி, மத ரீதியிலான பேதங்கள் பன்முகப் பரிமாணங்களாக சிதறி நிற்கின்றன. ஆனால் ஊடகத்துறைக்கு எதிரான சக்திகள் பேசுவது ஒரு மொழிதான். அது கருத்தியலுக்கு எதிரான போர். இந்த கருத்தியல் போரினையே ஊடகத்துறைமீது இனம் தெரியாத எதிரிகள் பிரகடனப்படுத்தி செயலாற்றுகின்றனர்.

கருத்தியலை கருத்தியலால் வெல்ல திராணியற்ற இந்த சக்திகளிடையே இன, மத, மொழி ரீதியில் எந்தப் பேதங்களும் இல்லை. அங்கே தமிழர்கள் இருப்பார்கள் சிங்களவர்களும் முஸ்லிம்களும் இருப்பார்கள். அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்ற ஏவல் நாய்கள் அல்லது கூலிப் படைகள் தயாராகவே இருக்கும். அதாவது உண்மைகள் சாகடிக்கப்பட வேண்டும் என்பதே இவர்களது இலக்காகும்.

இந்தச் சக்திகளினால் ஊடகத்துறையினர்

- இலக்கு வைக்கப்படுகின்றனர்
- காணாமல் ஆக்கப்படுகின்றனர்
- கடத்தப்படகின்றனர்
- படுகொலை செய்யப்படுகின்றனர்
- பயமுறுத்தப்படுகின்றனர்
- நாட்டைவிட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்

மேற் குறிப்பிட்டவைகளில் ஏதாவது ஒன்றோ பலவோ நடைபெற்றால்

- ஊடகத்துறையினரும் இதுபற்றி பேசுகின்றனர்.
- செய்திகளாக அறிக்கையிடுகின்றனர்
- இறுதியில் இதுவும் ஒரு பரபரப்புச் செய்தியாகி குறுகிய காலத்திலேயே மறந்து போய் ஊடகத்துறையினரும் தமது போனாக்களுடன் அன்றாட வேலைகளில் மூழ்கிப் போகின்றனர்.
- அடுத்த ஒரு கொலையோ பயமுறுத்தலோ அல்லது கடத்தல் காணாமல் ஆக்கப்படுதலோ நடைபெறும்வரை இன்னொரு செய்திக்காக ஊடகத்துறையினரை தட்டி எழுப்பும்வரை ஊடகவியலாளர்களும் ஊடகத்துறையும் தம்மை மறந்து பணிகளில் மூழ்கிவிடுகின்றனர்.
- வருடத்துக்கு ஒருமுறை மண்ணுள் புதையுண்ட தமது சகாக்களில் ஒரு சிலருக்காக கண்ணீர் சிந்துகின்றோம்
- நினைவேந்தல் நடத்தி தீபம் ஏற்றி அல்லது மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்துகின்றோம்.
- இதற்கும் அப்பால் ஊடகத்துறையினர்போவதும் இல்லை: சிந்திப்பதும் இல்லை.

ஆனால் எதிரிகள் கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு 24 மணி நேரமும் ஊடகத்துறையினரை கழுகுக் கண் பார்வையுடன் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஊடகவியலாளர் அமந்தபெரேரா தனது கட்டுரை ஒன்றில் “லசந்த தனது சொந்தப் பாதுகாப்பில் அக்கறை கொள்ளாதிருந்தமை குறித்து அவர் மீது கோபம் கொள்வதாக எழுதியிருந்தார்.

இதே கோபம் தராக்கி சிவராம் நடேசன் சுகிர்தராஜ் சுப்ரமணியம் நிமலராஜன் மீதும் எனக்கும் இருந்தது. ஏனெனில் இவர்கள் என்னுடன் நெருங்கிப் பணியாற்றியவர்கள். இவர்களது இழப்பின் வலியை இன்றும் என்னுள் சுமந்து கொண்டிருக்கின்றேன். இவர்களின் மரணத்தை இன்றும் ஜீரணிக்க முடியாதவனாக உள்ளேன்.

நடேசன்

நடேசனின் உயிரைக் காப்பாற்ற அனைத்து முயற்சிகளையும் தனிப்பட்டமுறையில் எடுத்தேன். கொழும்பில் பணியாற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ததுடன் நான் தங்கியிருந்த வீட்டிலேயே தங்குவதற்கும் ஏற்பாடு செய்தேன். மட்டக்களப்பிற்குப் போய்விட்டு வருவதாக “சவக் களை”யுடன் விடை பெற்றுச் சென்ற நடேசன் போகும் வழியில் வெலிக்கந்தையில் இருந்த உங்களுடைய நண்பன் தம்பையாவை சுட்டுக் கொன்றுவிட்டார்கள் என்ற செய்தியைக் கூறிவிட்டு மட்டக்களப்பிற்குச் சென்றவன் திரும்பவே இல்லை. வந்தாறுமூலை பல்கலைக்கழக பொருளியற்துறை விரிவுரையாளர்

கு. தம்பையாவின் கொலைச் செய்தியை எழுதிய பேனா மை காய்வதற்குள் நடேசனும் செய்தியாகிவிட்டான்.

சுகிர்தராஜ் சுப்ரமணியம்

திருகோணமலை ஐந்து மாணவர்களின் படு கொலைச் செய்தியை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த சுகிர்தராஜ் சுப்ரமணியம் மரண அச்சம்தோய்ந்த முகத்துடன் கொழும்பில் என்னைச் சந்தித்தபோது கொழம்பில் இருந்து கொண்டு பணியாற்ற கேசரி நிர்வாகத்துடன் பேசி ஒழுங்கு செய்வதாக கூறியபோதும் குடும்பச் சுமை பின்னணி வேலை மாற்றம் செய்ய முடியாத நிலை பொருளாதார நிலை என்பன எனது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவர் இருக்கவில்லை. பிரியும்போது விடை கொடுக்கும் மன நிலையில் நான் இல்லை. விடை பெறும் நிலையில் சுகிர்தராஜ் சுபரமணியமும் இல்லை. ஆனால் அதுவே கடைசி சந்திப்பாகப் போய்விட்டது.

நிமலராஜன்

நிமலராஜன் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதுவதற்கான அனுமதியை நேரில் வந்து பெற்றுச் சென்றதற்குப் பிறகு தொலைபேசித் தொடர்புடன் அவரது உறவு மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. யாழ் குடா நாடு எந்த பாதுகாப்பு இரும்புக் கவசத்திற்கள் முடங்கிக் கிடந்ததோ அதே கவசத்திற்குள் பாதுகாப்பற்ற நிலையில் நிமலராஜனின் உயிரும் பறிக்கப்பட்டுவிட்டது.

தராக்கி சிவராம்

நண்பர் தராக்கி சிவராம் மண்டையில் போட்டுவிடுவார்கள் அதற்குள் எழுதக் கூடியதை எழுதி முடித்துவிட வேண்டும் என்ற வெறியில் தனது தனிப்பட்ட பாதுகாப்பையும் கருத்தில் கொள்ளாது பணியாற்றினார். இறுதியில் அவரது உயிரும் பறிக்கப்பட்டுவிட்டது.

மொத்தத்தில் இந்தக் கொலைகள் ஒரு உண்மையை உணர்த்தி நிற்கின்றது. ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் இன மத மொழி பேதங்களுக்க அப்பால் “பிரகடனப்படுத்தப்படாத மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளாக” சமூகத்தில் நடமாடிக் கொண்டிருக்கின்றனர் என்பதுதான்.

- இந்த நிலையில் ஊடகத்தறை சார்ந்தோர் எங்கே பாதுகாப்பைத் தேடுவது?
- எவரிடம் பாதுகாப்பைக் கோருவது?
- யார் பாதுகாப்பை வழங்குவார்கள்?

இவ்வாறு பதில் கிடைக்காத கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

- அரச பயங்கரவாதம்
- பல்தேசியக் கம்பெனிகள்
- அரசியல்வாதிகள்
- மேற் கூறிய சக்திகளின் அம்பு “இனந் தெரியாத நபர்கள்“ என ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் தீப்பிழம்பு சூழ வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்தச் சூழலுக்கள் எவருடைய பாதுகாப்பிற்கும் உத்தரவாதமில்லை. எனவேதான் ரிச்சர்ட்டி சொய்சா முதல் தராக்கி சிவராம் லசந்த விக்ரமதுங்கவரை படு கொலைகள் கச்சிதமாக அரங்கேற்றப்பட்டுள்ளன.
- ஊடகத் தறையிலும் ஊடகவியலாளர்கள் மத்தியில் இருந்து கிளைவிட்டு வளர்ந்துள்ள நண்பர்களின் கழத்தறுப்புகளுக்கும் காட்டிக் கொடுப்புக்களுக்கும் ஊடகத்துறையினரும் ஊடக நிறுவனங்களும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

காட்டில் நேரான மரங்களே முதலில் வெட்டப்படுகின்றன. அதுபோல் ஊடகத்துறையில் நேர்மையானவர்கள் உண்மைக்காக சமூகத்திற்காக ஊடகத்துறையில் சத்திய வேள்விக்குள் வாழத்தலைப்பட்டவர்கள் குருதி வெள்ளத்திற்குள் வேருடன் பிடுங்கிச் சாய்க்கப்படுகின்றனர்.

ரிஜ்சர்டி சொய்சா முதல் தராக்கி சிவராம் லசந்த விக்ரமசிங்கவரை இந்த வரலாறுதான் தொடர்கின்றது. அதுமாத்திரமல்ல கண்ணுக்குத் தெரியாத எதிரிகள் தருகின்ற அச்சுறுத்தல் பயமுறுத்தல் அந்த சக்திகள் கொடுக்கின்ற மரணபீதி எனபன ஊடகவியலாளர்களையும் ஊடக நிறுவனங்களையும் பய பீதிக்குள் ஆழ்த்திக் கொண்டே இருக்கின்றன.

ஏனெனில் பாதிக்கப்பட்ட ஊடகத்துறையினருக்கு நீதி என்பது மறுக்கப்பட்ட நீதியாகவே இதுவரை உள்ளது. ஜனநாயகத்தின் முக்கிய தூண்களில் ஒன்றான ஊடகத்துறைக்கே இந்த நிலையா என பதில் கிடைக்காத கேள்வியுடன்தான் ஊடகத்துறை நகர்ந்து கொண்டிருக்கின்றது.

அதிஷ்டவசமாக இன்று சர்வதேச சமூகத்திடம் இருந்து இதற்கான ஒளிக்கீற்று தெரிவது சற்று ஆறுதலாக உள்ளது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் அனைவரும் “உண்மைகளை” வெளிச்சத்திற்குக் கொண்டுவந்ததினால் மிலேச்சத்தனமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

- முன்னாள் சபாநாயகர்கரு ஜயசூரிய

*1981 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது 117* ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் போயுள்ளனர் மற்றும் எண்ணற்றோர் பெரும் அடக்குமுறைக்கு உள்ளாகியுள்ளனர் என இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர்கரு ஜயசூரிய அண்மையில் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் முன்னாள் சபாநாயகர் ஜெயசூர்யாவின் 117 எண்ணிக்கை எங்கிருந்து பெறப்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை, இருப்பினும் பல அமைப்புகள் ஊடக ஊழியர்களின் கொலைகள் மற்றும் காணாமல் போனதை பதிவு செய்துள்ளன. இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு (JDS) 2004 முதல் 2010 வரை மட்டும் குறைந்தது 44 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் போயுள்ளனர் என்று பதிவு செய்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்களாகும். இந்தக் காலகட்டத்தில் 41 தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் உண்மையான எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று கருதப்படுகிறதுஎன “தமிழ் கார்டியன்” தெரிவிக்கின்றது.

இன்றுவரை இந்தப் படுகொலைகளுக்கான நீதி கிடைக்கவில்லை.

- லசந்த விகரமதுங்கவின் படுகொலைக்கு நீதி கோரிய பயணம் 14 வருடங்களைக் கடந்து போய்க் கொண்டிருக்கின்றது.
- ஊடகவியலாளர் மற்றும் கார்ட்டுனிஸ்ட் பிரகீத் எக்னெலிகொட 13 வருடங்களுக்கு முன்னர் 24 ஜனவரி 2010 இல் காணாமல் போனார். அவரது மனைவி சந்தியா 13 வருடங்களாக நீதிகோரிய நெடும் பயணத்தில் உள்ளார்.

**(தொடர்ச்சி 20 பக்கம்)**

கனடிய செய்திகள் Canadian News

'Tamil Heritage Month' celebration was hosted in Ottawa by Canada's Minister of National Defense Anita Anand and our Member of Parliament Gary Anandasangaree.

Conservative Party Pierre Poilievre, Jagmeet Singh, the leader of the next-level opposition NDP, the leader of the next-level opposition Canadian Green Party Elizabeth May, and members of other parties were also graced Tamils' Event.

# கனடாவின் தலைநகரமான ஒட்டாவவில் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்டத்தில் மொன்றியால் – ரொறன்ரொ – கிச்சினர் – வன்குவர் நகரங்களிலிருந்து தமிழ்க் கனேடியர்கள்





கடந்த திங்கட் கிழமையன்று ஒட்டாவா மாநகர் நோக்கி ரொறன்ரொவிலிருந்து சென்ற அன்பர்களில் உதயன் நண்பர்கள் குழுவினரும் அடங்கியிருந்தனர். மேற்படி "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்ட விழாவை கனடிய அரசாங்கத்தின் சார்பில் கனடிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் திருமதி. அனிற்றா ஆனந்த் மற்றும் எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி ஆகியோர் தங்கள் அலுவலகங்களின் உத்தியோகத்தர்களின் உதவியோடு நடத்தினர்.

இந்த விழாவில் அதிசயம் மிக்க ஒரு காட்சியாக கனடாவின் பிரதமர். கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் Pierre Poilievre, அடுத்த நிலை எதிர்க்கட்சியான என்டிபி கட்சியின் தலைவர் Jagmeet Singh மற்றும் அடுத்த நிலை எதிர்க்கட்சியான கனடிய பசுமைக் கட்சியின் தலைவர் Elizabeth May ஆகியோரும் இன்னும் வெவ்வேறு கட்சிகளின் உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளை மற்நது வருகை தந்து சிறப்பித்தனர்.

அங்கு உரையாற்றிய கனடிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் அனிற்றா ஆனந்த் அவர்கள் தனது உரையில் தனது பாட்டனார் தமிழ்நாட்டின் கோயமுத்தூரில் பிறந்து 1800 களில் காந்திஜி அவர்களோடு இணைந்து தேசத்தின் விடுதலைக்காக போராடியதாகவும் பின்னர் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டதாகவும் தனது தந்தையார் கனடாவில் குடியேறிய பின்னர் தான் பிறந்து வளர்ந்து ஒரு தமிழிச்சியாக இந்த அமைச்சர் பதவியை அலங்கரிப்பதாகவும் பெருமை பொங்கத் தெரிவித்தார். இந்தக் கருத்தை அங்கு சமூகமளித்த நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் வெளிப்படையாகத் தெரிவித்தனர்.





இந்த கௌரவம் என்பது எமது மொழிக்காகவும் பண்பாட்டிற்காகவும் தமிழ்க் கனேடியர்களின் உயரிய சேவைக்காகவுமே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அங்கு சிறப்புரையாற்றிய கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் கனடிய தேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் தமிழ் மக்களை பாராட்டியதோடு இலங்கை அரசு நிகழ்த்திய இனப்படுகொலைகளுக்கான பொறுப்புக் கூறலை அந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தின் தலைவர் முன்வந்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இவ்வாறு இருந்தாலும் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மனித நேய அடிப்படையில் கனடிய அரசு 30 மில்லியன் டாலர்களை உடனடியாக வழங்கவுள்ளதாகவும் உறுதியளித்தார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பிரதமர் மற்றும் தலைவர்கள் அங்கு கலந்து கொண்டவர்களோடு புகைப்படங்களும் எடுத்துக் கொண்டனர்.

கனடாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அனிற்றா ஆனந்த அவர்கள் உதயன் பிரதம ஆசியரோடு உரையாடுகையில "தாங்கள் ரொறன்ரோவில் நான் கலந்து கொண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டவர். தற்போது ஒட்டாவா நகரில் எமது அரசு சார்பான "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்ட விழாவில் கலந்து கொண்டதற்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்" என்று சிரித்த முகத்துடன் தெரிவித்தமை குறிப்பிடத்தககது.









The Prime Minister of Canada Hon Justin Trudeau graced the event with his Cabinet Members. It was also a wonderful sight at this ceremony. The leader of Canada's Main opposition Conservative Party Pierre Poilievre, Jagmeet Singh, the leader of the next-level opposition NDP, and the leader of the next-level opposition Canadian Green Party Elizabeth May, and members of other parties were also graced this Tamil's Event. They have forgotten party differences and celebrated by visiting.

It should be noted here that this honor is for the outstanding service of Tamil Canadians to our language and culture.

This opinion was openly expressed by hundreds of Tamil people who were gathered there.

**செய்தியும் படங்களும்: சத்தியன்**

# மரண அறிவித்தல்

மலர்வு: 13 - 02 - 1970



உதிர்வு: 29 - 01 - 2023

# திரு. இந்திரஜித் ரட்ணலிங்கம்

**சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், Scarborough, Torontoஐ வதிவிடமாகவும் கொண்ட திரு. இந்திரஜித் ரட்ணலிங்கம் அவர்கள் 29-01-2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.**

அன்னார் ரட்ணலிங்கம், காலஞ்சென்ற நிஷாந்தி தம்பதிகளின் அருமை மகனும், ராதாகிருஷ்ணன், ஞானாம்பிகை (டென்மார்க்) தம்பதிகளின் அன்பு மருமகனும்,

காலஞ்சென்ற A.K. ராமலிங்கத்தின் அன்பு பேரனும்,

நிர்மலாவின் (சூட்டி) அன்பு கணவரும், வினுசனின் பாசமிகு தந்தையும்,

பிரவீன், கெவின் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும்,

முகுந்தன் (கொழும்பு), ஜெயஸ்ரீ (கொழும்பு) அவர்களின் அன்பு சகோதரனும், சியாமளா (Toronto), குகனேஸ்வரன் (Denmark), மஞ்சுளா (Denmark), ஞானேஸ்வரன் (Denmark), விக்கும் (Colombo) ஆகியோரின் அன்பு மைத்துணரும்,

தெவ்ருவான், தெவ்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற Dr. சிவலிங்கம் மற்றும் இராசலிங்கம், எல்லாளன் ஆகியோரின் பெறாமகனும், அமுதாவின் மருமகனும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் 04-02-2023 சனிக்கிழமை மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை இல. 121 City View Dr., Etobicoke இல் அமைந்துள்ள Lotus Funeral and Cremation Center இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, மறுநாள் 05-02-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் 9 மணி வரை ஈமக்கிரியைகள் நடைபெற்று, இதே முகவரியில் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தொடர்புகளுக்கு:** எல்லாளன் (அலன் - சித்தப்பா): (416) 435-5956
அருள் (மைத்துனர்): (647) 831-6937
சியாமளா (மைத்துனி): (647) 821-6147

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்:

17 - 03 - 1952

இறைவன் அடியில்:

31 - 01 - 2023

# திருமதி. நவரட்ணதேவி உருத்திரசீலன்

(நாரந்தனை, கரம்பொன், கொழும்பு)

**யாழ்ப்பாணம் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கரம்பொன் கிழக்கு, கொழும்பு ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி. நவரட்ணதேவி உரத்திரசீலன் அவர்கள் 31-01-2023 திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் சிவபதமடைந்தார்.**

அன்னார் காலம்சென்றவர்களான சுப்பிரமணியம்- - மகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், செல்லத்துரை - பகவதியம்மா ஆகியோரின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற உருத்திரசீலன் (கொழும்பு ஐங்கரன் ஸ்ரோர்ஸ் முன்னாள் பங்காளி) அவர்களின் அன்பு மனைவியும்,

உதயகுமார் (கனடா), சதீஸ்குமார் (அவுஸ்திரேலியா), செல்வகுமார் (அவுஸ்திரேலியா), ரவீணா (அவுஸ்திரேலியா), மற்றும் நவநீதா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலராகினி (ராகினி - கனடா), ஜெயானி (அவுஸ்திரேலியா), நிதர்சினி (அவுஸ்திரேலியா), ஜனார்த்தன் (அவுஸ்திரேலியா), மற்றும் ஜொனார்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்ற தவராஜா, வரதராஜா (சுவிஸ்), மோகனதாசன் (கனடா), சுஜாதாதேவி (பிரான்ஸ்), ஜெகதாசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாசுகி (கனடா), தேவி (சுவிஸ்), யுஜிதா (கனடா), பாபு (பிரான்ஸ்), பிரியா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

காலஞ்சென்றவர்களான சத்தியசீலன் - பரமேஸ்வரி, காலஞ்சென்ற குமரகுருபரன் - மற்றும் திலகமணி (கனடா), காலஞ்சென்ற இராஜகோபால் - மற்றும் பரமேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற நடேஸ்வரன் - மற்றும் தனலட்சுமி (கனடா), காலஞ்சென்ற குகதாஸ் - மற்றும் பிருந்தாதேவி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும்.

ஜஸ்விகா, ஜாதவன், ஜானவிகா, ஹரிஸ், லுக்சிகா, சனோசன், லக்ஷரா, ரேசினி ஆகியோரின் அருமைப்பேத்தியுமாவார்.

***அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் 75/14 Yarl Road (யாழ் வீதி) எனும் முகவரியில் உள்ள இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, 03-02-2023 வெள்ளிக்கிழமை அன்று மு.ப 09:00 மணிமுதல் பி.ப 11:00 மணிவரை இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் கோம்பயன் இந்து மாயானத்தில் தகனம் செய்யப்பட்டன.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

------------------------

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு: உதயன் (மகன்): (416) 857-4809, (416) 551-4128

சதீஸ் (மகன்): 614 0585 1340 | செல்வன் (மகன்): 614 34 217459

ரவீணா (மகள்): 614 20 522134 | நவநீதா (மகள்): 94 77 173 7428

# மக்கள் வெள்ளத்தில் அலை மோதிய பொன்மனச் செம்மலின் MGR 106





மக்களின் நன்மதிப்பையும் நம்பகத் தன்மையையும் தனதாக்கி இதுவரை 98 உயிர்களைக் காப்பாற்றி தொடர்ந்து மனிதம் தழைக்க கடன் செய்து வரும் திரு.செந்தில் குமரன் அவர்களின் இவ்வாண்டின் நிதி சேர்ப்பு நிகழ்வாக கடந்த 27-01-2023 மாலை Scarborough Metropolitan அரங்கத்தில் இடம் பெற்ற நிவாரணம் MGR 106 எனும் தாயக மக்களின் உயிர்காப்பிற்கான உதவிக் கரம் நீட்டும் இசை நிகழ்ச்சிக்கு வழமை போல் சென்றிருந்தேன்.

ஏதோ பிறந்தோம் வளம் பெருக்கி எமது வாழ்வை மகிழ்வாக வந்த மண்ணில் வாழ்ந்தோம் என்றில்லாது பிறரையும் வாழவைத்து வாழ்தலே வாழ்தலில் வாழ்வாங்கான வாழ்வு என்பதனை மண்டபம் நிறைந்து வழிய வருகை தந்திருந்த மண்ணின் மணம் மாறாத வாரியிறைக்கும் மனித நேயம் படைத்த மக்கள் வெள்ளத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்தேன்.

நிகழ்ச்சியானது தொடங்குவதற்கு முன்பே அங்கு சென்றிருந்த நான் வாகன தரிப்பிடமின்றி அரை மணி நேரம் காத்திருக்க நேர்ந்த போதும் உணர்வுமிக்க எம் மக்களின் உயிர்காக்க உதவிடும் தாகமும் வாஞ்சை மிகு உளப்பாங்கும் அத்தனை அபரிதம் கொண்டதாக இருந்தது கண்டு மனம் பூரித்தேன். வைத்தகண் வாங்கிடாது தாயகத்திலே நோயின் தாக்கங்களினால் மீளும் வகையற்று உயிருக்காகப் போராடும் எம் உடன்பிறப்புக்களின் துன்பக் காட்சிளையும் அவர் தம் ஆத்மார்த்த உதவிக் கோரிக்கைகளையும் காணொளிகள் வாயிலாக கண்டு மனமுருகி உயிர்காப்பின் பங்களிப்பினை வழங்கவென நம் கொடையாள மக்கள் தாரை தாரையாக வரிசை கட்டி நின்ற காட்சி விழிநீர் சொரிய வைத்தது எனலாம். இந்திய திரைத்துறை சார் கலைஞர்களின் வணிக ரீதியிலான கேளிக்கை நிகழ்ச்சிகளுக்காகவும் அவர் அருகே நின்று நிழற்படங்கள் எடுப்பதற்காகவும் முன் கூட்டியே வலைத்தளங்களில் ஆயிமாயிரமாகச் செலவிட்டு நுழைவுச் சீட்டுகள் வாங்கும் போக்குடைய கலாச்சாரம் ஒன்று நிலவும் இக்காலத்தில் பிறர் கண்ணீரை தம் கண்ணீராக எண்ணி தமது தாராளமான தயாள எண்ணங்களிற்கு முதலிடமளித்து ஆயிரமாயிரமாய் தம் பங்களிப்புகளை நல்கிய காட்சிகளை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை என்றே சொல்லத் தோன்றுகின்றது.









நிவாரணம் செயல்திட்டங்களுக்கு பலவருடங்களாக எழுபதினாயிரம் டொலர்களுக்கு மேல் நன்கொடை வழங்கிய Quality Bakery நிறுவனத்தின் உரிமையாளருமான திரு.திருமதி. பிரான்சிஸ் அவர்களை திரு.செந்தில்குமரன் மக்களின் சார்பில் மாலையிட்டு கௌரவித்தார். எனக்குத் தெரிந்த வரையில் இந்த உயிர் காப்பிற்கு நிதியுதவி பெறுவதற்கான மற்றும் ஒரு விழிப்புணர்வு முயற்சியாக ஏற்கனவே கடந்த ஒரு மாதமாக திரு செந்தில் குமரன் தமது முகநூல் வாயிலாக ஒரு இதய வடிவமைப்பை வரைந்து 500 டொலர் கொடுத்து அந்த இதயங்களை வாங்கி உயிர் காக்க உதவுமாறு சமுகவலைத் தளங்களில் பதிவேற்றி வேண்டி இருந்தார். அதன் பயனாக 58 இதயங்களை கொடையாள மக்கள் வாங்கி பங்களிப்பு செய்திருந்தார்கள். இதன் மூலமாக $29,000 டொலர்களை நிகழ்விற்கு முன் சேர்த்து கொடையாளிகளையும் முகநூல் மூலமாக அறிவித்து பெரும் சாதனையைப் படைத்திருந்தார். மண்டப நிகழ்ச்சி தொடங்கி சற்று நேரத்தில் திரு செந்தில் குமரன் அவர்கள் தாயகத்திலே தனது பிள்ளைக்கு இருதய சத்திரச் சிகிச்சை வேண்டி நிற்கும் ஒரு தாயின் உருக்கமான வேண்டுதல் ஒன்றை காணொளி வாயிலாகக் காட்சிப் படுத்தி இம்மாதிரி 14இற்கும் மேற்பட்ட அவசர கோரிக்கைகள் தன்னிடம் இருப்பதாகக் கூறி அச்சிகிச்சைகளுக்காக 500 டொலர் பங்களிக்க விரும்புவோர் அங்கு அமைக்கப்பட்டிருந்த ஒரு (candle wall) எனும் சுடர் பீடத்தில் ஒரு சுடரை ஏற்றி நிதியுதவி புரியுலாம் என வேண்டிய அதே வேளை, அதற்காக புரட்சித் தலைவரின் "தரை மேல் பிறக்க வைத்தான் எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்" எனும் பாடலை மனமுருகப் பாடி மக்கள் முன் மனதாலே யாசித்து நின்ற வேளை மக்கள் முன் வந்து வரிசை கட்டி 40இற்கும் மேற்பட்ட சுடர்களை வாங்கி சுடர் பீடத்தை நிறைத்திருந்தனர்.



இவற்றிற்கும் அப்பால் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும் போதே நேரே சமுகமளிக்க முடியாத மக்கள் மண்டபத்திற்கு தொலைபேசி மற்றும் ஏனைய சமுகவலைத் தளங்கள் வாயிலாகவும் சுடர்களை வாங்கிய விபரத்தை செந்தில்குமரன் அறிவித்த வண்ணம் இருந்தார். அவற்றில் நிகழ்ச்சிக்கு வந்த ஓர் அன்பர் தாம் ஒரு சத்திர சிகிச்சையையே முழுமையாகப் பொறுப்பேற்பதாய் (6000.00) ஆறாயிரம் டொலர்களை வழங்கி இருந்தார். இவ்வாறு சுடர் பீடம் முழுமையாக நிறைந்து மனிதத்தின் சோதிப் பிளம்பாகக் காட்சியளித்த காட்சி காணக் கண் ஆயிரம் வேண்டும் போல் மண்டபமே ஓர் உணர்வு மண்டலமாய் சில்லிட்டு நின்றது என்பதை எண்ணிட இப்போதும் தேகம் சிலிர்க்கிறது. தொடர்ச்சி......















Toronto சிட்டி கவுன்சிலர்

PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி | Ontario Works |
| விலங்கு சேவைகள் | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | பூங்காக்கள் |
| கட்டட அனுமதி பத்திரங்கள் | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | பொதுச் சுகாதாரம் |
| அவசர வீட்டு வசதிகள் | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | ஆதன வரிகள் |
| கழிவுப் பொருட்கள் சேவை | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | மீள் சுலட்சியும் பசுமை திட்டமும் |
| மாநகரத் தேர்தல் | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | நீர் விநியோகம் |

| நியமன அலுவலகம் | ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம் |
|---|---|
| Scarborough Civic Centre<br>150 Borough Drive, 2nd Floor<br>Scarborough, ON M1P 4N7<br>Phone: 416-396-7222<br>Fax: 416-392-4006 | 100 Queen Street West,<br>2nd Floor - Suite C52<br>Toronto, ON M5H 2N2<br>Phone: 416-392-4008<br>Fax: 416-392-4006 |

councillor_ainslie@toronto.ca www.paulainslie.com

Ward 24 Scarborough-Guildwood @Ainslie_Ward24

@cllrainslie Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222


(6 பக்கத் தொடர்ச்சி)

# விநாயகர் விமர்சனம்

(கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர்)

ஆகவே இந்தியாவால் நேரடியாக இதிலும் தலையிட முடியாது. ஆனால் இந்தத் திருத்தத்தை நீக்கிவிடுவது இலங்கைக்கு தற்கொலைக்கொப்பான மிகப்பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். பிராந்திய வல்லரசு நாட்டின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் கீழ் வந்த 13ஆம் திருத்தத்தை ஒருதலைப்பட்சமாக நீக்கிவிட்டால் இலங்கை நல்லிணக்கத்திற்குத் தயாரில்லை என்ற செய்தியை அது சர்வதேசத்திற்குச் சொல்லும். இது 13மூலம் ஏற்படும் என இனவாதிகள் கருதும் பாதிப்பை விட மிக மோசமான ஒன்றை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும். 13ஆம் திருத்தத்தை அமல்படுத்துவதன் மூலம் மாகாண சபைகளுக்கு பொருளாதார ரீதியான சில நன்மைகள் உண்டு. காணிகளை திட்டமிட்ட அடிப்படையில் பயன்படுத்தும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு கிடைப்பதால் அவற்றின் மூலம் பொருளாதார நலன்கள் கிட்டும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் காரணமாக வினைத்திறனான முன்னுரிமைத் தெரிவுடன் கூடிய காணிப்பயன்பாட்டிற்கும் சாதகமான சூழற்பாதுகாப்பிற்கும் இட்டுச் செல்லலாம். உற்பத்தி நடவடிக்கைகள் மேம்படவும் வேலைவாய்ப்புகள் பெருகவும் கட்டடவாக்கம் உட்கட்டமைப்பு வசதிகளின் உருவாக்கத்திற்கும் இது துணைபுரியும். ஏற்கெனவே மாகாணசபைகளுக்கு பல்வகை வரிகளையும் கட்டணங்களையும் தண்டப்பணங்களையும் அறவிடும் அதிகாரம் உண்டு. ஆனால் அவற்றின் மூலம் திரட்டப்படும் நிதி செலவுகளை ஈடுகட்டப் போதுமானதல்ல இதனால் மத்திய அரசின் நிதிஒதுக்கீடுகள் ஊடாகவே மாகாண சபைகளுக்கு தேவையான நிதிகளில் பெரும்பகுதி கிடைக்கிறது. மாகாண சபைகளால் சுங்கவரி விதிக்கவோ வெளிநாடுகளிமிருந்து நேரடியாகக் கடன்பெறவோ நன்கொடைகளைத் திரட்டவோ முடியாது. இதனால் அவற்றால் வெளிநாடுகளிலிருந்து மேற்படி நிதிகளையோ வெளிநாட்டு முதலீடுகளையோ மத்திய அரசாங்கத்திற்கு ஊடாகவே பெறமுடியும். மத்திய அரசும் மாகாண சபைகளும் ஒரே கட்சியாக அல்லது கூட்டணிக் கட்சிகளாக இருந்தால் முறையான நிதிவசதிகளை உரிய காலத்தில் பெற்று நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எதிரெதிர் கட்சிகளாக இருக்கும் பட்சத்தில் மிகுந்த பிரயாசைப்பட்டே நிருவாகத்தை நடத்த வேண்டியிருக்கும். கிழக்கு மாகாண சபை சார்பளவில் சிறப்பாக இயங்கவும் வடமாகாண சபை மிகுந்த சிரமத்துடன் இயங்கவும் இதுவே முக்கிய காரணமாகும். ஆக மாகாண சபைகளை முழுமையாக இயக்கி சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துவதா அல்லது கிடப்பில் போட்டு நீண்டகாலப் பொறிக்குள் சிக்கிக்கொள்வதா என்ற தெரிவினை தென்னிலங்கை அரசியல்வாதிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். தமிழர்களைப் பொறுத்தவரை எப்போதும் போல சுகம் வரும் ஆனால் ஆள் தப்பாது.

# மக்கள் வெள்ளத்தில் அலை மோதிய பொன்மனச் செம்மலின் MGR 106

இதே போல் இன்னோர் சத்திரசிகிச்சை வேண்டி நிற்கும் தாயக உறவு ஒன்றின் ஒளி பரப்பும் காட்சிப் படுத்தப்பட்டதும் தாயக மக்களுக்காக தொடர்ச்சியாக பங்களித்து வரும் செல்வி நிதூசா சிங்காரவேலன் எனும் இளம் பெண்ணும் மேடையேறி தமது இனிய குரலில் "ஆண்டவனே உன் பாதங்களை" எனும் பாடலை உளம் உருகப் பாடியதைத் தொடர்ந்து வீற்றிருந்தோர் மேலும் வினயமாக தங்கள் பங்களிப்புகளை அதிகரித்தது உயிர் காக்கக் காத்திருப்போர் நெஞ்சில் பால் வார்த்த காட்சியெனில் மாற்றுக் கருத்தே இல்லை. இந்நிகழ்ச்சியின் இறுதியில் 70இற்கும் மேற்பட்ட சுடர்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தது மனதைக் கவர்ந்திருந்தது. ஷியானா வாத்திய இசைக்கலைஞர்களின் காதுக்கினிய இசையில் பாடகர்கள் சாம்பவி, சிவகுமாரன், சந்தியா, யாதவி, நிவேதா, அபிராமி, வித்தியாசங்கர், நிதுஷா, அநோஜனா, விஜிதா ஆகியோர் மக்களை மகிழ்வித்த வண்ணம் இருந்தனர்.

கூடவே CMR தர்ஷினி மற்றும் றொஷீதா இருவரும் நிகழ்ச்சிகளை நகைச்சுவையுடன் கூடிய கலகலப்புடனும் அட்டகாசத்துடனும் இனிதே தொகுத்து வழங்கி எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது இரட்டிப்பான சிறப்பெனலாம். நிவாரணம் என்ற சொல்லிற்கு சற்றும் பிசகாது உளத் தூய்மையுடனும் நெஞ்சுருகும் மனித நேயத்துடனும் தன் நேரத்தினையும் உழைப்பினையும் தம் இயல்பிற்கு மீறிய வகையில் கருதிய கருமத்திற்காக அர்ப்பணித்து அல்லும் பகலும் தனது குடும்ப சகிதம் அயராது ஓடிப் பணியாற்றும் திரு செந்தில் குமரன் அவர்களிற்கும் அவர் கைகளை நம்பி உயிர் பிழைக்கவென நம்பிக்கை தளராது தாயகத்தில் ஏங்கிக் காத்திருக்கும் அந்த அனாதரித்த எமதன்பு உறவுகளுக்கும் கிடைத்த வெற்றி என்றால் மிகையல்ல எனலாம். எமது கொடையாள மக்களின் தர்ம சிந்தனையும் பிறர் நலனில் அவர்களுக்குள்ள ஈடுபாடும் பாராட்டுக்குரியன என்று மட்டும் சொல்லி அவர்தம் பேரன்பையும் பெரு மனதையும் வரையறுக்க முடியவில்லை. அத்தனை விசாலமான அவர் தம் சிந்தனைக்கு ஒரு சக தமிழனாக தலை வணங்குகிறேன்.

இவ் இசை விருந்தின் இன்னோர் அம்சமாக இந்நிதி சேர்ப்பு மேடையினை ஒரு வெறும் சோகமானதாகவோ இல்லை ஒரு மௌன இராகக் கூடாகமாகவோ அல்லாது அமரர் எம்.ஜி.ஆர் அவர்களின் தத்துவார்த்த பாடல்களுக்கும் மனிதநேயம் மிக்க அவர் தம் சிந்தனைகள் தாங்கிய திரைச் செய்திகளுக்கும் புத்துயிர் ஊட்டும் வகையில் செந்தில் குமரனது எழுச்சிமிக்க குரலிலும் பொன்மனச் செம்மலது சாயலிலான கவர்ச்சி மிக்க தோற்றங்களிலும் மிகப் பொருத்தமான காட்சியமைப்புக்களை வடிவமைத்து இன்ன பிற கலைஞர்கள் சகிதம் ஓர் இனிய முத்தமிழ் விருந்தாக பார்வையாளரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது கொடையாளருக்கு அவர் வழங்கும் மதிப்பாகவும் விலைமதிப்பற்ற அவர் தம் அனுசரணைக்கும் ஒத்தாசைக்கும் அவர் தன் கலைத் திறன் கொண்டு பகரும் நன்றியறிதலாகவும் கூட பொருள் கொன்டிடலாம்.

இதுவரை காக்கப்பட்ட தொண்ணூற்றி எட்டு உயிர்களோடு விரைவில் நூறாவது உயிர்காப்பைக் காண இருக்கும் எம் எல்லோரது கனவுகளும் நனவாகிட ஏனைய நோயாளர்களுக்கும் உயிர் காக்கும் வழி பிறக்க இறைவனை வேண்டிக்கொண்டு "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" எனும் பாரதியின் முழக்கத்திற்கிணங்க இது போன்ற மனித நேயப் பணிகளில் இன்றல்ல என்றும் மக்கள் நாம் அனைவரும் பங்காளிகளாக இருந்து முடிந்தவரை ஏனையோருக்கும் நல்வாழ்வு சமைப்போம் என்ற உறுதி மொழியுடன் வாழ்க மனிதம் என்று நாமும் இன்றே சூழுரைத்திடலாம்.

வாழ்க நிவாரணம்! வாழ்க செந்தில் குமரன்கள்!

செந்தில் குமரனின் தொடர்பு இலக்கம்: 416 200 7652

நன்றியுடன்

ஒரு மனிதநேய பங்காளன்

க.இராசநாதன்.

# Toronto Mayor, His Worship, John Tory made a Visit to Majestic City Indoor Shopping Complex in Scarborough, along with Deputy Mayor Jennifer McKelvie and Jamaal Myers






## ரொறன்ரோ மாநகர மேயர் பிரதி மேயர் ஜெனிபர் மெக்லீவ் மற்றும் கவுன்சிலர் ஜமால் மையர்ஸ் ஆகியோரோடு ஸ்காபுறோவில் அமைந்துள்ள Majestic City Indoor Shopping Complex விஜயம் செய்தார்







இந்த விஜயத்திற்கான ஏற்பாட்டை கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனமும் **Majestic City Indoor Shopping Complex** நிர்வாகவும் செய்திருந்தன.

அன்றைய தினம் பல மணி நேரம் **Majestic City** வர்த்தக வளாகத்தினுள் அமைந்துள்ள தமிழர் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களைச் சந்தித்து உரையாடிய மேயர் குழுவினர் மற்றும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் தேவதாஸ் அவர்கள் மற்றும் சம்மேளனத்தின் சிரேஸ்ட உப தலைவர் அரி அரன் அவர்கள் ஆகியோரும் அவர்களின் தேவைகளையும் தேவையான ஆலோசனைகளையும் கேட்டறிந்தனர்.

இவர்களது வருகையினால். அங்குள்ள வர்த்தக நிறுவனங்களின் உ ரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் மகிழ்ச்சியடைந்தனர்.

தொடர்ந்து அங்கு அழைக்கப்பட்டிருந்த தமிழ் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதம ஆசிரியர்கள் ஆகியோரொடும் குழுவினர் உரையாடினர்கள். கேள்வி நேரத்தின் போது உரையாடிய ''கனடா உதயன் ''பிரதம ஆசிரியர் அவர்கள் '' கௌரவ நகர பிதா அவர்களே! தங்கள் சேவைக்காலத்தில் ஒவ்வொரு தடவையும் தாங்கள் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை தங்கள் அலுவலகத்தில் பணிக்கு அமர்த்தியிருந்தீர்கள். அதற்காக எமது சமூகத்தின் சார்பாகவும் ஊடக நிறுவனங்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்" என்ற தனது அறிமுகத்தை பகிர்ந்து கொண்ட பின்னர், முக்கியமாக கேள்வி ஒன்றை அவரிடம் முன்வைத்தார்.

'நகர பிதா அவர்களே!. தற்போது கூட கோவிட் நோய்த் தொற்று முற்றாக நீங்கி விட்டதாக இல்லை. சில குடும்பங்களில் அனைத்து உறுப்பினர்களுமே நோய்த் தொற்றுக்கு உள்ளாகி அவதிப் பட்டு சிலர் உயிர் இழக்கவும் நேர்ந்தது. ஆனால் முன்னரைப் போல. மாகாண மருத்துவ அதிகாரியோ அன்றி தங்கள் மாநகரசபையின் மருத்துவ அதிகாரியோ எவ்விதமான கருத்துக்களையும் ஊடகங்களிடமோ அன்றி பொது மக்களுக்காகவோ பகிர்ந்து கொள்வதில்லை. இந்த மௌனம் எதற்காக? அனைத்துமே தீர்க்கப்பட்டு விட்டதா? அல்லது அதிகாரிகள் 'களைத்துப் போய்விட்டார்களா?" என்று திடீரேன கேள்வியை முன்வைத்தார்.

அதற்கு மிகவும் பொறுமையாகவும் தகவல்களோடும் அதிக நேரம் எடுத்து பதிலளித்த மேயர் அவர்கள் நாளையோ அன்றி அடுத்த நாளோ நகர சபை மருத்துவ அதிகாரியோடு தொடர்பு கொண்டு தங்கள் ஊடக நிறுவனங்களுக்கு விபரங்களை அறிவிப்பேன்' என்றார்.

அந்த இடத்தில் அப்போது வர்த்தக அன்பர்களும் ஊடக அன்பர்களும் கூடியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

*(14 பக்கத் தொடர்ச்சி)*

## "ஊடகத்துறை படுகொலைகள்" சர்வதேச விசாரணை வேண்டும்

- "தனது கணவரைக் கடத்தியவர்கள் கடத்தியதாக ஒப்புக் கொண்டால் மன்னிப்பு வழங்கத் தயார்"என ஊடகங்கள் வாயிலாக அவர் அறிவித்துள்ளார்.
- பிரேமகீர்த்தியின் மனைவி புற்று நோயையும் சுமந்து கொண்டு 14 வருடங்களாக உண்மையைத்தேடி நீதிக்காக பயணித்துக் கொண்டிருக்கின்றார்.

• இதேபோல்தான் எத்தனையோ ஊடகவியலாளர்களின் உறவுகள் நண்பர்கள் என ஊடக உலகமே நீதிக்காக காத்திருக்கின்றனர்.

இவ்வேளையில் தமிழ் ஊடகத்தறையினரின் சார்பில் ஒரு செய்தியைக் கூற வேண்டிய கடப்பாடு எனக்குள்ளது.

பெரும்பாலான தெற்கு ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் தமிழ் ஊடகத்துறையினரை

- இனவாதிகளாகப் பார்க்கின்றனர்.
- பிரிவினைவாதிகளாக நோக்குகின்றனர்.

தராக்கி சிவராம் ஆங்கில ஊடகங்களில் எழுதியபோது அவர் "இனவாதியாக" "பிரிவினைவாதியாக" தெற்கில் பார்க்கப்படவில்லை. ஆனால் தமிழ் மொழியில் தேசியப் பத்திரிகைகளில் எழதத் தொடங்கவே அவர் தெற்கிற்கு இனவாதியானார் பிரிவினைவாதியாகப் பார்க்கப்பட்டார்.

உண்மையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷையை அதன் நியாயத்தன்மையை ஆங்கிலத்தில் எழுதுவதன்மூலம் தெற்கின் ஆளும்தரப்பிலும் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியிலும் செல்வாக்கு செலுத்தலாம் மனமாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று முழுமையாக நம்பியே ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினார். ஆனால் தனது ஆங்கில எழத்துக்கள் மூலம் தெற்கில் மனமாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை: ஆங்கிலத்தில் தொடர்ந்தும் எழுதுவதால் பலனில்லை என்ற கசப்பான ஜீரணிக்க முடியாத ஏமாற்றத்தைத் தொடர்ந்தே அவர் தமிழில் எழுதத் தொடங்கினார் என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

• தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை குறித்து எழுதுவது எவ்வாறு பிரிவினைவாதமாகும்? இனவாதமாகும்? என்ற கேள்விகளை தெற்கின் ஊடகத்தறையின் முன் வைக்கின்றேன்.

• அதுமாத்திரமல்ல ஊடக தர்மம் என்றவகையில் தெற்கின் கருத்துக்களை தமிழ் ஊடகத்துறையினர் தமிழ் மக்கள் மத்தியில் நிறையவே கொண்டுபோய்ச் சேர்த்துள்ளோம்.

• தமிழீழ விடுதலைப் புலிகள் உற்பட அணைத்து இயக்கங்கள்குறித்த விமர்சனங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளோம்.

• தெற்கு ஊடகத்துறையினருக்கு ஒரு பக்க அடி. ஆனால் தமிழ் ஊடகத்துறையினருக்கு மத்தளத்திற்குப் போன்று இரு பக்க அடிகளை வாங்கினோம் என்பதையும் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

• தமிழ் ஊடகத்துறையில் பலரது உயிர்கள் பறிக்கப்பட "எம்மவர்களும்" காரணமாக இருந்துள்ளார்கள் என்பதையும் இங்கு பதிவு செய்கின்றேன்.

• தமிழ் ஊடகவியலாளர்களை வஞ்சிப்பதில் பழிவாங்குவதில் "மிதவாதத் தமிழ்த் தலைமைகளின்" பங்களிப்பும் அளப்பரியது என்பதையும் இங்கு பதிவ செய்ய விரும்புகின்றேன்.

இனிவரும் காலத்திலாவது நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம்.

இன்றைய நிலையில்

• பல தசாப்தங்களாக மறைக்கப்பட்டுக் கிடக்கின்ற ஊடகவியலாளர்களின் படுகொலைகள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் குறித்த சர்வதேச விசாரணைக்கு எமது ஒன்றுபட்ட குரலை உயர்த்தி ஐ.நா மற்றும் ஐ.நா. மனித உரிமைப்பேரவை நோக்கி எமது பயணத்தை தொடங்க அணைத்து ஊடகத்துறையினருக்கும் தமிழ் ஊடகத்துறையினரின் சார்பில் அழைப்புவிடுக்கின்றேன்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்காக சர்வதேச நீதிகோரி பயணிக்காவிடில் இலங்கையின் ஒட்டு மொத்த ஊடகத்துறையும் தொடர்ந்தும் இருள் சூழ்ந்த பாதைக்குள்ளேயே பயணிக்க வேண்டிவரும்.

• இறுதியாக படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தனி நபர்கள் அல்ல. அவர்களுடைய குடும்பத்தினரை தனித்துவிட்டே சென்றுள்ளனர். அவ்வாறான குடும்பங்கள் பல தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த இயலாத நிலையிலும் உள்ளனர்.

இவர்களின் நிலைகுறித்து திட்டங்கள்வகுத்து செயற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பும் ஒட்டுமொத்த ஊடகத்துறைக்கும் உள்ளது என்பதையும் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

(உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் கடந்த ஜனவரி 27ஆம் திகதி இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவு கூருமுகமாக கறுப்பு ஜனவரிமாதத்தை நினைவு கூர்ந்தனர். கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜ் ஆற்றிய சிறப்பு உரை.)

Email : vathevaraj@gmail.com

கனடிய செய்திகள் Canadian News

# ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியினர் நடத்திய "தமிழர் மரபுரிமை திங்கள்" கொண்டாட்டமாக "முத்தமிழ்க் கலை விழா"










ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியினர் நடத்திய "தமிழர் மரபுரிமை திங்கள்" கொண்டாட்டமாக "முத்தமிழ்க் கலை விழா" 29-01-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

ஆரம்பத்தில் அழைக்கப்பெற்ற சிறப்பு விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றி வைத்து விழாவை தொடக்கினார்கள்.

கல்லூரி அதிபர் பூங்கோதை அமுதன் அதிபர் உரையாற்றினார். அவர் தனது உரையில் வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரியை ஆரம்பித்து தொடர்ச்சியாக ஆசிரியைகளுக்கும் மாணவ மாணவிகளுக்கும் மிகுந்த உற்சாகத்தையும் உணர்வையும் அளித்து கொண்டிருக்கும் சிவஸ்ரீ விஜயகுமாரக் குருக்கள் அவர்களை மரியாதையோடு பாராட்டி மகிழ்ந்தார்.

தொடர்ந்து இந்துக் கல்லூரி மாணவ மாணவிகளின் கலைப் படைப்புக்கள் மேடையேற்றப்பெற்றன. நடனம் நாடகம் பட்டி மண்டபம் மற்றும் உரைகள் ஆகியன இளைய தலைமுறையினரால் நேர்த்தியான முறையில் மேடையேற்றப்பெற்றன.

இந்த கலைப் படைப்புக்கள் சிறந்த முறையில் சபையோருக்காக நிகழ்த்தப்பெற்றமைக்கு கல்லுர்ரி ஆசிரியப் பெருந்தகைகளே காரணமாக இருந்தார்கள் என்றால் அது மிகையாகாது.

முத்தமிழ் விழாவிற்கு கனடாவின் மூன்று நிலை அரசாங்கங்கள் சார்பில் தமிழ் பேசும் உறுப்பினர்களும் தமிழர் அல்லாத மக்கள் பிரதிநிதிகளும் அழைக்கப்பெற்றிருந்தனர்.

ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தின் மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் மற்றும் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதயின் உறுப்பினர் அரிஸ் பாபிகியன் மற்றும் கல்விச்சைப உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துரைகளை வழங்கினர்.

கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியரும்அங்கு வாழ்த்துரை வழங்கினார்.

விழா எவ்வித தொய்வுமின்றி மிகவும் சிறப்பாக நகர்ந்து கொண்டிருந்தது. இதற்கு மூல காரணமாக இருந்தவர்கள் கல்லூரி நிர்வாகத்தினர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகள் மற்றும் தொண்டர்களாக பணியாற்றிய கல்லுர்ரி பழைய மாணவர்கள் ஆகியோர் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு உரையாற்றிய அனைத்து பேச்சாளர்களும் சிவஸ்ரீ பஞசாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களின் ஓயாத உழைப்பும் அயராக முயற்சியும் தான் என்பதை குறிப்பிடத்தவறவில்லை.
















**செய்தியும் படங்களும்: சத்தியன்**

# கனடா கவிஞர் கழகம் நடத்திய "தமிழ் மரபுத் திங்கள்" விழா

கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் கவிஞர் கழகம் நடத்திய "தமிழ் மரபுத் திங்கள்" விழா 28-01-2023 சனிக்கிழமை காலை 10.00 தொடக்கம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள FRONTLINE COMMUNITY CENTRE மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கவிஞர் அருட்கவி ஞானகணேசன் விழாவிற்கு தலைமை வகித்தார். கவிஞர் கழகத்தின் பொருளாளர் கவிஞர் குமரகுரு நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து மாவிலி மைந்தன் சண்முகராஜா, கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் கவிஞர் அகணி சுரேஷ் மற்றும் "சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இவர்களின் உரைகளில் தமிழர்களின் கலை இலக்கியம் பண்பாடு தொடர்பான சாதனைகள் மற்றும் தமிழ் மொழியின் தொன்மை அதற்குள் அடங்கியிருந்த விலைமதிப்பற்ற அறிவியல் பொக்கிஷங்கள் ஆகியவை தொடர்பாக விடயங்கள் அடங்கியிருந்தன.











தொடர்ந்து கவிஞர் கழகத்தின் செயலாளர் கவிஞர் பவானி தர்மகுலசிங்கம் தலைமையில் கவியரங்கம் இடம்பெற்றது.

மேற்படி கவியரங்கத்தில் கவிஞர் கழகத்தின் உறுப்பினர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

# இலங்கை உள்ளூராட்சித் தேர்தல்: வடக்கு–கிழக்கில் கட்சிகளின் பலமும் பலவீனமும்

**(கனடா உதயனிற்காக யாழ் செய்தியாளரின் சிறப்பு கள ஆய்வு)**




இலங்கையின் உள்ளூராட்சித் தேர்தல் இந்த ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி இடம்பெறும் என்ற வர்த்தமானி அறிவித்தல் வெளியானாலும் அது உறுதியாக நடைபெறுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

எனினும், உறுதி செய்யப்படாத இந்த தேர்தலிற்காக அனைத்து கட்சிகளும் தயாராகிவிட்டன. இதில் “நரி” தந்திரம் செய்து தேர்தலைத் தடுத்து விடுவோம் என எண்ணும் ஆளும் அரச தரப்புகூட சட்ட ஓட்டைகளால் நடத்தப்படவேண்டிய சூழல் ஏற்பட்டால் அதற்கும் தயாராக இருப்போம் என்ற மன நிலையில் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தெற்கில் நிலைமை இவ்வாறு இருக்க வடக்கு-கிழக்கிலே தமிழர் பிரதேசம் மாறுபட்ட குழப்பத்துடன் காணப்பட்டாலும் தேர்தல் பணிகள் தெற்கை விடவும் சூடுபிடித்தே காணப்படுகிறது. இதில் எந்த மாவட்டமும் விதிவிலக்கல்ல எனத் துணிந்து கூற முடியும்.

இம்முறை தமிழர் தரப்பிலே, அரச ஆதரவுத் தமிழர் தரப்பு மற்றும் அரச எதிர்ப்புத் தமிழர் தரப்பு ஆகிய இருமுனைப் போட்டிகள் காணப்படுவதோடு சில சுயேச்சைக் குழுக்களும் காணப்படுகின்றன.

இதிலே முதலில் அரச தரப்பைப் பார்த்து விடுவோம். வடக்கு கிழக்கில் ஐ.தே.கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திரக் கட்சி, பெரமுன, ஈ.பி.டி.பி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய அரச ஆதரவு அல்லது தென்னிலங்கை அரசியல் கட்சிகளிலும் தமிழ் வேட்பாளர்கள் களம் இறங்கும் சூழலில் தென்னிலங்கைத் தரப்பு அல்லது அரச ஆதரவுத் தரப்பு என அங்கேயும் ஒரு முகமாக அன்றி பன்முகப்படுத்தப்பட்டவாறே வேட்பாளர்கள் பிரிந்து நிற்பது மட்டுமன்றி பல குழப்பங்களும் காணப்படுகின்றன. இதிலும் குறிப்பாக தெற்கிலே கடந்தமுறை அதிக வாக்குகளைப் பெற்றாலும் தற்போது குழம்பியுள்ள மொட்டுக் கட்சியானது வடக்கு கிழக்கிலே வாக்குகளை பெறவே முடியாது என்ற நிலையை உணர்ந்து இரகசியமாக வேறு கட்சிகளின் பட்டியலில் ஒளித்து விளையாடியபோதும் உளறுவாயன்போன்று பசில்ராஜபக்ச அதனைப் போட்டு உடைத்து விட்டார். இதனால் தமது கட்சியில் அவர்கள் (பெரமுன) எவரும் இல்லை என்றுகூட துணிந்து கூறமுடியாத அளவிற்கு யாழில் ஈ.பி.டி.பியும் மட்டக்களப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் உள்ள விடயம் ஒன்றே அவர்களின் பதற்றத்தைக் காட்டுகின்றது.




இதேநேரம் 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலே யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மிக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியதாக மார்தட்டிய அங்கஜன் இராமநாதனின் வீர வசனமும் வாய்ச்சவாடல்களும், அரச வேலை தருவேன் என போலி வாக்குறுதி வழங்கி ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளை வீதி வீதியாக இலவசமாக அலைய விட்டதையும் மக்கள் மறக்கவில்லை என்பதை காண முடிகிறது. இதேநேரம் வீணைக் கட்சியுடன் மொட்டுக்கட்சி இணைந்தமை அந்தக் கட்சிக்குள்ளேயே பல உரசல்கள் காணப்படுவதோடு ஈ.பி.டி.பியில் தற்போது உள்ள உள்ளூராட்சி உறுப்பினர்கள் முதல் நீண்ட கால உறுப்பினர்கள் வரையில் பலர் பிற கட்சிகளிற்குத் தாவி அங்கே வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

உதாரணமாக யாழ்ப்பாணம் மாநகர சபையிலே அங்கம் வகிக்கும் 10 உறுப்பினர்களில் மூவர் வேறு இரு கட்சிகளில் போட்டியிடும் அதே நேரம் 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அடுத்தபடியான விருப்பு வாக்குகளைப் பெற்ற சட்டத்தரணி மு.றெமீடியஸ் 2023 தேர்தல் வேட்பாளர் பட்டியலிலேயே காணவில்லை. இவையும் அந்தக் கட்சியின் வாக்கு வங்கிக்கு பின்னடைவாக அமையும் எனக் கருதப்படும் அதேநேரம் மட்டக்களப்பில் பிள்ளையான் தனது கட்சியுடன் பெரமுனவிற்கு இடம் வழங்கிய விடயம் தற்போது பூதாகரமாக பேசப்படுகின்றது. அரச ஆதரவுக் கட்சிகளின் நிலைமை இவ்வாறு இருக்கும் அதே நேரம் வடக்கு-கிழக்கில் தேசிய கட்சிகளில் நிற்கும் தமிழ் வேட்பாளர்களாலும் வாக்குகள் சிதறும் வாய்ப்பும் உள்ளது.

இவ்வாறு அரச ஆதரவு மற்றும் தென்னிலங்கை கட்சிகள் அபகரிக்கும் வாக்குகளில் இருந்து தப்பிப்பிழைக்கும் வாக்குகளே தேசிய (தமிழ் கட்சிகளின்) வாக்குகளாக (இருக்கும்) காண்பிக்கப்படும். இங்கேயும் தமிழ் கட்சிகளிற்கான வாக்கும் ஒன்று அல்லது இரண்டு கட்சிகளிற்கு மட்டுமின்றி பல இடங்களில் 3 முனைப் போட்டிகளும் சில இடங்களில் 4 முனைப் போட்டிகளும் நிலவுவதால் வாக்குகள் பிரியும் சாத்தியங்கள் அதிகமாகவுள்ளன.




இந்த தாக்கத்தை உணரும் கட்சிகளாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றுடன் சில சபைகளில் சுயேச்சைக் குழுக்களும் உள்ளன.

இதில் முதலில் விமர்சனத்திற்கு உள்ளாவது இலங்கை தமிழரசுக் கட்சியே. அக்கட்சியை விமர்சித்தாலே வாக்கு எடுக்க முடியும் என்பதே சகல கட்சிகளின் நிலையாக இருக்கிறது. அதேநேரம் தமிழ் அரசுக் கட்சி கூட்டில் இருந்து தனியாக போட்டியிடுவது பலமா, பலவீனமா என்ற பெரும் கேள்வியும் எழுப்பப்படுகின்றது. அதில் இரண்டிற்குமே இடமிருந்தாலும் அதிகம் எது என்பதற்கான விடை தேர்தலிற்கு பிறகே தெரியும். 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது கட்சிகளின் கூட்டு, ஒற்றுமை எனப் பிரஸ்தாபித்து கூட்டமைப்பில் இருந்த 3 கட்சிகளில் புளட் அமைப்பு நியாயமான கோரிக்கைகளை முன் வைத்தலும் ரெலோ எரியும் வீட்டில் பிடுங்குகிறது லாபம் என்றே செயல்பட்டது. இதனால் வடக்கு-கிழக்கிலே தனக்கு வேட்பாளர்கள்கூட இல்லாத சபைகளைக்கூட கோரிநின்றதோடு அடிபட்டு பெற்றும் கொண்டது. இதனைவிட 2018ஆம் ஆண்டே கூட்டமைப்பை விடவும் அதிக இடம் தருவீர்களா என சுரேஸ் பிறேமச்சந்திரனுடன் பேச்சில் ஈடுபட்டு அது சரிவராமல் போகவே பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் ஓடிச் சென்று பேச்சில் ஈடுபட்டு எவையும் சரிவராது ஈற்றில் மீண்டும் கூட்டமைப்பிலேயே சரணாகதி அடைந்த செயலை சிலர் மறந்தாலும் பலர் மறக்கவில்லை. இதனால் சபைகளின் பங்கீட்டில் பல சபைகளை விரும்பியோ விரும்பாமலோ தமிழ் அரசுக் கட்சி ரெலோவிற்கு தாரை வார்த்தனர் என தமிழ் அரசுக் கட்சியினர் இன்றும் குமுறுகின்றனர். உதாரணங்களாக கோப்பாய், கரவெட்டி, மன்னார் நகர சபை என பட்டியல் நீளும். அதே நேரம் ரெலோவின் ஆரவக் கோளாறால் மட்டக்களப்பில் தேர்தலிற்கு முன்பே இரு சபைகளை இழந்தோம் என்கின்றனர்.

இந்தச் சூழலிலேயே 2023ஆம் ஆண்டு தேர்தலிலே வடக்கு-கிழக்கில் போட்டியிடும் இந்த 4 கட்சிகளில் தமிழ் அரசுக் கட்சியில் எப்போதுமே ஏற்படும் குழப்பம் இப்போதும் நிலவுகிறது. ஏனைய கட்சிகளில் ஏற்படும் குழப்பம் ஆள் இன்மையாகவே காணப்படும் அது இந்த தேர்தலிலும் விதிவிலக்காக காணப்படாதபோதும் 2019ஆம் ஆண்டு பல சபைகள் ரெலோவிற்கும் புளட்டிற்கும் கூட்டமைப்பின் காரணமாக விட்டுக் கொடுத்தபோது தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்தவர்களிறகு சந்தர்ப்பம் இழந்த காரணத்திற்காகவே அதிக எண்ணிக்கையானோர் கட்சியை விட்டு வேறு கட்சிக்கு தாவினர் அல்லது கட்சி செயல்பாட்டிலிருந்து ஒதுங்கினர். இதனால் வாக்கு வங்கியில் ஓர் வீழ்ச்சி ஏற்பட்டது. அந்த நிலை தற்போது 100 வீதம் சரி செய்யப்படவில்லை என்றாலும் பெருமளவில் தீர்வு காணப்பட்டுள்ளது என்று கட்சியின் ஆதரவாளர்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை மெய்ப்பிக்கப்பட்டால் தமிழ் அரசுக் கட்சி மீண்டு வரும்.

இதேநேரம் 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் புதிய கூட்டணியை அமைத்த சி.வி. விக்னேஸ்வரனின் பக்கமிருந்த சுரேஸ் பிறேமச்சந்திரன், அருந்தவபாலன், சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் அனைவருமே கூட்டைவிட்டுப் பறந்த நிலையில் வேட்பு மனுவிற்கே ஆள் இல்லை என்ற நிலை காணப்பட்டது. இருந்தபோதும் கட்சி இன்றி நடுவழியில் நின்ற மணிவண்ணன் விக்னேஸ்வரனின் வெறுமையை சரியாக பயன்படுத்திக்கொண்டார். இதிலே வவுனியா மாநகர சபைக்கான வேட்பு மனுவைத் தவிர ஏனைய அனைத்து வேட்பு மனுக்களில் உள்ள வேட்பாளர்களை சி.வி.விக்னேஸ்வரன் அறிந்திருக்கவே இல்லை. அவர்களை மணிவண்ணன் மட்டுமே அறிவார் அதனால் கட்சி எதிர்காலம் யாரின் கையில் என்ற நிலை உள்ளது. மணிவண்ணனின் ஆதரவு நல்லூர்ப் பிரதேச சபை மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை என்பவற்றில் மட்டுமே உள்ளது. அங்கேயும் மாநகர சபையில் முதல்வராக இருந்தபோது ஏதோ சாதித்ததாகக் கூறினாலும் அதனைவிட குளறுபடிகளும் மூடு மந்திர நிர்வாகமுமே அதிகமாக காணப்படுகின்றது என ஏனைய உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்கின்றது. இப்படி இருக்கிறது மான் சின்னத்தில் போட்டியிடுபவர்களின் நிலை.

இவை அனைத்திற்கும் மேலாக “நாம்தான் பழம்பெரும் கட்சி, எந்த ஆயுதக் குழுவுடனும் எப்போதும் தொடர்பில்லை நாமே கொள்கை வாதிகள்” என வீராப்பு மட்டுமே பேசும் கட்சியாகவுள்ளது அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் நிலைப்பாடு. 2018ஆம் ஆண்டுத் தேர்தலிலே வீடா, சைக்கிளா என்ற எதிர்பார்ப்பு மிகவும் விறுவிறுப்பாக காணபட்டது. இந்த நிலைப்பாடு தற்போது 2023 ஆம் ஆண்டுக்கான தேர்தலில் 50 வீதம்கூட காணப்படவே இல்லை. வடக்கு கிழக்கு மாகாணத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் 40 வேட்பு மனுவிலே எந்தவொரு சபையின் வேட்புமனுவிலேனும் ஓர் சாதனையாளர், பெரும் புள்ளி, தீராத லட்சியவாதி, இவரின் பெயரிற்காகவே வாக்கு கிடைக்கும் எனக் குறிப்பிடும் ஒரு வேட்பாளரைக் காண முடியவில்லை. உதாரணமாக யாழ்ப்பாணம் மாநகர சபை எனில் அங்கே ஏற்கனவே உறுப்பினராக இருக்கும் மூவருடன் முதன்மை வேட்பாளர் எனக் கூறப்படுபவர்கூட இம்முறை வெல்வாரா என்ற சந்தேகமே காணப்படுகின்றது. இருந்தபோதும் அனைவரும் எடுக்கும் வாக்குகள் விகிதாசாரப் பட்டியல் ஆசணங்களைத் தீர்மானிக்கும்.

இவை அனைத்திற்கும் மேலாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி 5 கட்சிகளின் கூட்டாக நாம்தான் தற்போது கூட்டமைப்பு எனக்கூறி களமிறங்கியுள்ளனர். கட்சியின் D.T.N.F என்ற குறியீட்டை முதலில் D.T.N.A என உச்சரித்த உடனேயே D என்றால் டூப்பிளிக்கேற் T.N.A என்ற விமர்சனம் எழுந்தபோது சத்தம் சந்தடி இன்றி Dயும் காணாமல் போய்விட்டது. இதேநேரம் வு.ேயு என்ற பெயரில் ஓர் பதிவு செய்த கட்சி இல்லாத காரணத்தால் அந்தச் சொல்லை எவர் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்ற நிலைப்பாடே தற்போது வரையில் காணப்படுகின்றது.

இதேநேரம் இராணுவத்தோடு ஒட்டுக் குழுக்களாகச் செயல்பட்டு கூட்டமைப்பின் பெயரிலேயே இவர்கள் புனிதர்களாயினர் என்ற குற்றச் சாட்டின் மத்தியில் தற்போது சைவக் கடைகளான அரசியல் கட்சிகள் தனியாகவும் ஆயுதக் குழுக்களான “இறைச்சிக் கடை” ஒருபுறம் என்னும் அளவிற்கு நிலை உள்ளது.

இவர்களின் திசையில் தாம் ஒற்றுமை என்பதற்காக பல கட்சிகளின் கூட்டு எனவும் இவை இரண்டிற்காகவும் மக்கள் வாக்களிப்பர் என நம்புகின்றனர்.




இந்த ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக புளட் அமைப்பின் ஆர். ஆர் எனப்படுபவரால் பதிவு செய்யப்பட்ட கட்சி என்பதனையே மறைக்கவும் முயல்கின்றனர்.

கொள்கை அரசியல் என்பதற்கு பதிலாக வாக்கு வங்கி அரசியலே தமிழ்க் கட்சிகளிடையே காணப்டுகிறது.

# இந்துக்களின் புனித பூமிகளை விடுவிக்க மறுக்கும் இராணுவம்

- நடராசா லோகதயாளன்



இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டம் காங்கேசன்துறையில் உள்ள 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த திரிகோண சத்திரம் பகுதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்ற துணைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

வட இலங்கைக்கு மற்றும் இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டு மற்றும் திரும்பும் சைவர்கள் தங்கிச் செல்லும் இடமாக விளங்கிய காங்கேசன்துறைப் பகுதியில் 200 ஆண்டுக்கால சரித்திரம் மிக்க திரிகோண சத்திரத்தை தங்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவிடம் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்துள்ளார். எனினும் அது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை என்ற கோரிக்கையுடன் சிவபூமி அறக்கட்டளையின் தலைவராகவும் இருக்கும் ஆறு திருமுருகன் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்துக்களுக்குச் சொந்தமான அந்த பரந்த காணியில் இலங்கை இராணுவம் தற்போது விடுதி ஒன்றை வர்த்தக ரீதியாக நடாத்துகிறது. "200 ஆண்டுகள் பழமை வாய்ந்த எமது பூர்வீக மடப் பகுதியே இன்று காங்கேசன்துறையிலுள்ள நிலத்திலேயே தல்செவன உல்லாச விடுதி அமைந்துள்ளது" என்று ஆறு திருமுருகன் வலியுறுத்துகிறார்.

சைவ சமயத்தவர்களின் இந்த திரிகோண சத்திரம் 200 ஆண்டுகளிற்கு முன்பு கந்தர்மடத்தைச் சேர்ந்த சித்தரால் சூரிய நமஸ்காரம் மற்றும் யாத்திரிகர்கள் தங்கு விடுதியாக ஏற்படுத்தப்பட்டது. அந்த இடம் 106 பரப்பு கொண்ட காணியாகும்.

"அந்த இடமே தற்போது தல்செவன விடுதியாக உள்ளபோதிலும் சுமார் 35 பரப்புக் காணியே அவர்களின் விடுதிப் பாவனையாகவும் எஞ்சியவை சுற்றுலா வருபவர்களின் பொழுதுபோக்கும் இடங்களாகவும் உள்ளன. சமய ரீதியிலான முக்கியத்துவம்கொண்ட எமது நிலத்தை எம்மிடமே தாருங்கள் என நாம் மகிந்த அரசின் காலத்திலும் கேட்டோம், அதன் பின்பு மைத்திரி அரசிலும் கேட்டோம் பலன் ஏதும் கிட்டவில்லை" என்று ஆறு திருமுருகன் கனடா உதயனிடம் கூறி வருந்தினார்.



இறைபணி மற்றும் சைவநெறி தொண்டர்களின் பயன்பாட்டிற்காக கொடுக்கப்பட்ட இடத்தை அந்தப் பணிகளிற்காக விடுவிக்க வேண்டுமென்று அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணம் வந்திருந்த போதும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதை மீண்டும் வலியுறுத்துவதாகவும் அவர் கூறினார்.

தேசிய பொங்கல் விழாவிற்காக ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்திருந்த போது நல்லை ஆதீனத்தில் வைத்து அந்தக் கோரிக்கை மீண்டும் விடுக்கப்பட்டது. அதன் பிறகு யாழ்ப்பாணத்தில் மேலும் சில தொகுதி நிலங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

அந்த காணியை முற்றாக விடுவிக்காவிடினும், அந்த விடுதி இருக்கும் இடம் தவிர்த்து மீதமுள்ள 70 பரப்பு காணியை விட முடியும். அதை அவர் இன்று எண்ணினாலும் உடனடியாக எவ்வித நெருக்கடியும் இன்றி விடுவிக்க முடியும் என்று கூறிய ஆறு திருமுருகன், அதை அவர் செய்வார் என்ற எதிர்பார்ப்பில் காத்திருப்பதாக மேலும் கூறினார்.

போர்க்காலத்தில் வலிந்து கைப்பற்றிய பல காணிகள் இன்னும் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. அதற்கு அப்பாற்பட்டு போரிற்கு பிறகும் முல்லைத்தீவு மாவட்டம் குறுந்தூர்மலைப் பகுதியில் ஆதி சிவன் கோவிலுக்கு சொந்தமான காணியை அபகரித்து அங்கு பௌத்த விகாரை ஒன்று நீதிமன்ற உத்தரவையும் மீறி கட்டப்படுகிறது.

இதே போன்று தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு-கிழக்கில் பல இடங்களில் இந்து ஆலயங்கள் மற்றும் அறக்கட்டளைக்கு சொந்தமான ஏராளமான காணிகள் இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படவில்லை என்று தமிழ் மக்கள் வருந்துகின்றனர். இதிலே யாழ்ப்பாணம் வலி வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலத்தில் மட்டும் 7 சைவ ஆலயங்கள் நித்திய பூசை இன்றி 30 ஆண்டுகளாக உள்ளன. இதேபோன்று கீரிமலையில் உள்ள சடையம்மா மடம் போன்ற சைவர்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் இன்றும் ஆக்கிரமிப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CRP PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?
நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.
நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.
தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை மக்கள் பல வகையில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பல மில்லியன் ரூபாய் செலவு செய்து நாட்டின் சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாட வேண்டுமா?

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் ஒன்றிய தலைவி மனுவல் உதயச்சந்திரா



நாட்டில் மக்கள் பல விதங்களிலும் பாதிக்கப்பட்டுள்ள போதும் பல மில்லியன் ரூபாய் செலவு செய்து இந்த நாட்டின் சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாட வேண்டுமா? என என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் ஒன்றிய தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் வியாழக்கிழமை (2) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கையின் 75வது சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. பல மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஜனாதிபதி தலைமையில் சுதந்திர தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் பொருளாதார நிலை மிகவும் மோசமாக உள்ள நிலையில் பல மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இந்த சுதந்திர தினம் கொண்டாடப்படுவது அவசியமானதா?

சுதந்திரம் இல்லாத இந்த நாட்டிற்கு சுதந்திர தினம் தேவையா? இந்த நாட்டில் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் நிலையில் பல குடும்பங்கள் வாழ்வாதாரம் இன்றி பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளனர். விவசாயிகள் இன்று வீதிக்கு வரும் நிலையில் உள்ளனர். இவ்வாறு நாட்டில் மக்கள் பல விதங்களிலும் பாதிக்கப்பட்டுள்ள போதும் எவ்வளவு மில்லியன் ரூபாய் செலவு செய்து இந்த சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாட வேண்டுமா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் வீதியில் இறங்கி போராடி வருகிறோம். பல வருடங்களாக போராடி வருகிறோம். தமிழர்களாக இருந்தாலும் சிங்களவர்களாக இருந்தாலும் சரி இந்த நாட்டில் மக்கள் பல வித பிரச்சினைகளுக்கு இன்று வரை முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் யாருக்காக இவ்வளவு மில்லியன் ரூபாய் நிதி செலவு செய்து இந்த சுதந்திர தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றது. அவர் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்

# "வெவ்வேறு கண்ணோட்டங்களை கொண்டவர்கள் தீர்வுகளை நோக்கி ஒன்றிணைந்து செயல்படும் போது, ஜனநாயகம் வலுப்பெறும்"

உலக செய்திகள்
World News



## அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்

அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் புதன்கிழமை(1-2-2023) சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வுக்கான நம்பிக்கைகள் குறித்து விவாதித்ததாக விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார்.

வெவ்வேறு கண்ணோட்டங்களை கொண்டவர்கள் தீர்வுகளை நோக்கி ஒன்றிணைந்து செயல்படும் போது, ஜனநாயகம் வலுப்பெறும் என்றும் கூறியுள்ளார்.

இந்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனோ கணேசன், எம்.ஏ சுமந்திரன், ரவூப் ஹக்கீம், தர்மலிங்கம் சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரிஷாட் பதியுதீன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

02-02-2023

சினிமா

# பழம்பெரும் நடிகை ஜமுனா மறைவு



தமிழ், தெலுங்கு, கன்னடம் படங்களில் நடித்த பழம்பெரும் நடிகை ஜமுனா காலமானார். அவருக்கு வயது 86.

கர்நாடகாவில் உள்ள ஹம்பி என்ற ஊரில் நிப்பானி சீனிவாச ராவ்- கவுசல்யா தேவி ஆகியோருக்குப் பிறந்தவர் ஜமுனா. ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத்திலுள்ள துக்கரிலாவில் வளர்ந்தார். ஜமுனா தனது 16 வயதிலிருந்தே திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினார்.

கடந்த 1953-ம் ஆண்டு வெளியான "புட்டிலு" என்கிற தெலுங்குப் படத்தில் கதாநாயகியாக அறிமுகமானார். தமிழில் "பணம் படுத்தும் பாடு" படத்தின் மூலம் அறிமுகமானவருக்கு "மிஸ்ஸியம்மா" படம் புகழைத் தேடித் தந்தது.

"தூங்காதே தம்பி தூங்காதே" படத்தில் கமலுக்கு தாயாக நடித்திருந்தார். இந்தியிலும் பல்வேறு படங்களில் நடித்தவர், ஃபிலிம் ஃபேர் விருதையும் பெற்றிருந்தார். 100-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த ஜமுனா, 1989-ல் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ராஜமுந்திரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1990-களின் இறுதியில் பாரதிய ஜனதா கட்சியில் இணைந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

இந்நிலையில், வயது மூப்பு காரணமாக ஹைதராபாத்தில் உள்ள தனது வீட்டில் காலமானார் ஜமுனா. அவரது மறைவுக்குத் திரையுலகப் பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# விவசாயத்தை போதித்த நடிகர் கார்த்தி



சென்னையில் நடந்த உழவன் அறக்கட்டளை விழாவில் பேசிய கார்த்தி, விவசாயம் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள உழவன் அறக்கட்டளையைத் தொடங்கினேன்.

சமுதாயத்தில் விவசாயிகளின் மீதுள்ள மரியாதையும், அறிவும் குறைவாக இருக்கிறது. அவர்களை அங்கீகரிப்பதும், அடையாளப்படுத்துவதும் முக்கியம். அதற்காகத்தான் உழவர் விருதுகள் வழங்கும் பணியைத் தொடங்கினோம்.

சமூகத்தில் இதன் பிரதிபலிப்பு நிச்சயமாக இருக்கும் என்பதற்காகவே ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து இவ்விழாவை நடத்தி வருகிறோம். ஒரு மொழியை இழந்தால், அந்தக் கலாச்சாரமே அழிந்துவிடும். ஒரு குறிப்பிட்ட விதையை நாம் இழந்துவிட்டால், அதை மீண்டும் உருவாக்க முடியாது. நமது குழந்தைகளிடம், சாப்பாட்டை வீணாக்காதீர்கள் என்று சொல்கிறோம்.

ஆனால், சாப்பாடு எங்கிருந்து வருகிறது என்று சொல்லித் தருகிறோமா? நான் என் மகள் உமையாளை அழைத்துச் சென்று, ஒருநாள் முழுவதும் விவசாய நிலத்தைச் சுற்றிக் காண்பித்தேன். அனைத்துப் பள்ளிகளிலும் விவசாய சுற்றுலாவைக் கட்டாயமாக்க வேண்டும் என்றார்.

# என் முகத்தை வைத்து கிண்டல் செய்கின்றார்கள் — நடிகர் யோகிபாபு கவலை



என் முகத்தை வைத்து பலரும் கிண்டல் செய்துள்ளதாக நடிகர் யோகிபாபு தெரிவித்துள்ளனர். யோகிபாபு நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் "பொம்மை நாயகி".. வழக்கமான காமெடியனாக நடிக்கும் யோகிபாபு, இந்த படத்தில் தனது பெண் குழந்தைக்காக போராடும் தந்தையாக நடித்துள்ளார். விரைவில் வெளியாகும் இந்த படம் யோகிபாபுவிற்கு புதிய முகவரியை கொடுக்கும் என கூறப்படுகிறது.

இந்நிலையில் இப்படத்தின் ப்ரோமோ நிகழ்ச்சி சென்னையில் இன்று நடைபெற்றது. அதில் கலந்துக்கொண்ட பின்னர் பேசிய யோகிபாபு, என்ன நான் காமெடியன் என்று எல்லா மேடைகளிலும் கூறி வருகிறேன். அதற்கு காரணம் என் தொழில் அது. படத்தில் நான் காமெடியனாக நடிக்க தெரு தெருவாக அலைந்திருக்கிறேன். என் முகத்தை பலரும் கிண்டல் செய்துள்ளனர். படத்தில் நடிக்கப்போது மேக்கப் போடுவேன். அப்போது என்னை திட்டுவார்கள். இதெல்லாம் எல்லா அறிமுக நடிகர்களுக்கும் நடப்பதுதான் என்றாலும், எனக்கு கொஞ்சம் அதிகமாகவே நடந்துள்ளது. எப்பவுமே என் முகம் ஜோக்கர் முகம்தான். தமிழ் சினிமா மட்டுமில்லாமல் எந்த சினிமாவிற்கு சென்றாலும் நான் காமெடியன் தான் என்று உருக்கமாக கூறினார்.



# விஜய்க்கு கொக்கிப் போட நினைத்த கமல். நைசாக நழுவிய விஜய்

விஜய் நடிக்கும் "தளபதி 67" திரைப்படத்தின் படப்பிடிப்பு சமீப நாட்களாக நடைபெற்று வந்த நிலையில் இன்று படக்குழுவினர் படப்பிடிப்பிற்காக காஷ்மீருக்கு பயணிக்கின்றனர். "தளபதி 67" திரைப்படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்கி வருகிறார் என்ற செய்தி பலரும் அறிந்ததே. இத்திரைப்படத்தில் மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சஞ்சய் தத், பிரியா ஆனந்த் ஆகியோர் நடித்து வருகின்றனர். மேலும் இதில் விஜய்க்கு ஜோடியாக த்ரிஷா நடிக்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் "தளபதி 67" லோகேஷ் சினிமாட்டிக் யுனிவர்ஸுக்குள் (LCU) வருவதாகவும் பேச்சுக்கள் அடிபட்டன. ஆதலால் இத்திரைப்படத்தில் நிச்சயமாக கமல்ஹாசன் ஒரு கேமியோ ரோலில் இடம்பெறுகிறார் என தகவல்கள் வெளிவந்த வண்ணம் இருந்தன. ஆனால் தற்போது கமல்ஹாசன் "தளபதி 67" திரைப்படத்தில் நடிப்பது குறித்தான ஒரு சூடான தகவல் வெளிவந்துள்ளது. அதாவது "தளபதி 67" திரைப்படத்தில் கமல்ஹாசன் நடிக்க மறுத்துவிட்டாராம்.

கமல்ஹாசன் நடிக்க மறுத்ததற்கான காரணமாக ஒன்று கூறப்படுகிறது. அதாவது கமல்ஹாசன் தனது ராஜ்கமல் பேன்னரில் விஜய்யை வைத்து ஒரு திரைப்படத்தை இயக்க திட்டமிட்டிருந்தாராம். இதற்கான முயற்சியாகத்தான் "தளபதி 67" திரைப்படத்தில் கமல்ஹாசன் நடிப்பதாக முடிவெடுத்தாராம்.

இது குறித்து அணுகியபோது, கமல்ஹாசன் தயாரிப்பில் விஜய் நடிக்க மறுப்புத் தெரிவித்துவிட்டாராம். இதன் காரணமாகத்தான் கமல்ஹாசன் "தளபதி 67" திரைப்படத்தில் நடிக்க மறுத்துவிட்டதாக ஒரு தகவல் வெளிவருகிறது.

# முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு பேனா நினைவுச்சின்னம் கருத்துக்கேட்பு கூட்டத்தில் சீமான் கடும் எதிர்ப்பு

பேனா நினைவுச்சின்னம் குறித்த கருத்துக்கேட்பு கூட்டத்தில், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசும்போது திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் கோபமடைந்த சீமான், பேனா நினைவுச்சின்னம் அமைத்தால் உடைப்பேன் என்று பேசியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் எழுத்தாற்றலை நினைவுகூரும் வகையில், மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தின் பின்புறம், வங்கக்கடலில் பேனா வடிவ நினைவுச்சின்னம் ரூ.81 கோடியில் அமைக்க தமிழக அரசு முயற்சி எடுத்துள்ளது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பில், பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் சு.அமிர்தஜோதி, மாசுக்கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர் செயலர் கண்ணன் ஆகியோர் தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்றது.இதில் பல்வேறு அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள், சுற்றுச்சூழல் சார்ந்த அமைப்புகள், மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்று கருத்துகளை தெரிவித்தனர்.சட்டப்பஞ்சாயத்து இயக்க பொதுச்செயலாளர் அருள்முருகானந்தம், ஆம் ஆத்மி கட்சியின் வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்த சங்கர், நொச்சிக்குப்பத்தைச் சேர்ந்த பெருமாள், திருவல்லிக்கேணி வர்த்தகர் சங்கத்தைச் சேர்ந்த வி.பி.மணி, பாஜக மீனவர் பிரிவைச் சேர்ந்த நீலாங்கரை முனுசாமி, மீனவர் அமைப்பின் வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்த தனசேகர், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர் செயலர் கண்ணன், தேசிய



பாரம்பரிய மீனவர்சங்க ஒருங்கிணைப்பாளர் சேனாதிபதி சின்னத்தம்பி, ராயபுரத்தைச் சேர்ந்த இளங்கோ, மீனவர் அமைப்பு நிர்வாகி மகேஷ், சமூக செயல்பாட்டாளர் முகிலன், மீனவர் அமைப்பைச் சேர்ந்த காசிமேடு நாஞ்சில் ரவி, திருமுருகன் காந்தி ஆகியோர் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர்.

அப்போது, குறிப்பிட்ட சிலர் எழுந்து எதிர்ப்பு தெரிவித்ததால், அவர்களுக்கும் திமுகவினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர்களை காவல்துறையினர் சமாதானப்படுத்தினர். இதையடுத்து, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியதாவது:நீங்கள் சத்தம் போடுங்கள். உங்களுக்கும் சேர்த்துதான் நான் பேசுகிறேன். நினைவுச்சின்னம் வைக்க வேண்டாம் என்று யாரும் கூறவில்லை. கடலுக்குள் வேண்டாம் என்கிறோம். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு வரும். சின்னம் அமைக்க 8,651.13 சதுரமீட்டர் பகுதியை எடுத்து அங்கு கல், மண் கொட்ட வேண்டும். அழுத்தம் வரும். பவளப்பாறைகள் பாதிக்கப்படும். அங்கு பேனாவை வைத்தால், ஒரு நாள் வந்து நான் உடைப்பேன். அறிவாலயத்தில் அல்லது அவரது நினைவிடத்துக்குள் வைக்க வேண்டியதுதானே. சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக கடலுக்குள் பேனா சின்னம் வைப்பதை எதிர்க்கிறோம். நினைவுச்சின்னம் அமைப்பதை தடுத்து நிறுத்தும்வரை போராட்டத்தில் ஈடுபடுவோம். இது உறுதி என்றார்.

அதைத் தொடர்ந்து, ஆட்சியரிடம் அவரது ஆதரவாளர்கள் கையெழுத்திட்டு அளித்த கடிதங்களையும் வழங்கினார்.அதன்பின், பசும்பொன் பாண்டியன், தம்பிதுரை உள்ளிட்ட மீனவர் அமைப்புகளைச் சேர்ந்த பலர் ஆதரவாக பேசினர். இறுதியாக பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த பிரபாகரன் பேசும்போது, ''காலநிலை மாற்றம் குறித்த அறிக்கையில் சென்னைக்கு பாதிப்பு இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் நினைவுச்சின்னத்தை மாற்றி அமைக்கும் நிலைஏற்பட்டுவிடக் கூடாது. கருணாநிதி இருந்திருந்தால் இதற்கு அனுமதியளித்திருக்க மாட்டார். இதைக் கருத்தில் கொண்டு முதல்வர் முடிவெடுக்க வேண்டும்'' என்றார்.

அதைத்தொடர்ந்து, கருத்துக்கேட்பு கூட்டம் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்ட நிலையில், சுற்றுச்சூழல் சார்ந்த சில அமைப்பினர்தங்களுக்கு பேச வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று கூறி, அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களுக்கு பேச வாய்ப்பு மறுக்கப்பட்டதால் அவர்கள் எதிர்ப்பு தெரிவித்து கூட்டத்தைப் புறக்கணித்தனர்.

# ஐ.டி. பயன்பாட்டில் முன்னோடியாக விளங்கும் தமிழக காவல்துறை: தமிழக டிஜிபி சைலேந்திர பாபு பெருமிதம்

திருச்சி தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் (என்ஐடி) அவசர கால தொடர்பு மற்றும் சேவை சிறப்பு ஆராய்ச்சி மையத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு திருச்சி என்ஐடி முதன்மையர் (கல்வி) ராம கல்யாண் தலைமை வகித்தார்.

அவசர கால தொடர்பு மற்றும் சேவை சிறப்பு ஆராய்ச்சி மையத்தின் தலைவர் என்.சிவக்குமரன் முன்னிலை வகித்தார். சிடாக் நிறுவனத்தின் பொது இயக்குநர் இ.மகேஷ் கவுரவ விருந்தினராக கலந்து கொண்டார்.தமிழக டிஜிபி சைலேந்திர பாபு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு அவசர கால தொடர்பு மற்றும் சேவை சிறப்பு ஆராய்ச்சி மையத்தை திறந்துவைத்தார்.

அப்போது அவர் பேசியது: இந்தியாவிலேயே தமிழக காவல் துறைதான் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் பயன்பாட்டில் முன்னோடியாக விளங்குகிறது.நுண்ணலை தொடர்பு: உதாரணமாக, பிஎஸ்என்எல் மற்றும் பிற தனியார் தொலைத்தொடர்புகள் முழுவதுமாக துண்டிக்கப்பட்டாலும் கூட, தமிழக காவல் துறையின் தொலைத்தொடர்பு பாதிக்கப்படாமல் தனித்து செயல்படும் வகையில் நுண்ணலை தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோல, காவல் துறை கட்டுப்பாட்டு அறைக்கு கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 55 லட்சம் புகார்கள் வந்துள்ளன. மேலும், மாநிலம் முழுவதும் உள்ள 1,498 காவல் நிலையங்களில் 9.7 லட்சம் புகார்கள் வந்துள்ளன.இதுதவிர, மகளிர் காவல் நிலையங்களில் 75 ஆயிரம் புகார்கள் பெறப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலான புகார்களுக்கு உடனடித் தீர்வு காண தொழில்நுட்பம் வெகுவாக உதவியுள்ளது. இலக்கு பெரியதாக இருக்கட்டும்: என்ஐடி போன்ற தலைசிறந்த நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் பொதுமக்களுக்கு உதவிபுரியும் கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்கு பெரிதாக இருக்கவேண்டும். அதை அடையும் வரை கடுமையாக உழைக்க வேண்டும் என்றார். விழாவில், மத்திய மண்டல ஐ.ஜி. க.கார்த்திகேயன், திருச்சி மாநகர காவல் ஆணையர் எம்.சத்தியபிரியா, திருச்சி சரக டிஐஜி ஏ.சரவணசுந்தர், எஸ்.பி சுஜித்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்

# தமிழகம் முழுவதும் விரைவில் காலை உணவுத் திட்டம்: முதல்வர் ஸ்டாலின் உறுதி



"காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தி, கடந்த செப்டம்பர் மாதம் 15ம் தேதி அண்ணா பிறந்தநாள் அன்று அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு ஒரு பகுதியிலே, ஒரு சில மாவட்டங்களில் அது நிறைவேற்றப் பட்டிருக்கிறது. விரைவில் முழுமையாக அதுவும் நிறைவேற்றப்பட இருக்கிறது'' என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். வேலூர் மாவட்டத்தில், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் தமிழ்நாடு முழுவதும் 784 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5351 புதிய பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிக்கான குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை (பிப்.1) தொடங்கி வைத்தார்.

அம்மாவட்டத்தில் உள்ள 7 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 55 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.15.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 114 வகுப்பறைக் கட்டடங்களுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.பின்னர் இந்த நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் பேசியது: "நான் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்கேற்கின்ற நேரத்தில் தவறாமல் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும் கல்வியை, மருத்துவத்தை இரண்டு கண்களாக நாங்கள் பாவித்து அதற்காக நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று பலமுறை நான் எடுத்துச் சொன்னதுண்டு. அந்த வகையில் தான், இன்றைக்கு இந்தத் திட்டம் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

நான் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டு நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்கு பின்னால், பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு சென்ற நேரத்தில், அந்தந்த மாவட்டங்களில் அந்தந்த பகுதிகளில் திடீர் திடீரென்று ஆய்வுக்கு நான் செல்வதுண்டு. இன்ஸ்பெக்ஷன் என்ற பெயரிலே பல பள்ளிகளுக்குச் சென்றபோது, அந்த பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்கள், மாணவியர்கள் எல்லாம் என்னிடத்திலே சொல்வதுண்டு, நாங்கள் காலையில் கூட உணவு அருந்தாமல் பள்ளிக்கு வந்து விடுகிறோம் என்று உருக்கத்தோடு சொன்னார்கள்.அதைக் கேட்டுவிட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். அதற்குப் பின்னால் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் அழைத்து,

விரைவில் முழுமையாக அதுவும் நிறைவேற்றப்பட இருக்கிறது. அதேபோலத்தான் பல பள்ளிக் கட்டடங்கள் இடிந்த நிலையில், வகுப்பறைகள் இல்லாத வகையில் மரத்தடி நிழல்களில் உட்கார வைத்து அதில் வகுப்புகள் நடத்தக்கூடிய அந்த காட்சிகளையும் நாங்கள் கண்கூடாக பார்த்தோம்.

இதையெல்லாம் உடனடியாக சீர் செய்ய வேண்டும், அந்த மாணவர்கள் வசதியாக நல்லவித அடிப்படை வசதிகளை ஏற்றுக்கொண்டு அவர்கள் படிக்க வேண்டும்.அப்போதுதான் அவர்களுடைய சிந்தனைகள் அந்தக் கல்வியை போய் சேர முடியும் என்பதை ஆழ்ந்து சிந்தித்து, அதற்குப் பிறகு பேராசிரியர் அன்பழகன் பெயரிலே இந்த பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தினை அறிவித்திருக்கிறோம். அதற்காக 2400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று முடிவு செய்து, அந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.எனவே இதன் மூலமாக பல பள்ளிகள் பாழடைந்திருக்கக்கூடிய, சீரழிந்து இருக்கக்கூடிய அந்த பள்ளிகளெல்லாம் இன்றைக்கு மேம்படக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். இதை நல்ல வகையில், அந்தந்த பகுதியிலே இருக்கக்கூடிய அந்தந்த பள்ளி மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்'' என்று அவர் பேசினார்.

மலேசிய மடல்

# ஈராண்டு இடைவெளிக்குப்பின் பத்துமலை திருமுருகன் திருத்தலத்தில் தைப்பூசத் திருவிழா கோலாகலம்



நக்கீரன்

பத்துமலை, ஜன.31:

2023-ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழா பிப்ரவரி 5-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மலேசிய இந்து சமயத்திற்கே உரிய பாரம்பரிய கோலாகலத்துடனும் பக்திப் பெருக்குடனும் கொண்டாடப்பட இருக்கிறது.



இந்து சமயத்தின் ஆன்மிக நெறியில் அறிவின் பெட்டகமாகவும் முக்தியின் வெளியீடாகவும் கௌமார வழிபாட்டு முறையின் நாயகனாகவும் திகழும் திருமுருகக் கடவுளுக்கான வேண்டுதலையும் பரிகார நிறைவேற்றுதலையும் கடந்த ஈராண்டுகளாக நிறைவேற்ற முடியாத பக்த அன்பர்கள் இந்த ஆண்டு தைப்பூச நந்நாளை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதால், இவ்வாண்டு பக்தர்கள், சுற்றுப் பயணியர், வேடிக்கை பார்ப்போர் உள்ளிட்ட பொதுமக்கள் அதிக அளவில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏறக்குறைய 16 இலட்ச பக்தர்களை எதிர்பார்ப்பதாக, இதன் தொடர்பில் பத்துமலை முருகன் ஆலய வளாக அலுவலகத்தில் ஜனவரி 31, பிற்பகலில் நடைபெற்ற செய்தியாளர்க் கூட்டத்தில் அருள்மிகு மாரியம்மன் தேவஸ்தான தலைவர் டான்ஸ்ரீ ஆர். நடராஜா தெரிவித்தார்.

இந்த விழாவின் தொடக்கமாக, பிப்ரவரி 3, வெள்ளிக்கிழமை இரவு 9:00 மணியளவில் தாய்க் கோயில் என்று வருணிக்கப்படும் அருள்மிகு கோலாலம்பூர் மாரியம்மன் ஆலயத்தில் இருந்து இரதம் புறப்பட இருக்கிறது.

கோலாலம்பூர் துன் எச்.எஸ்.லீ சாலை, துன் பேராக் சாலை, சுல்தான் அஸ்லான் ஷா(ஈப்போ) சாலை, கூச்சிங் சாலை என்றெல்லாம் 18 இடங்களைக் கடந்து அடுத்த நாள் பிற்பகலில் பத்து மலை ஆலய வளாகத்தை இரதம் வந்து சேரும் என்றும் தொடர்ந்து சேவற்கொடி ஏற்றப்பட்ட பின்னர், தைப்பூச விழா முறையாகத் தொடங்கும் என்றும் நடராஜா செய்தியாளர்களிடம் சொன்னார்.

தைப்பூசத் திருவிழா தொடர்பில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம் என்று தெரிவித்த அவர், இதன் தொடர்பில் போதிய ஒத்துழைப்பை வழங்கிவரும் கோலாலம்பூர் மாநகர் மன்றம், செலாயாங் நகராட்சிக் கழகம் மற்றும் பாதுகாப்பு பணி தொடர்பில் செந்தூல் மாவட்ட காவல் நிலையம், கோம்பாக் மாவட்ட காவல் நிலையம் மற்றும் கோலாலம்பூர் கேம்பல் சாலை காவல் அலுவலகங்களுக்கும் ஒருசேர நன்றி தெரிவித்தார் நடராஜா.

பக்தர்கள் ஏந்தும் காவடி, பால் குடம் தொடர்பான கட்டணம், காவடி-பால்குடம் ஏந்துவதற்கு முன் அருகில் உள்ள ஆற்றங்கரையில் விதிக்கப்படும் கட்டணம் குறித்து எழுந்த குறைகூறல்களுக்கு விளக்கம் அளித்த நடராஜா, "ஆலய வளாகத்திற்கு வெளியே முடி காணிக்கை உட்பட அனைத்திற்கும் மற்றவர்கள் விதிக்கும் கட்டணத்திற்கு தேவஸ்தானம் பொறுப்பேற்க முடியாதென்றும் ஆலய நிருவாகத்தைப் பொறுத்தவரை காவடிக்கும் பால்குடத்திற்கும் நியாயமான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். தவிர, பக்தர்களுக்கு ஏதும் குறை இருந்தால், அதைப்பற்றி ஆலய நிருவாகத்துடன் பேசுவதைத் தவிர்த்துவிட்டு சமூக வலைத்தளத்தில் காணொளி வெளியிடுவது பொருத்தமல்ல என்றார்.

பத்துமலை வளாகத்தில் மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதாக-வும் அடுத்த ஆண்டு தைப்பூச விழாவின்போது சிறப்பான மாற்றங்களைக் காண்பீர்கள் என்றும் செய்தியாளர்களிடம் தெரிவிக்கப்பட்டது.







தைப்பூச விழா, முருகக் கடவுக்குரிய வழிபாடு என்பதால், முருகன் தொடர்பான அலங்காரக் காவடிகளை மட்டும் பக்தர்கள் ஏந்த வேண்டும் என்றும் பொருத்தமில்லாத வகையில் சுருட்டு - சாட்டையுடன் வரும் காவடிகள் தடைசெய்யப்படும் என்றும் தெரிவித்தார். ஒருசிலர் ஆன்மிகத் தெளிவில்லாமல் அனுமன்-கிருஷ்ணர் உருவம் பொறித்த காவடிகளை பஜனைப் பாடலுடன் சுமந்து வருவதையும் ஆண்டுதோறும் காணமுடிகிறது. ஒலிபெருக்கியைப் பயன்படுத்தும் காவடித் தரப்பினர் சீரான வகையில் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆலய வளாகத் தூய்மைக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் குப்பைகளை கண்ட இடத்த வீச வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



இந்த ஆண்டு அருள்மிகு மாரியம்மன் தேவஸ்தானத்தின் சார்பில் அன்னதானம் செய்யப்படும் பிப்ரவரி 4-ஆம் நாள் முன்னிரவில் பக்தி இன்னிசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்ற விவரமும் தெரிவிக்கப்பட்டது் தைப்பூச விழாவிற்கு வரும் பக்தர்களும் பொதுமக்களும் பாரம்பரிய ஆடையுடன் வரவேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிமிற்கு அழைப்பு கொடுக்கப்பட்டு உள்ளதால், அவர் கலந்து கொள்ள அதிக வாய்ப்புள்ளது என்ற தகவலையும் நடராஜா தெரிவித்தார்.

இந்த செய்தியாளர்க் கூட்டத்தில் மலேசிய இந்து சங்கத் தலைவர் "சிவநெறி செம்மல்" தங்க கணேசன், செந்தோசா தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முனைவர் ஜி. குணராஜ் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**


உங்கள் திறமைக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது

## வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்!

எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி - 2023



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள். இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் | -30,000. |
| இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -25,000. |
| மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -20,000. |
| நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -15,000. |
| ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | -10,000. |
| 10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா | -5,000. |

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் *(Unicode and Word)* அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது. மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31.03.2023

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல் : **kurufanclub@gmail.com** இணையம் : **kurunovelstory.blogspot.com**

<https://canadiantamilsliterature.blogspot.com/>

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிர்க்குழுக்களிலும்; (whatsapp) பகிர்ந்து உதவுங்கள்.

நன்றி!

**சுலோச்சனா அருண்,**
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1034



## தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோயில்
### திருகோணமலை

"குலம் பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோடு இசைந்திலேன் நடுவேநின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈயமாட்டேன்
ஏன்செய்வான் தோன்றினேன் ஏழையேனே."

பாலம்போட்டாறு என்னும் இடம், திருகோணமலையிலிருந்து பதினாறு கிலோமீற்றர் தூரத்தில் காணப்படுகின்றது. இங்கு வருடமொருமுறை பொங்கல்பெருவிழா வெகு சிறப்பாக நடைபெறும். பாலம்போட்டாறு பத்தினிஅம்மன் கோவிலிலுள்ள எழுந்தருளி அம்பாளைப் பாதுகாப்பின் நிமித்தம், தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோவிலில் வைத்திருப்பார்கள். வைகாசித் திங்களன்று மங்களவாத்தியங்களோடு பத்தினியம்மனை எழுந்தருளச் செய்து, பாலம்போட்டாற்றுக் கோவிலுக்கு எழுந்தருளச் செய்து பொங்கல் பூசைகள் செய்வார்கள். மறுநாள் மீண்டும் பாலம்போட்டாறு எழுந்தருளி அம்மனை, ஆதிகோணேசர் ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்வார்கள். வருடாவருடம் இந்நிகழ்வு வெகு கோலாகலமாக நடைபெற்று வருகின்றது. தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில், ஸ்நபன மண்டபத்தில் சிவகாமியம்பாள் சமேத நடராஜப்பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். ஆதிகோணைநாதருக்குத் தனிக் கோவில் காணப்படுகின்றது. வைரவர், நாகதம்பிரான் ஆகியோரும் இங்கு காணப்படுகின்றனர்.

இவ்வாலயத்தில் ஆனி உத்தரத்தில் கொடியேறிப் பதினெட்டுநாட்கள் திருவிழா விமரிசையாக நடைபெறும். ஆடியமாவாசையன்று சுவாமி, மகாவலிகங்கை முகத்துவாரத்திற்குச் சென்று தீர்த்தமாடுவார். இவ்வாறு தீர்தமாடச் செல்லும்பொழுது, அருள்மிகு ஆலங்கேணி விநாயகர் ஆலயத்தில் தங்கி இளைப்பாறிச் சென்று, பின்னரே கங்கைத்துறையில் தீர்த்தமாடும் வழமை காணப்படுகின்றது. கங்கைத் துறையிலே நடைபெறும் தீர்த்தததைக் காண, பல கிராமங்களிலிருந்தும் மக்கள் திரளாக வந்து கூடுவர். இவ்வாறு கூடும் மக்கள், கடற்கரையோரமாகவுள்ள பரந்த மணற்பரப்பிலே தங்கியிருப்பார்கள். இக்காலத்தில் இவ்விடத்திலுள்ள சிறிய கோவிலொன்றில் திருக்கரசைப் புராணப்படிப்பு நடைபெறும். கோவிலுக்கருகில் அமைக்கப்பட்ட மேடையில் சமய கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும். அதிகாலையில் கங்கைச் சங்கமத்தில் சுவாமி தீர்த்தமாடி, ஆலங்கேணியூடாகத் தம்பலகாமத்தைச் சென்றடைவார். இவ்வாலய மகோற்சவத்தின்போது கதிர்காமசுவாமி உற்சவமும், சூகரவேட்டைத் தூதும் விசேடமான விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. அத்தோடு விசேட திருநாள்களில் பூசைகள் விமரிசையாக நடைபெறும். கௌரிவிரதம், கந்தசஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி, சித்திராபௌர்ணமி, திருவெம்பாவை முதலியனவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தினமும் மூன்று முறை நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயத்திலே நடைபெறும் நடைமுறைகளை அறிவதற்கு ஆதாரமாக இருப்பது, கோணேசர் கல்வெட்டாகும். கோணேசர் கல்வெட்டு கவிராசரால் இயற்றப்பட்டதாகும். வைத்திலிங்கதேசிகரால் வெளியிடப்பட்ட கோணேசர் கல்வெட்டுப் பிரதியில் 58 பாடல்கள் உள்ளன. திருகோணமலைத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவராக விளங்கிய அகிலேசபிள்ளை அவர்களின் மகன், திரு. அ. அழகக்கோன் பிரசுரித்த பிரதியில் 60 பாடல்கள் காணப்படுகின்றன. கோணேசர் கல்வெட்டின் சரியான விடயங்களை அறிவதற்குப் பழைய ஏட்டுச்சுவடிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்து தெளிவது, இன்றைய காலகட்டத்தின் தேவையாகக் கருதலாம். கோணேசர் கல்வெட்டை ஆராய்வதன் மூலம், கோணேசர் ஆலயத்திலே நிகழ்ந்த வழிபாட்டு முறைகள், மற்றும் கோயிற்றொழும்பு செய்வோர்பற்றியும், அவர்களுக்கென வகுக்கப்பட்ட கடமைகளையும், அக்கால சமூக அமைப்பினையும் தெரிந்துகொள்ள வாய்ப்புண்டு.

கி.பி 1624 ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயம், ஏறக்குறைய 339 ஆண்டுகளாக அழிக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் மக்கள் கோணேஸ்வரப்பெருமானைத் தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயத்திற்குச் சென்று தரிசித்து வந்துள்ளனர். இந்நிலயில் கோணேசர் கல்வெட்டிலே கூறப்பட்ட தொழும்புப்பணிகள் தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் முறையாகப் பேணப்பட்டு வருகின்றது. குளக்கோட்டு மன்னனால் திருக்கோணேஸ்வர ஆலயத்தொழும்புகளுக்காகக் கொண்டுவரப்பட்ட குடிமக்களின் பரம்பரைகள் தொடர்ந்தும் தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோயிலில் தொண்டாற்றி வருகின்றனர். கோணேசர் கல்வெட்டிலே ஆலயத் தொண்டிற்குரிய பல அம்சங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் பாசுபதர், தானத்தார், வரிப்பத்தார் போன்ற மூன்று அம்சங்களைத் தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயம் பேணிவருகின்றது. குளக்கோட்டு மன்னனால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழும்பாளர்களில் இவர்கள் பணி முக்கியமானது.

பாசுபதர் எனப்படுவோர் ஆகமமுறைப்படி பூசை செய்பவர்களாகக் காணப்பட்டுள்ளனர். குளக்கோட்டன், பாசுபதர்களைக் கோயிலுக்குப் பூசகர்களாக நியமித்தான். பாசுபதர் என்போர் பாசுபத சமயத்தோராவர். பாசுபதரை மயேச்சுரர் என்றும் அழைப்பர். இவர்கள் சிவலிங்க வழிபாட்டை மேற்கொண்டோராகக் காணப்பட்டனர். நகுலேச பாசுபதமே வீரசைவம் என்ற கருத்தும் நிலவுகின்றது குளக்கோட்டு மன்னன், திருக்கோணேசர் ஆலயத்தில் தொழும்பு செய்வதற்கு, மருங்கூரிலிருந்து முப்பது குடிகளைக் கொண்டுவந்து திருகோணமலை நகரில் குடியேற்றினான். இம் முப்பது குடியினரையும் தானத்தார் என அழைப்பர். இவர்களுக்கு மூவகையான கடமைகள் வகுக்கப்பட்டுள்ளன. இறைவன் முன் ஆலாத்தி எடுத்தல், நடனமாடுதல், பன்றி குத்தல் போன்றவை இவர்களது கடமைகளாகக் காணப்பட்டது. வரிப்பத்தார் எனப்படுவோர், பட்டாடை கொய்தல், கட்டல், புஷ்பபத்திரமெடுத்தல், விளக்கேற்றல், தளிசைத்தட்டு விளக்குதல், தீர்த்தம் எடுத்தல், நெல்லுக்குற்றல், சாணிமெழுகல், கொடியேற்றல், இறக்கல், சந்தணம் அரைத்துக்கொடுத்தல், முதலிய ஆலயப்பணிகள் இவர்கள் செய்ய வேண்டிய பணிகளாகக் காணப்பட்டது. நீர் பாயும் பள்ளவெளி நிலம் இவர்களுக்கு நிவந்தமாகக் கொடுக்கப்பட்டது.

- வளரும்...



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

## 03-02-2023 வெள்ளி தொடக்கம் 09-02-2023 வியாழன் வரையும்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். ஞாபக மறதி ஏற்படும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். சுபச்செலவு அதிகரிக்கும். நட்டமில்லாத திட்டங்கள் நிறைவேறும். பூமியால் நன்மை உண்டு. முயற்சிகள் பலன் கொடுக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். கருத்து வேறுபாடுகள் விலகும். புத்தி சாதுர்யம் கூடும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறுகள் அகலும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். பண தேவைகள் பூர்த்தியாகும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். மனஅமைதி அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். வேண்டாத நபர்கள் விலகுவர். அயல்நாட்டுப் பயணம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 3,7,1,2
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,K




**ரிஷபம்:** துணிவோடு செயல்படும் வாரம். சந்தோஷம் அலை மோதும். களைகட்டும் மாற்றங்களை சந்திப்பீர்கள். உயர் பதவி யோகமுண்டு. சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். பொருள் வரவு ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். பணியில் பாராட்டு கிட்டும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். புதிய சிந்தனை உதயமாகும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். உள்ளம் மகிழும். உதவிகள் குவியும். இரகசியம் காப்பது நல்லது. முயற்சிகளில் வளர்ச்சி அடையும். தொட்ட காரியம் ஜெயமாகும். இல்லத்தில் அமைதி கூடும். தேகப்பலன் கூடும். கலைஞர்களுக்கு சாதகமான நாள். வியாபாரம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்பொலிவு கூடும். கல்வியில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். இல்லத்தில் அமைதி பெருகும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். வங்கி சேமிப்பு உயரும். விரக்திகள் மறையும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். ஆபத்துக்கள் விலகும். கட்டிடத் தொழில் ஒப்பந்தங்கள் குவியும். பயண முயற்சி பலன் தரும். சகோதர வழியில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 8,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,H




**மிதுனம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். தேகப்பலம் கூடும். திருமண தீபம் சுடர் விடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கடன் சுமை குறையும். பணப்புழக்கம் சரளமாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செல்வாக்கு உயரும். நோய் அகலும். எதிர்ப்புகள் விலகும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். புதிய நட்பு உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல்நிலையில் அக்கறை தேவை. முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். கர்மவினைகள் அகலும். ஏற்றமான தருணங்கள் அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 4,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**கடகம்:** கண்ணியமான புண்ணியம் சேரும் வாரம். தனவரவு பெருகும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். தெளிவான முடிவுகளில் திருப்பம் ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காரியம் கைகூடும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். பணவரவு திருப்தி தரும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான நாள். பிரபல்ய ஆசை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப்பெண்களின் எண்ணம் ஈடேறும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பதவி உயர்வு கிட்டும். கலைத்தொழில் லாபம் தரும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பாதகமான சூழ்நிலை விலகும். பெருமிதம் நிறைந்த காலம். மருத்துவச் செலவு குறையும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு கௌரவம் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திதி தேவதை, அதிர்ஷ்ட எண்: 2,4,8,6
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,A




**சிம்மம்:** ஆசைப்பட்ட பொருள்கள் சேரும் வாரம். சுப விரயம் ஏற்படும். கல்வியால் பெருமை சேரும். தாய் வழி ஆதரவு பெருகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பாகப்பிரிவினை சுமூகமாகும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். உறவினர்கள் வருகையில் உள்ளம் மகிழும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வெற்றியும் வெகுமதியும் கூடும். நூதன பொருள் சேர்க்கையுண்டு. பூமியால் நன்மை உண்டு. ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். கல்வியில் ஆர்வம் கூடும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். எண்ணங்கள் வண்ணமயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்ட தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**கன்னி:** நல்லவங்களோட வாழ்த்து கிடைக்கும் வாரம். கௌரவம் அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு பெருகும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனைவாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். ஊக்கம் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். வீண் வம்பு அகலும். நினைத்தது நிறைவேறும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர்கள். மங்கள் நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர்களின் சந்திப்பு கிட்டும். கணினிதுறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அழகு நாச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,7,0,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,G




**துலாம்:** போட்டிகள் உருவாகும் வாரம். நல்லோர்கள் சந்திப்பு கிட்டும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனை காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கணவன் மனைவி உறவில் ஒற்றுமை வளரும். கடன் கச்சைகள் தீரும். இல்லத்தில் மகிழ்ச்சியும், மன அமைதியும் கிட்டும். பாக்கெட்டில் காசும் கரையாது. பந்தாவும் குறையாது. தொட்டது துலங்கும். செய்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பளபாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். பணிவான பேச்சுகள் அவசியம். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பித்ருக்கள் சாபம் நீங்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். சேமிப்பு உயரும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,7,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**விருச்சிகம்:** பயணம் தவிர்க்கும் வாரம். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சீராகும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளி போடுங்கள். திருமணமாகாத மங்கையருக்கு திருமணம் தள்ளிப்போகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். பணிவான பேச்சுக்கள் தேவை. இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிடைக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். கணவன், மனைவி உறவு இனிக்கும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கௌரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். குலதெய்வ வழிபாடு மேன்மைகள் தரும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கை துளிர்விடும். செய்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 2,4,6,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,F




**தனுசு:** நன்மைகள் பெருகும் வாரம். பண நடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளைக் கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கை உண்டு. அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். ஆபரணச்சேர்க்கை உண்டு. மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பாராட்டுக்கள் சேரும். ஆசைகள் நிறைவேறும். வரன் வாயில் தேடி வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். புதிய சொத்துக்கள் சேரும். விலகி சென்றவர் விரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். மருத்துவச் செலவு குறையும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. எண்ணங்கள் பலிதமாகும். தாய்வழி தகராறு குறையும். கனவுகள் பலிதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். பேச்சில் நிதானம் தேவை. கடன் சுமை குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 4,8,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,J




**மகரம்:** தொழில்போட்டி மறையும் வாரம். தாய்வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும் அற்புதமான காலம். விளையாட்டுத்துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். விரயங்கள் அதிகமாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவப் பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேர்க்கை உண்டு. பட்டம் பதவி வந்து சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கமிஷன் தொழில் லாபம் தரும். கடன் தொல்லை தீரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T

(தொடர்ச்சி 30 பக்கம்)

# அன்பின் தொனி - 679

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே -** Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு -** Worship your Creator

**இரக்கக் கொலை -** Mercy killing (Euthanasia)

உலகத்திலே என்றுமே கேள்விப்படாத, நடக்காத நடக்கக்கூடாத புதிய புதிய, அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், நடைமுறைகளையும் கல்விமான்கள் மேதைகள் என்று சொல்லக்கூடியவர்கள், நாளுக்கு நாள் அறிமுகப்படுத்து வதையும், கடவுளுக்குப் பிரியமில்லாததும், சத்தியத்திற்கு முரணானதுமான இந்த அறிவுரைகளைச் சிலர் நியாயப்படுத்தி அவற்றை அங்கிகரித்தும் செயற்படுத்தியும் வருகிறார்கள். அப்படியான செயற்பாடுகளில் ஒன்றாக "இரக்கக் கொலை" விளங்குகிறது.

ஒருவர் நோயினால் பாதிக்கப்பட்டு சகல விதமான வைத்தியமும் பலனளிக்காத நிலையில், வைத்தியர்களாலும் கைவிடப்பட்டு, இனி மரணம்தான் என்ற நிலையில் அவர் இருக்கும்போது, நோயின் பாதிப்பினால் சரீரத்திலும், மன நிலையிலும் தவிக்கும் நபருக்கு, இன்னுமொருவர் அவர்மேல் இரங்கி அவர் மரிப்பதினால் அவரது தாங்கமுடியாத வேதனையிலிருந்து விடுபட அவருக்கு உதவி செய்வதாகக் கருதி, மேலும் எந்தவித வைத்திய உதவிகளைச் செய்யாதபடி, எந்த வேதனையுமின்றி அவர் மரிப்பதற்கு இவர் உதவி செய்கின்றார். சில சந்தற்பங்களில் சம்பத்தப்பட்ட நோயாளியின் குடும்ப அங்கத்தவர்களுடைய அனுமதியோடும் விருப்பத்தோடும் இந்தக் கொலையைச் செய்கின்றனர். இதை இரக்கக் கொலை என்று நியாயப்படுத்தி அதையும் சட்ட பூர்வமாக அனுமதிக்க வேண்டுமென்று வாதடி, சில நாடு களில் அதில் வெற்றியும் கண்டுள்ளனர். இதை கொலை என்பதா? தற்கொலை என்பதா?

கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத் தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். **- மத்தேயு 5: 21**

ஒருவருடைய சரீர வேதனையில், அவர் அதைத் தாங்கமுடியாது தவிக்கும்போது, தான் மரித்தால் அந்த வேதனைக்கு முடிவு வருமென்று சிந்திக்கும்போது அவருக்கு தேவ வார்த்தைகள்மூலம் ஆறுதல்கூறி, அவரை ஆற்றித் தேற்றி ஜெபித்து, தேவனுடைய பாதத்தில் கண்ணீரோடு விண்ணப்பம் செய்து விடுதலை பெற உதவி செய்வதுதான் எமது கடமை. அதை விட்டு, அவர் இருக்கும் மயக்க நிலையில், இனி அவருக்கு அறிவே வராது என்று நாம் அவரை மரிக்கவைப் பதோ, அல்லது நாமும் அவருடைய குடும்ப அங்கத்தவருடன் சேர்ந்து அவர் அவரது வேதனையில் மரிப்பதுதான் நலம் என்ற சிந்தனைக்கு அனுதாபம் காட்டி, அவருடைய வேதனைகட்கு அவர் மரிப்பதுதான் நலமென எடுத்த முடிவு சரிதான் என்று, இரக்கம் என்ற பெயரில் "இரக்கக் கொலை" செய்ய உதவுவது எவ்வளவு பாவமான செயல் என்பதைச் சிந்திப்பதில்லை.

கிறிஸ்தவர்களாகிய நாம் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது, அதை எதிர்த்து நிற்க வேண்டும். ஆண்டவராகிய இயேசுதாமே இவ்வுலகில் இருக்கும்போது மரணத்தருவாயில் இருந்தோரையும், மரித்துப்போனவர்களையும், மரித்து நாற்றமெடுத்த சடலத்தையுமே தமது பிதாவினிடத்தில் வேண்டுதல் விண்ணப்பம் ஏறெடுத்து மீண்டும் அவர்களை உயிர்ப்பித்தார். மேலும் பிணியாளரை குணமாக்கும் அதிகாரத்தைம் வல்லமையையும் தமது சீஷர்களுக்குக் கொடுத்த தோடு, இன்று அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்ற எமக்கும் அந்த வரத்தை தந்திருக்கிறார்.

அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத்துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். **- மத்தேயு 10: 1**

போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள், இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். **- மத்தேயு 10: 7-8**

அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார். **- லூக்கா 9: 1-2**

பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள், சர்ப்பங்களை எடுப்பார்கள், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது, வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். **- மாற்கு 16: 15-18**

ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே அவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். **- 1 கொரிந்தியர் 12: 7-11**

**தொடரும்...**


SRI MARIYAMMA ASTROLOGER & JOTHIDAM
World Famous Indian Astrologer



Pandit: Guruji Arjunraj
Specialist in palm, Face & Photo, Horoscope Reading
Most Powerful Spiritualist from India
ARE YOUR DEPRESSED LONELY?
I will remove and destroy all Bad Luck, Withcraft, Obeya, Jado, Voodo & Protect your From all evils.
416-722-9498



All RELIGIONS WELCOME! & PRIVATE AND CONFIDENTAL

OPEN7 DAYS
9AM - 8PM

I will read your past, present and future by reading your palm and face. We attained this study since 300 years in our family from fathers and forefathers. I will read the influence of effects of sun moon stars and planets on its events on your life. Please try you visit me regarding your health, family, Business, Job, Child, Astrology Vasthu,Dhrusti, Enemy,Court, Marriage, Love, Education and detailed reading and Visa all matters. I can solve it if your have any difficulty or struggle in your life then your life will be successful and bright. Please meet me once and know your readings.

- Name & Date Birth
- Hand Reading
- Past, Present and Future
- Overseas & Travel
- Marriage, Family Matters
- Husband & wife
- Children Education
- Children Mistake
- Property Court
- Enemy Problem

- Face Reading
- Horoscope
- Education & Work
- Love & Money Problem
- Divorce
- Sexual Problem
- Health & Business
- Jealousy & Black Magic
- Evill Affection
- Drinking Problem

MEET ME ONCE & SEE YOUR LIFE CHANGE 100%, REMOVAL OF BLACK MAGIC & GIVE PROTECTION

2607 Eglinton Ave, East Scarborough, ON M1K 2S2
(Eraa Super Market Upstairs, Unit #6) (Brimley & Eglinton)

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** இல்லம் தேடி வாய்ப்பு வரும் வாரம். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்யம் கூடும். வியாபார லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர பயணம் லாபம் தரும். புகழ்ச்சி அதிகரிக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்க்கை தரம் உயரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பொறுப்புகள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 6,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,R




**மீனம்:** தங்க நகைககள் சேரும் வாரம். உடல்நலனில் அக்கறை தேவை. செல்வாக்கு உயரும். மாணவர்களிடம் எச்சரிகை தேவை. நல்ல செய்தி நாடி வரும். முயற்சிகள் வளர்ச்சி அடையும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். திட்டமிட்ட காரியம் வெற்றியாகும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் பெருகும். தெய்வப்பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். மற்றவர்களால் தொல்லை உண்டு. நீண்ட நாளைய கனவு நிறைவேறும். லஷ்மி வழிபாடு மாற்றம் தரும். சகோதர ஒற்றுமை பலப்படும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,A

# கடந்தவையும் கடப்பவையும்

## (44)

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தேழு
ஆயுள்வரை மறவாத காலமது

எத்தனை வடிவத்து மரணங்கள் - அத்தனையும்
சுற்றிவர நடந்த காலம் - பலமுறை

ஓடியும் ஒளிந்தும் காத்த உயிர்கள் - மிக
வாடிய காலம் எண்பத்தேழு - ஏன்?

பொருளாதார இறுக்கம் 'கூட்டுத் தண்டனையாக
'விடுதலை நடவடிக்கை' ஒப்பறேசன் லிபரேசனாக

பொருளாதாரத் தடையால் வாடியபோதும்
நொருங்கவில்லை மனங்கள் - ஆனால்

நொருக்கினார்கள் புல்டோசர்களால் இருப்பிடங்களை அழித்தும்
பரந்துபட்ட வாழ்விடங்களைச் சுருக்கியும் - தெருவில்

இழுத்து வந்து உதைத்தும்
அழைத்துப் போய் குண்டு வைத்தும்

சுற்றிவளைத்தே வெட்டியும் சுட்டும் - எஞ்சியோரைப்
கட்டிய விலங்கொடு கப்பலில் ஏற்றியும் - இத்தனை நடத்தியும் - அங்கு

புதுமையே பிறந்தது அன்றில் இருந்து
கரும் புகையும் எழுந்தது - அதுவும்

கொடிய மன வேதனை தந்தது.
அடியொடு போகட்டும் அவலம் - என

எழுதாத ஒப்பந்தம் நிறைவேறவும் - விட்டுத்
தொலையாத ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்படவும் - என

காந்தியின் தேசத்துக் கனவான்கள்
தேர்ந்து நல்ல முடிவொன்றைத் தருவாரென - தான்

தனியாகத் தேர்ந்தெடுத்தார் அகிம்சை வழிப் போரொன்றை - அயல் நாட்டுப்
பெரியாளும் வந்து போனார் எதுவுமே பேசாமல்

மக்கள் ஆட்சியில் பெரியநாடு - அன்று
அக்கறை கொள்ளாது இருந்ததனால் - தன்

மக்களின் முன்னிலையி'ல் ஊணின்றி
நீர் ஆகாரம் தானுமின்றி

உடல் தளர்ந்து வலுவிழந்து
கடலெனவே மக்கள் அலைமோத

நல்லூர்க் கந்தனின் வீதியிலே
மெள்ள மெள்ளமாய் உயிர் நீத்த - அந்த

கனவானின் உயிர்க் கொடையை நினைக்கையிலே - மிக
கனமாகும் உள்ளங்கள் வேதனையால்

அத்துடன் நின்றதா பெரியவலி

புரட்டாதியில் இதுவென்றால் ஐப்பசியில்
நடந்ததுதான் பன்னிருவரின் பரிதாபக் கதை

அப்போ கார்த்திகையும் மார்கழியும்?
எப்பொழுதும் கண்டிராத பேரழிவுக் காலமது

உத்தமராய் வந்தவர்கள் உவந்தளித்த
ஒப்பரேசன் பவான் தொடர்ந்த காலம் (தொடரும்)

-- உமா மோகன் - Montreal- Canada --





SUBRA
SUBRA MORTGAGE FINANCIAL
MORTGAGE SOLUTIONS
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages | Purchase | Refinance | Renewal | Switches | Equity lind of Credit
Pre-approvals | Self-employed | Multi-rental properties | New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பலசரக்குகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930
5 MCMURCHY AVE N. UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895
3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1400 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 3, 2023

# "ஊடகத்துறை படுகொலைகள்" சர்வதேச விசாரணை வேண்டும்.

## வி.தேவராஜ் — மூத்த ஊடகவியலாளர்



"உண்மைகளை" சாகடிப்பதற்காகவே ஊடகவியலாளர்கள் படுகொலை!

• தமிழ் மக்களின் அபிலாஷ‘குறித்து பேசுவது இனவாதமாகுமா?

இலங்கையில் ஊடகத்துறை இன மத மொழி ரீதியாக பிரிந்து கிடக்கின்றது.இந்த பிளவு பிரிவு என்பன இன்று நேற்று உருவாகியதல்ல. சுமார் 100 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் பிளவுகளும் முரண்பாடுகளும் கோலோச்சி வருகின்றன. துரதி‘டவசமாக இந்த முரண்பாடுகளும் பிளவுகளும் சாகா வரம் பெற்றதாக ஊடகத்துறையையும் ஊடகவியலாளர்களையும் தின்று கொண்டிருக்கின்றது. (உள்ளே 14ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# மனோ சாட்சி — மனம் திறக்கிறார் மனோ கணேசன்

## ( பிரத்தியேகத் தொடர் — பகுதி 2)

## ஒரு மனித உரிமை போராளி உருவாகிறான்



எனக்கு மனித உரிமைகளை பிடிக்கும். என் உரிமைகளை ஒருபோதும் விட்டு கொடுக்க நான் இசையேன். அதேபோல், அடுத்தவர் உரிமைகளை தட்டி பறிக்கவும் நான் இசையேன். இதுதானே மனித உரிமை என்பதன் எளிமை விளக்கம்?

நான் ஒன்றும் மனித உரிமையானாக பிறக்கவில்லை. யாரும் அப்படி பிறப்பதில்லைதான். ஆனால், நம்மில் சிலர் தம்மை அப்படி நினைக்கிறார்கள். மனித உரிமை பற்றிய அக்கறை, இது பற்றிய உலகளாவிய கோட்பாடுகளை பற்றிய அறிவு, என்பவை வேறு. களத்தில் நின்று போராடுவது என்பது வேறு.

முதலாவது சம்பிரதாய, பெரும்பாலும் சிவில் நிறுவன பணி. இரண்டாவது ஜனநாயக களப்போராளி. நாம் இரண்டாம் ரகம்.
(உள்ளே 10ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# ரொறன்ரோ மேயர் ஜோன் ரோரி பிரதி மேயர் ஜெனிபர் மெக்லீவ், கவுன்சிலர் ஜமால் மையர்ஸ் Majestic City Shopping Complex இற்கு விஜயம்

இந்த விஜயத்திற்கான ஏற்பாட்டை கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனமும் **Majestic City Indoor Shopping Complex** நிர்வாகமும் செய்திருந்தன.

அன்றைய தினம் பல மணி நேரம் **Majestic** ஊவைல வர்த்தக வளாகத்தினுள் அமைந்துள்ள தமிழர் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களைச் சந்தித்து உரையாடிய மேயர் குழுவினர் மற்றும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் தேவதாஸ் அவர்கள் மற்றும் சம்மேளனத்தின் சிரேஸ்ட உப தலைவர் அரி அரன் அவர்கள் ஆகியோரும்
(உள்ளே 20ம் பக்கத்தில் தொடர்ச்சி)



# ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியினர் நடத்திய 'தமிழர் மரபுரிமை திங்கள் - முத்தமிழ்க் கலை விழா'



ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியினர் நடத்திய 'தமிழர் மரபுரிமை திங்கள் கொண்டாட்டமாக "முத்தமிழ்க் கலை விழா' 29-01-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

ஆரம்பத்தில் அழைக்கப்பெற்ற சிறப்பு விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றி வைத்து விழாவை தொடக்கினார்கள்.
(உள்ளே 21ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# நாடு கடந்த தமிழீழ அரசின் கனடியப் பிரிவினர் நடத்திய 'தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்'



உலகின் பல நாடுகளிலும் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கிவரும் நாடு கடந் தமிழீழ அரசாங்கத்தின் கனடியப் பிரிவினர் நடத்திய 'தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்' கடந்த வெள்ளிக்கிழமையன்று ஸ்காபுறோவில் நடைபெற்றது.

மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற இந்த விழா-வில் மட்டுமே கனடாவில் தமிழர் தேசியக் கொடியும் கனடாவின் தேசியக் கொடியும் இணையாக ஏற்றப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. குலை நிகழ்ச்சிகள் மற்றும் உரைகள் இடம்பெற்றன. கனடாவில் தமிழர் மரபுரிமை மாதத்தை கொண்டாட வேண்டும் என்ற சிந்தனையை தோற்றுவித்த நீதன் சண்முகராஜா மற்றும் முன்னாள் அமைச்சர் நிமால் விநாயகமூர்த்தி உட்பட சிலர் உரையாற்றினர்.

இங்கே காணப்படும் படத்தில் நாடு கடந் தமிழீழ அரசாங்கத்தின் கனடியப் பிரிவின் உறுப்பினர்கள் ஒன்றாகக் கூடி மரபுரிமை மாதத்தின் மகிமையைக் கொண்டாடுவதைக் காணலாம்.

# "மக்கள் திலகம்" எம். ஜி. ராமச்சந்திரனும், கனடா "நிவாரணம்" செந்தில் குமரனும்



அன்று அள்ளிக் கொடுத்து அடுத்தவரை மகிழ்வித்து அரசியலில் உயர்ந்தவர் "மக்கள் திலகம்" எம். ஜி. ராமச்சந்திரன்... இன்று மக்களின் ஆதரவோடும் தனது இசையார்வத்தோடும் பொருள் தேடி நோயாளர்களுக்கு உயிர் கொடுத்து வருபவர் கனடா "நிவாரணம்" செந்தில் குமரன்..

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் இலங்கை வாழ் இருதய நோயாளர்களின் உயிர் காக்க உதவித் தொகை கேட்ட "மக்கள் திலகமாகவே" மாறிவிட்ட செந்தில் குமரன்.. (உள்ளே 18ம் பக்கத்தில் தொடர்ச்சி)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136